# கல்கி



KALKI பிப்ரவரி 18, 1951 4 அணா

# நான் லக்ஸ் டாய்லெட் சோப்பை

உபயோகிக்கிறேன் என்று *மங்களம்*


சொல்லுகிறாள்.




இனிய மணத்துடன் கூடிய
இந்த வெண்மையானதும்
சுத்தமானதுமான சோப்
உங்கள் சருமத்தை
வசீகரமாகச் செய்யும்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 276-172 TM


ஜுபிடரின்
மர்மயோகி
(ADULTS ONLY)
சதிகாரி ஒருத்தி
சத்தியவதியை ஏவினாள்...
சட்டத்தை எதிர்த்த
கொள்ளைக்காரனைப்பிடிக்க..
? ? ?
சென்னை....
சித்ரா
ராஜகுமாரி
மற்றும் ராஜதானி பூராவும்
நடைபெறுகிறது.....
ஏ.எஸ்.ஏ.சாமி

# புது வருஷத்திய புதிய விற்பனை!

(பிளாஸ்டிக் ஸ்ட்ராப் உபயோகிப்பதன் மூலம் ஏற்படும் கெடுதல்களை முன்னிட்டு) முன்பு இருந்த பழைய விலையிலேயே விற்கப்படும் கடிகாரங்கள் ஒவ்வொன்றுடனும் ஒரு நவீன கடிகாரத்திற் கேற்றபடி அட்ஜஸ்ட் செய்யும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், க்ரோமியம் அல்லது ரோல்டு கோல்டு செயினும் இலவசமாக அளிக்கப்படும். 5, 7 ஜூவல் பதித்த ஸ்விஸ் கடிகாரங்கள் நான்கு வருஷங்களுக்கும் 15, 17 ஜூவல் பதித்த ஸ்விஸ் கடிகாரங்கள் 7 வருஷ திருப்திகரமான உழைப்பிற்கும் உத்தரவாத முள்ளவை. அழகிய வெல்வெட் பெட்டியில் உத்தரவாத சர்ட்டிபிகேட்டுடன் சப்ளை செய்யப்படும். தபால் செலவு, பாக்கிங், விற்பனை வரி இலவசம்.




## இனாம்

இரண்டு கடிகாரங்களுக்கு ஒரு கவர்ச்சியுள்ள டயரியுடன் பேனா பென்சில் செட்டும், மூன்று கடிகாரங்களுக்கு ஒரு அதிர்ச்சி தாக்காத ரயில்வே டயம் கீப்பரும், ரோல்டு கோல்டு செயினுடன் நல்ல ரேடியம் டயல் ரோல்டு கோல்டு பாக்கெட் வாட்சும் இனாம். நான்கு கடிகாரங்களுக்கு ஒரு அழகிய டபிள் க்ரோமியம் சதுர வடிவ டேபிள் கடிகாரமோ அல்லது ரேடியம் டயலுடன் கூடிய ஸ்விஸ் டிராவலிங் அலாரம் டைம்பீஸோ அளிக்கப்படும். ஒரு நவீன 1951 பிளாஸ்டிக் காலண்டர் ஒவ்வொரு கடிகாரத்துடன் இலவசம்.



ரவுண்டு செண்டர் செகண்ட்
மாற்றியமைக்கக்கூடிய செயினுடன் (லைன் 10½)

| கேட்லாக் நெ. | | ஜுவல்ஸ் | விலை |
|---|---|---|---|
| 601 | க்ரோமியம் ஸ்டீல்பேக் | ஜுவல்ஸ் | 24 |
| 602 | ரோல்டுகோல்டு ஸ்டீல்பேக் | " | 27 |
| 605 | ரோல்டுகோல்டு ஸ்டீல்பேக் | 7 | 44 |
| 672 | க்ரோமியம் ஸ்டீல்பேக் | 15 | 50 |
| 673 | ரோல்டுகோல்டு ஸ்டீல்பேக் | 15 | 55 |
| 676 | ரோல்டுகோல்டு ஸ்டீல்பேக் | 17 | 70 |




ரவுண்டு சிறிய வடிவம்
மாற்றியமைக்கக்கூடிய செயினுடன் (லைன் 8¾)

| கேட்லாக் நெ. | | ஜுவல்ஸ் | விலை |
|---|---|---|---|
| 613 | க்ரோமியம் ஸ்டீல்பேக் | 5 | 28 |
| 614 | ரோல்டுகோல்டு ஸ்டீல்பேக் | 5 | 31 |
| 615 | முழு ரோல்டுகோல்டு கேஸ் | 5 | 33 |
| 616 | க்ரோமியம் ஸ்டீல்பேக் | 7 | 33 |
| 617 | ரோல்டுகோல்டு ஸ்டீல்பேக் | 7 | 37 |
| 679 | ரோல்டுகோல்டு ஸ்டீல்பேக் | 15 | 60 |
| 680 | 20 மைக்ரான்ஸ் தங்க கேஸ் | 15 | 70 |



வாட்டர் ப்ரூப், ஷாக் ப்ரூப்,
செண்டர் செகண்ட், ரேடியம் டயல் (லைன் 10½)


| | | | |
|---|---|---|---|
| 723 | க்ரோமியம் ஸ்டீல்பேக் கேஸ் | 15 | 60 |
| 724 | ரோல்டுகோல்டு ஸ்டீல்பேக் | 15 | 65 |
| 725 | 20 மைக்ரான்ஸ் தங்க கேஸ் | 15 | 75 |
| 726 | க்ரோமியம் ஸ்டீல்பேக் | 17 | 80 |
| 727 | ரோல்டுகோல்டு ஸ்டீல்பேக் | 17 | 90 |
| 728 | 20 மைக்ரான்ஸ் தங்க கேஸ் | 17 | 105 |



நீண்ட சதுர வடிவம்
மாற்றியமைக்கக்கூடிய செயினுடன் (லைன் 7¾)

| | | | |
|---|---|---|---|
| 635 | க்ரோமியம் ஸ்டீல்பேக் | 5 | 35 |
| 636 | ரோல்டுகோல்டு ஸ்டீல்பேக் | 5 | 38 |
| 638 | க்ரோமியம் ஸ்டீல்பேக் | 7 | 40 |
| 640 | முழு ரோல்டுகோல்டு கேஸ் | 7 | 46 |
| 700 | க்ரோமியம் ஸ்டீல்பேக் | 15 | 55 |
| 701 | ரோல்டுகோல்டு ஸ்டீல்பேக் | 15 | 60 |
| 704 | ரோல்டுகோல்டு ஸ்டீல்பேக் | 17 | 80 |

**ASIA WATCH HOUSE** P. B. 3607, BOMBAY-4


Firestone
பயர்ஸ்டோன் எவ்வுபயோகத்திற்கும் உகந்த ஓர் டயர்


எல்லா சரும வியாதிகளுக்கும்
ஜெர்மெக்ஸ்
ரணத்தை ஆற்றும் கிருமிநாசன களிம்பு!
சொறி சிரங்கு
Germex
மருந்தை உபயோகியுங்கள்
எங்கும் கிடைக்கும்.
LG/13
TAMIL


ப்ளாண்டர்ஸ்
ஹை க்ரோன்
நீலகிரித்
தேயிலை
PLANTERS
RED SPECIAL
DIAMOND
BLEND SOUTH INDIAN LEAF TEA
THE PLANTERS COMPANY LTD
நீங்கள்
ரசிக்கக்கூடிய
ருசிக்காக
P.T. - 20 TAM.
The Planters Company, Ltd., Coonoor. Nilgiris, S. India.

நறுமணத்திற்கெல்லாம்
அடிப்படையாயுள்ளது

★ மைசூர் சந்தனத் தைலம் ★

கவர்ன்மெண்ட் சந்தன
ஆயில் பாக்டரி, மைசூர்

S. S. "ரஜூலா"

சென்னை - பினாங்கு - சிங்கப்பூர்

நாகப்பட்டினம் மார்க்கமாக

சென்னை புறப்படும் தேதி - 1951 பிப்ரவரி 27உ
நாகப்பட்டினம் புறப்படும் தேதி - 1951 பிப்ரவரி 28உ

பினாங்கு, சிங்கப்பூருக்கு பிரயாணிகளை ஏற்றிச் செல்லும்
முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பும் பெர்த் இல்லாத இடவசதியும் உண்டு

கார்கோ சாமான்கள்: பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூருக்கு நேரடியாக இறக்குமதி செய்யவும், பாங்காக், ஹாங்காங், ஜப்பான் மற்றும் தூரக் கீழ்த்திசையிலுள்ள இதர ஊர்களுக்கு சிங்கப்பூரில் கப்பல் மாற்றி அனுப்பும்படியும் ஏற்றுக் கொள்ளப்படும்.

சென்னை துறைமுகத்தில் 26-2-51 மாலை நேரம் வரையில் கப்பலேற்ற கார்கோ அங்கீகரிக்கப்படும்


இதர விவரங்களுக்கு தயவு செய்து விண்ணப்பிக்கவும்:

பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

மதுரா கம்பெனி லிமிடெட்
முதல் லைன் பீச் ரோடு,
நாகப்பட்டினம்

ஏஜண்டுகள்: B. I. S. N. கம்பெனி லிமிடெட்


BBZ. 1


STAR OF INDIA
PENCILS
STAR OF INDIA
SERVING INDEPENDENT
INDIA'S
MILLIONS
THE WHOLE OF INDIA
CLAMOURS FOR
STAR OF INDIA★
The Perfect Penc
THE
PRIDE OF
INDIA
THE
MADRAS
PENCIL
FACTORY
3. STRINGER STREET, MADRAS.

# பொன் விழா விற்பனை!

**விசேஷ கவனத்துடன் தயார் செய்யப்பட்டவை ஒவ்வொன்றும் ஐந்து வருட உத்திரவாதம்**

No. 1



Size 6½"

5 ஜூவல் க்ரோம் 32/- ரோல்டுகோல்டு 35/-
7 ,, க்ரோம் 37/- ரோல்டுகோல்டு 40/-
15 ,, க்ரோம் 46/- ரோல்டுகோல்டு 48/-

No. 2



Size 7½"

5 ஜூவல் க்ரோம் 31/- ரோல்டுகோல்டு 35/-
7 ,, க்ரோம் 33/- ரோல்டுகோல்டு 37/-
15 ,, க்ரோம் 45/- ரோல்டுகோல்டு 47/-

No. 3



Size 11"

5 ஜூவல் க்ரோம் 22/- உயர்ரகம் 24/-
ரேடியத்துடன் 24/- செண்.செகண்டு 25/-
வாட்டர் ப்ரூப் 15 ஜூவல் 60/-

No. 4



Size 8½"

5 ஜூவல் க்ரோம் 32/- ரோல்டுகோல்டு 34/-
7 ,, க்ரோம் 34/- ரோல்டுகோல்டு 36/-
15 ,, க்ரோம் 48/- ரோல்டுகோல்டு 56/-

No. 5



Size 6½"

5 ஜூவல் க்ரோம் 24/- உயர்ரகம் 27/-
5 ,, ரோல்டுகோல்டு 30/- உயர்ரகம் 32/-
15 ,, க்ரோம் 45/- உயர்ரகம் 48/-
இம். டைம்பீஸ் 24/- உயர்ரகம்-இம். 25/-
பாக்கெட் வாட்ச் 12/- உயர்ரகம் 15/-

பாக்கிங், போஸ்டேஜ், விற்பனை வரி இலவசம்

**CARONA-WATCH CO,**
**Post Box No. 6729, Calcutta—7**



# உங்கள் காது சரிவரக் கேட்க முடியாது மந்தப் பட்டுள்ளதா?




வருந்தவேண்டாம். நவீனத் தயாரிப்பான "மெய்கோ" கேட்கும் சாதனம் உள்ளது. இச்சாதனம் திருப்திகரமான சேவைக்கு நீண்டகால ஆராய்ச்சியின் பிறகே வெளியிடப் பட்டுள்ளது.

பார்வைக்கு மிகவும் அழகாக இருப்பதுடன் மற்றவர்கள் பேசுவதும் தெளிவாகக் கேட்கும்.

ஆடவர்கள் தங்கள் காதுடன் தெரியா வண்ணமும், பெண்மணிகள் காதணியுடனும் பொருத்திக் கொள்ளலாம்.


**விலை மற்றும் இதர விவரங்களுக்கும் ஆங்கிலத்தில் எழுதவும்**

*

**MODERN RADIO CO.**
**KHALEELI MANSIONS, (K.)**
**35, MOUNT ROAD, MADRAS - 2**

## நிம்மதியாகத் தூங்குங்கள்....
## சுறுசுறுப்பாக எழுங்கள்!






ஒரு
பேவர் - லூபா
உதவியால்

**JAZ**

உங்கள் ஜாஸ் அலாரம் உங்களை நிச்சயம் எழுப்பிவிடும் என்ற நம்பிக்கையுடன் நிம்மதியாகத் தூங்குங்கள். இவ் வுயர்ந்த கடிகாரத்தின் இனிமையான இடைவிடாது நீடித்தெழும் ஸ்வரங்களின் இசைக்கு விழிப்படையுங்கள். நெ. 8445 பிளெயின் டயல் ரூ. 28/- நெ. 8445 ரேடியம் டயல் ரூ. 29/8/- இன்னும் அநேகவித மாடல்களிலும் ரூ. 36/- முதல் 72/- வரை கிடைக்கும். படங்களுடன் கூடிய விவரமான கேட்லாக்கிற்கு எழுதவும்.

★ எல்லா ஜாஸ் டைம்பீஸ்களிலும் பறவை டிரேட் மார்க் இருக்கிறது. பேவர் - லூபா கம்பெனியாரால் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டு அவர்களது ஷோ - ரூமிலும், அத்தாக்ஷி பெற்ற டீலர்கள் வீட்டிலுமே இவைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

FAVRE-LEUBA

பேவர்-லூபா & கோ., லிட்., பம்பாய் & கல்கத்தா

# பொருள் அடக்கம்

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 10
இதழ் 29 | 1951 பிப்ரவரி 18 | விக்ருதி ௵ மாசி ௴ 6௳


| | | |
|---|---|---|
| அந்தகாரம் அகலவில்லை! | ... | 11 |
| பூதம் விழுங்கியது! | ... | 12 |
| ஸ்ரீ ராமமணியாருக்கு ஆதரவு | ... | 13 |
| நியாயந்தானு? | ... | 13 |
| கை இருக்கிறதே! | ... | 14 |
| அக்கப்போர் | ... | 15 |
| .. ......சென்ஸஸ் எடுக்கிறர்! | சாஸ்திரி | 16 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | 18 |
| காகித உலகத்தில் ஒரு புரட்சி | ... | 29 |
| ஆரோக்கிய ரகசியம் | வி. என். குமாரசாமி | 31 |
| ரதியா | கமல் ஜோஷி—ரா. வீ. | 33 |
| நல்ல சமாசாரம் | வெங்கு | 38 |
| விஜய குமாரன் (பாப்பா மலர்) | சீதா | 40 |
| வழக்கு முடிந்தது! | விஜயம் | 43 |
| சேற்றில் செந்தாமரை | எஸ். வி. எஸ். | 44 |
| மத்திய கேந்திரம் | ஜெயமணி | 49 |
| சஞ்சீவி மருந்து | கி. ரா. கோபாலன் | 52 |
| மன்னிப்பு | ருக்மணி | 57 |
| ஏற்பிப்போச்சு! | சாமா | 59 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

## அட்டைப்பட விளக்கம்

தோயும் வெண்தயிர் மத்தொலி துள்ளவும்
மாய வெள்வளை வாய்விட்(டு) அரற்றவும்
.....................................................
ஆயர் மங்கையர் அங்கை வருந்துவார். —கம்பர்

தயிர்ச் சட்டியில் மத்தையிட்டுக் கடைந்த போது மத்தொலி துள்ளி எழுந்தது; அந்தப் பெண்ணின் கரங்களிலிருந்த சங்கு வளையல்கள் சப்தித்தன.

இந்தக் காட்சியை கண்ட கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கு அந்தப் பெண்ணின் மேல் இரக்கம் உண்டாயிற்று. "பாவம், அவள் உள்ளங்கை வலிக்குமே; அங்கை வருந்துமே!" என்று எண்ணினார். இந்தக் காட்சியை நமது சித்திரக்காரர் இந்த இதழின் அட்டைப் படமாகத் தீட்டியிருக்கிறார்.

ஆயிர வருஷங்களுக்கு முன் நம் நாட்டில் கை வலிக்கத் தயிர் கடையும் அளவுக்குத் தயிர் இருந்தது; பால் இருந்தது; பால் அளிக்கும் பசுமாடுகள் இருந்தன.

இன்று தயிர்கடையும் வழக்கமே நம் நாட்டைவிட்டு, வீட்டை விட்டு ஓடிப் போய்விடும் போலிருக்கிறது. மேலும் பால் என்பது டின்களில் வரும் பால் பவுடரி லிருந்து செய்யப்படும் பொருள் என்றும் மத்து என்பது பொருட் காட்சியில் வைக்கப்பட வேண்டிய பொருள் என்றும் கொஞ்ச நாட்களில் நம் குழந்தைகள் சொல்ல ஆரம்பித்தாலும் அதிசயப்படுவதற்கில்லை.

நல்ல பால் கிடைக்காததால் இன்று பல பணக்காரர்களும், ஹோட்டல்காரர்களும், ஏன் பால்காரர்களும் வெளி நாட்டிலிருந்து வரும் பால் பவுடர்களை வாங்கி நம் பணத்தைக் கப்பல் மார்க்கமாக வெளியேற்றுகிறார்கள்.

நல்ல நெய் கிடைக்காததால், கடலை, பருத்திக்கொட்டை எண்ணெய்களுக்கு நெய் உருவம் கொடுத்து நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம்.

மகாத்மா காந்தி அடிக்கடி "பசுவைத் தெய்வமாகப் போற்றிக் காப்பாற்றுவோம்; கால்நடைச் செல்வத்தை வளர்ப்போம்" என்று கூறி வந்தார். அவருடைய வாக்கைக் கடைப்பிடித்தால் தேசம் க்ஷேமம் அடையும்; மீண்டும் வீட்டுக்கு வீடு மத்தொலி துள்ளுவதையும் கேட்கலாம்.



மானிடர்கள் விரும்பும் பரிமளத்திற்கு
காஷ்மீர் புக்கே
சாமான்களை உபயோகியுங்கள்
காந்தியோடுகூடிய புதுமைக்கும், இன்பந்தரும் மிருதுத் தன்மைக்கும், நீடித்த இனிமைக்கும் காஷ்மீர் புக்கே டால்கம்பவுடரை உங்கள்மேலே தூவுங்கள். அது வியர்வையை உறிஞ்சிவிடும் .... அரிப்பு, எரிச்சலை அடக்குகிறது ... உங்களை குளுமையுடனும், நறுமணத்துடனும், நாள் முழுவதும் புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.
இன்றே ஒரு டின் காஷ்மீர் புக்கே டால்கம் பவுடரை வாங்கி வீட்டிற்கு எடுத்துச்செல்லுங்கள்!
காஷ்மீர் புக்கே டால்கம் பவுடர்
1806-ம் வருஷத்திலிருந்து கோல்கேட் உயர்ந்த ரகத்திற்கு பெயர்போனது.
CB/KA




ப்ரூக் லாக்ஸ்
சாக்லெட் மலமிளக்கி
FOR CONSTIPATION
BROOKLAX
CHOCOLATE LAXATIVE
TABLETS
ப்ரூக்லாக்ஸ், மலச்சிக்கல் உண்டாகும் குடலினுள் மற்றுமே வேலை செய்து ஒரு தொந்தரவும் இன்றி மலச்சிக்கலை அடியோடு அகற்றுகிறது. ஆதலால் ஜீரண சக்தியை தடை செய்வதில்லை.
2, 6, 24 மாத்திரைகளடங்கிய சைஸ்களில் கிடைக்கும். பெரிய சைஸ் வாங்குவது மிகவும் சிக்கனமானது.
ஒரே இரவில் மலச் சிக்கலை அறவே அகற்றுகிறது.
சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜண்டுகள்:
மெஸர்ஸ். ஓரியண்டல் மெர்கண்டைல் ஏஜன்ஸீஸ் 99-A, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்-1

கல்கி

# மேகங்கள் மறையவில்லை! அந்தகாரம் அகலவில்லை!

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தொன்றும் வருஷம் ஆரம்பமானதிலிருந்து அரசியல் வானம் முன்னரைக்காட்டிலும் அதிகமாக அமளிதுமளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

சென்ற வருஷம் கவிந்து கொண்டு கர்ஜித்து வந்த கருமேகங்கள் இன்னும் விலகவில்லை. உலகத்தைச் சூழ்ந்து நிற்கும் அந்தகாரம் இன்னும் அகலவில்லை. உலக மகாசபையில் வல்லரசுகள் புரிந்து வரும் வாய்ப்போரின் உக்ரம் இன்னும் குன்றவில்லை. மகா யுத்தம் பீறிட்டு எழுமோ என்று உலக மக்கள் கொண்டிருந்த பீதி இன்னும் தணியவில்லை. இதெல்லாவற்றுக்கும் மூலகாரணமாக இருந்து வரும் கோரமான கொரியா யுத்தம் இன்னும் நிற்கவில்லை.

இருபத்திநாலு மணி நேரத்தில் கொரியா யுத்தம் நின்று சமாதானம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் சில தினங்களுக்கு முன் வாய்த்தது. ஆனால், உலகத்தைப் பிடித்த துரதிர்ஷ்டம் காரணமாக அந்த அரிய சந்தர்ப்பம் கைநழுவ விடப்பட்டது.

'சமாதானப் பிரியர்கள்' என்று பறைசாற்றிக் கொள்ளும் அமெரிக்கர்கள் அந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ளத் தவறி விட்டார்கள். தவறியது மாத்திரமல்ல, சமரசக் கதவைப் 'படீர்' என்று சாத்திவிட்டார்கள்.

ஆய்ந்தோய்ந்து பாராமல் 38-வது அக்ஷரேகை எல்லையைக் கடந்து சென்றார்கள் அல்லவா? அதுபோலவே இப்போது சமாதான எல்லையைக் கடந்து சென்று விட்டார்கள்!

சீனாதான் ஆக்கிரமிப்புக் குற்றவாளி என்று ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் சீனா மீது குற்றப் பத்திரிகை வாசித்து விட்டார்கள்!

கொரியா போர் நின்று சமரசம் ஏற்படுவதற்காக இந்தியாவின் தலைமையில் ஆசிய நாடுகள் பெரு முயற்சி செய்தன. அதன் பயனாகச் சீனாவும் சமரசப் பேச்சு நடத்துவதற்கு இணங்கியது.

உலக சமாதானத்துக்கு இன்றியமையாத அத்தகைய நிலைமையை வரவேற்க வேண்டிய அமெரிக்கா, அதற்கு நேர்மாறான காரியங்களில் ஈடுபட்டுச் சர்வ தேச மகாசபையைக் குட்டை குழப்பி விட்டது.

சீனா மீது குற்றப் பத்திரிகை வாசிப்பதற்கு முதலில் பிரிட்டன் முதலிய வல்லரசுகள் விரும்பவில்லை. அப்படியிருந்தும் அமெரிக்கா தனது செல்வாக்கை உபயோகித்து இந்தியா முதலிய ஆசியா நாடுகளின் நன் முயற்சிகள் வீணாகும்படி செய்து விட்டது.

அமெரிக்காவின் கண்டனத் தீர்மானத்துக்கு ஆதரவாக நாற்பத்தி நாலு தேசங்கள் வோட்டுக் கொடுத்தன என்பது உண்மையே. எனினும் உலக ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடும் பட்சத்தில், உலக மக்களில் பெரும்பாலோர் ஐ. நா. சபையில் நிறைவேறிய அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை என்பது தெரியவரும்.

அமெரிக்காவை ஆதரித்த பல நாடுகளும் வேண்டா வெறுப்புடன் ஆதரித்தன என்பதும் பகிரங்க இரகசியமான விஷயம்.

எனவே ஐ. நா. சபையில் அமெரிக்கா அடைந்த 'வெற்றி' உண்மையான வெற்றி அல்ல. கொரியா யுத்தத்தில் அமெரிக்கா அடைந்த தோல்விகளை மறைப்பதற்காக ஜோடிக்கப்பட்ட வெற்றியே ஆகும்!

சீனாவைச் சேர்ந்த பார்மோஸாவில் அமெரிக்கா துருப்புகளைக் கொண்டு வந்து வைத்திருக்கிறது. ஜப்பானில் அமெரிக்கர்களே ஆட்சி புரிந்து வருகிறார்கள். கொரியாவிலும் அமெரிக்கத் துருப்புகள் இருந்து வருகின்றன.

அமெரிக்காவிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள பார்மோஸாவிலும், ஜப்பானிலும், கொரியாவிலும் அமெரிக்கத் துருப்புகள் இருப்பது ஆக்கிரமிப்பு அல்ல எனில், பல ஆண்டுகளாக அன்னியர்களால் போர் தொடுக்கப்பட்டுச் சின்னாபின்னமாகியுள்ள சீனா மறுபடியும் அன்னியரின் படை யெடுப்புக்குப் பயந்து அடுத்துள்ள எல்லையில் அன்னியரை எதிர்த்துப் போரில் இறங்கியிருப்பது எவ்வாறு ஆக்கிரமிப்புக் குற்றம் ஆகும்?

அமெரிக்கா சீனாவை ஆக்கிரமிப்புக் குற்றவாளி என்று கூறுகிறது. சீனாவும் ருஷ்யாவும் அமெரிக்காதான் ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள நாடுகளில் தன் துருப்புகளைக் கொண்டு வந்து வைத்திருக்கிறது என்று குற்றம் சாட்டுகின்றன.

ஆனால் மாஞ்செஸ்டர் கார்டியன் போன்ற பாரபட்சமற்ற பிரிட்டிஷ் பத்திரிகைகள் அமெரிக்காவின் போக்கையே கண்டித்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க விஷயம் ஆகும். ஒரு வருஷத்துக்கு முன் அமெரிக்கா சீன சர்க்காரை அங்கீகரித்திருந்தால் கொரியா போர் மூண்டிராது என்றும் மேற்படி பிரிட்டிஷ் பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

இதையேதான் இந்தியாவும் ஒரு வருஷ காலமாக வற்புறுத்தி வருகிறது. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை எவ்வளவு நீதியானது, நேர்மையானது என்பதைச் சென்ற வாரம் இந்தியா பார்லிமெண்டில் பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜி விளக்கிக் கூறியுள்ளார். வெளிநாட்டு விவகாரங்களில் ஜவாஹர்லால்ஜி அனுஷ்டித்து வரும் கொள்கை எவ்வளவு அப்பழுக்கு இல்லாதது என்பதைச் சர்வதேச நிகழ்ச்சிகள் நிரூபித்திருக்கின்றன; உலக ராஜதந்திரிகளும் இப்போது ஒத்துக் கொள்ள முற்பட்டிருக்கிறார்கள்.

அப்படியிருந்தும் கொரியா விஷயமாக இதுவரையில் இந்தியா மேற்கொண்ட சமரச முயற்சி எல்லாம் வல்லரசுகளின் பிடிவாதத்தினால் வியர்த்தமாகிவிட்டன. இந் நிலையில் கடைசியாக அமைக்கப்பட்டிருக்கும் ஐ. நா. சபை சமரசக் கமிட்டியில் அங்கம் வகிக்க வேண்டும் என்று மேற்படி சபைத் தலைவர் விடுத்த அழைப்பை இந்தியா நிராகரித்திருப்பதை நியாய புத்தி படைத்த எவரும் குறை கூற முடியாது.

எத்தனை சமரசக் கமிட்டிகள் சிருஷ்டிக்கப் பட்டால்தான் என்ன? வல்லரசுகள் பரஸ்பரம் கண்டன நோக்கத்தையும் போர்க் கோலத்தையும் கைவிட்டாலன்றி, வெறும் சமரசக் கமிஷன்களினாலும் கமிட்டிகளினாலும் மாத்திரம் உலக சமாதானம் உருவாகி விடுமா?

# பூதம் விழுங்கியது!

அப்படி ஒன்றும் பிரமாதம் இல்லை. ஒரு கோடி ரூபாய்தான்!

பூதம் விழுங்கியது ஒரு கோடி ரூபாய்தான்!

எந்த பூதம் தெரியுமா!

இந்திய சர்க்கார் காரியாலயங்களில் குடி கொண்டிருக்கும் ஊழல் பூதம்!

"நாட்டில் எல்லாரும் விவசாய அபிவிருத்தி செய்கிறார்களே, நாம் மட்டும் சும்மா இருக்கலாமா!" என்று அந்த ஊழல் பூதம் நினைத்தது.

வெளி நாட்டிலிருந்து பல கோடி ரூபாய்க்கு இரசாயன எரு வரவழைக்க ஆர்டர் கொடுத்தது.

இரசாயன எரு நம் நாட்டின் நில இயல்புக்கு நல்லதா என்பதே சந்தேகமான விஷயம். அதனால் கெடுதல்தான் விளையும் என்று சொல்லும் விவசாய நிபுணர்களும் உண்டு.

ஆகையால் இரசாயன எருவுக்காக வெளி நாட்டுக்கு அனுப்பிய பதினேழு கோடி ரூபாயும் நஷ்டம் என்றே சொல்லலாம்.

ஆனால் தேவைக்கு அதிகமாகவும், அநுமதியும் அங்கீகாரமும் இன்றியும் ஆர்டர் கொடுத்த வகையில் நஷ்டம் ஒரு கோடி ரூபாய்தானாம்!

இவ்விதம் விவசாய மந்திரி கனம் முன்ஷி இந்தியப் பார்லிமெண்டில் கூறியிருக்கிறார்!

"சரி, ஒருகோடி ரூபாய்தான் நஷ்டம் என்று வைத்துக் கொள்வோம். அதற்குப் பரிகாரம் என்ன செய்தீர்கள்!" என்று கேட்டதற்கு, "சம்பந்தப்பட்ட ஓர் உத்தியோகஸ்தரை டிஸ்மிஸ் செய்திருக்கிறோம்" என்று பதில் கூறியிருக்கிறார்.

கனம் முன்ஷியின் வாக்கு மூலங்களிலிருந்தே சர்க்காரின் மூன்று இலாகாக்களைச் சேர்ந்த

பல பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு இந்த ஊழலில் உடந்தைப் பொறுப்பு ஏற்படுவதாகத் தெரிகிறது.

அப்படி யிருக்க, "ஒரு உத்தியோகஸ்தரை டிஸ்மிஸ் செய்து விட்டோம்" என்பது யார் கண்ணைத் துடைப்பதற்காக! மற்றவர்களின் பெயர்களைச் சொல்வதற்குக் கூடச் சங்கோசப் படுவது எதற்காக!

பிரிட்டிஷ் ஆட்சியைக் காட்டிலும் சுயராஜ்ய அரசியலில் ஊழல்கள் மலிந்துவிட்டன என்ற புகார் ஏற்கெனவே அதிகமாயிருக்கிறது.

இம்மாதிரி சம்பவங்கள் அத்தகைய புகார்கள் பெருகுவதற்கு உதவி செய்யும்.

பரிபூரணமான நாணயப் பொறுப்பை இந்நாட்டின் பெரிய உத்தியோகஸ்தர்களிடம் நாம் எதிர்பார்க்கிறோம். அதற்குப் பங்கம் விளைவிப்பவர்கள் நாட்டின் சுதந்திரத்துக்கும் ஜனநாயக ஆட்சிக்கும் பெரும் துரோகம் செய்தவர்களாகிறார்கள்.

அப்படிப் பட்டவர்களின் குற்றத்தைச் சப்பைக் கட்டுக் கட்டி மழுப்பி விட்டு விடுவது சுயராஜ்யத்தின் அடிப்படைக்குப் பெருந் தீங்கு செய்வதாகும்.

ஆகையால் பல கோடி ரூபாய்க்கு அவசியமின்றி இரசாயன எரு வாங்கிய ஊழலைப் பற்றி இந்திய சர்க்கார் மேலும் சரியான விசாரணை நடத்தியே தீர வேண்டும்.

சம்பந்தப்பட்டவர்கள் அத்தனை பேருக்கும் தகுந்த தண்டனை விதிக்க வேண்டும்.

கோடிக் கணக்கில் ரூபாய் விழுங்கும் ஊழல் பூதத்தையும் அடியோடு விரட்டி அடிக்க வேண்டும்.

மழுப்ப வேண்டாம்; தட்டிக் கழிக்க வேண்டாம். அப்படிச் செய்வது விபரீதமான பலனையே தரும்.

ஜன நாயக ஆட்சி முறைக்கே பெரிய ஆபத்தை உண்டாக்கும்.

# ஸ்ரீ கிராமணியாருக்கு ஆதரவு

புராண இதிகாசங்களில் 'அஸகாய சூரர்' என்று சிலரைப் பற்றிச் சொல்லுவதுண்டு. இந்தக் காலத்து அரசியலில் அவ்விதம் பிறருடைய உதவியில்லாமல் தன்னந் தனியாக அரும் பெரும் செயல்களைச் செய்யக் கூடியவர் ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியார்.

சென்னை நகரம் தமிழ் நாட்டை விட்டுப் பறி போய்விடாமல் காப்பாற்ற அவர் ஒரு பெரும் வீரப் போராட்டம் நடத்தினார். அதில் வெற்றி பெற்றார்.

வீரபாண்டியன் கட்டப் பொம்முவுடைய வீர வாழ்க்கைச் சரித்திரத்தைத் தமிழ் மக்களில் பெரும்பாலோர் அறியும்படி செய்தார். வீரபாண்டியனுடைய விழா தமிழ் நாடெங்கும் நடக்கும்படியும் செய்தார்.

இப்போது மற்றொரு இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறார். இது எதிர்ப்பு இயக்கம்.

திராவிடக் கழகத்தாரில் இரு பிரிவினர்களும் தமிழ் நாட்டின் உயர்ந்த பண்பாட்டை அழிக்கக் கூடிய முறையில் தங்கள் பிரசாரத்தை நடத்தி வருகிறார்கள். வெளி மாகாணங்களிலும் அயல் நாடுகளிலும் தமிழர்களின் சிறப்பைக் குறைத்துக் கேவலப் படுத்தும்படியான நடவடிக்கைகளை நடத்தி வருகிறார்கள்.

இத்தகைய காரியங்களை எதிர்ப்பதற்கு ஒரு பெரிய முன்னணி திரட்டி வருகிறார். மார்ச்சு மாதம் முதல் வாரத்தில் திராவிடப் பிரிவினை எதிர்ப்பு மகாநாடு ஒன்று நடத்தத் திட்டம் போட்டிருக்கிறார்.

ஸ்ரீ கிராமணியார் பொறுப்பு ஏற்று நடத்தும் இந்த இயக்கத்துக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பூரண ஆதரவு அளிப்பது அறிந்து மகிழ்கிறோம்.

தமிழகத்தின் மேன்மையிலும் உயர் வாழ்விலும் கவலையுள்ளவர்கள் அனைவரும் ஸ்ரீ சிவஞான கிராமணியார் அவர்களுக்கு ஆதரவு நல்குவார்கள் என்று நம்புகிறோம்.

# நியாயந்தானா?

சென்னை நகரில் புதிய ஜில்லா காங்கிரஸ் கமிட்டி இன்னும் உருவாகவில்லை. ஏன்!

இரண்டு தொகுதிகளில் மாகாணக் கமிட்டிக்கும் ஜில்லாக் கமிட்டிக்கும் தேர்தல் நடைபெறவில்லை. எதனால்!

இதைக் குறித்துக் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஸ்ரீ களா வெங்கட்ராவிடம் சிலர் தூது சென்றதாகத் தினப் பத்திரிகைகளில் படித்தோம்.

* * *

திருச் செந்தூர் தாலுகா காங்கிரஸ் கமிட்டிக்குத் தேர்தல்கள் இன்னும் நடைபெறாமல் வைத்திருக்கிறார்கள்.

அத்தாலுகாவிலிருந்து ஜில்லாக் கமிட்டிக்கு அங்கத்தினர்கள் தேர்தலும் நடைபெறவில்லை.

தேர்தல் நடந்தால் ஜில்லாக் கமிட்டியில் இப்போது அதிகாரம் வகிப்பவர்களின் பெரும்பான்மை குறைந்து விடும் என்பதற்காகவே தேர்தல் நடத்தவில்லையென்பது புகார்.

* * *

தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உருவாகியும் இயங்கத் தொடங்கவில்லை.

இதன் காரணம் தலைவர் தேர்தலில் ஏற்பட்ட தகராறு.

ஜில்லா கமிட்டி தலைவர் பதவிக்குக் குன்னியூர் ஸ்ரீ சாம்பசிவய்யரும் நின்றார்; ஸ்ரீ இட்டை சுப்பிரமண்யமும் நின்றார்.

திட்டை சுப்பிரமண்யம் ஏழை ஹரிஜனர். 36 வோட்டுப் பெற்றார்; இதுவே அதிசயந்தான்.

ஸ்ரீ சாம்பசிவய்யர் அவரைக் காட்டிலும் அதிக வோட்டுகள் பெற்றார்; இதில் அதிசயம் ஒன்றுமில்லை.

ஸ்ரீ திட்டை சுப்பிரமண்யம் அத்துடன் விட்டிருக்கக் கூடாதா! ஸ்ரீ சாம்பசிவய்யரின் தேர்தல் செல்லாது என்று மாகாண டிரிபுனலில் வழக்குத் தொடுத்தார்.

மாகாண டிரிபுனல் ஜில்லா டிரிபுனலுக்கு வழக்கை அனுப்பியது.

ஜில்லா டிரிபுனல் அங்கத்தினரான கும்பகோணம் டாக்டர் மகாலிங்கய்யர், "ஸ்ரீ சாம்பசிவய்யரின் மாகாணக் கமிட்டி அங்கத்தினர் தேர்தல் செல்லாது; ஆகையால் அவர் ஜில்லாக் கமிட்டி அங்கத்தினரும் அல்ல; எனவே தலைவர் தேர்தலும் செல்லாது. மற்றொரு அபேட்சகரான ஸ்ரீ திட்டை சுப்பிரமண்யத்தின் அபேட்சைப் பத்திரந்தான் முறையானது. ஆகையால், அவரே போட்டியின்றித் தேர்தெடுக்கப் பட்டதாகக் கருதப்பட வேண்டும்" என்று தீர்ப்பளித்தார்.

ஆனால் மாகாணத் தலைமை மேற்படி தீர்ப்பை ஒப்புக் கொள்ளவில்லை.

இரண்டு பேருக்கும் ஜில்லாக் கமிட்டியைக் கூட்ட வேண்டாம் என்று உத்தரவிட்டிருக்கிறது.

கும்பகோணத்தின் பிரபல கண் வைத்தியரும் காந்தி பக்தருமான டாக்டர் மகாலிங்கய்யர் நியாயமாகவே தீர்ப்பளித்திருப்பார் என்று ஜனங்கள் நம்புவார்கள்.

எனவே, பணக்காரருக்குச் சாதகமாகவும் ஏழை ஹரிஜனருக்கு விரோதமாகவும் மாகாணத் தலைமையினர் அதிகாரத்தை உபயோகித்திருக்கிறார்கள் என்றும் ஜனங்கள் சந்தேகிப்பார்கள்.

இம்மாதிரி சம்பவங்களே தமிழ் நாட்டுக் காங்கிரஸ் வாதிகளுக்குள் ஒற்றுமை ஏற்படத் தடைகளாக இருந்து வருகின்றன.

மாகாணத் தலைமையினர் கவனித்து நியாயா நியாயங்களைப் பொதுமக்கள் அறியும்படி விளக்க வேண்டும். ஒற்றுமைக்குத் தடைகளையும் போக்க வேண்டும்.

# கை இருக்கிறதே!

சுதந்திர இந்தியாவில் கல்விச் சீர்திருத்த முயற்சி பிரமாதமான முறையில் நடந்து வருகிறது!

மகாநாட்டுக்கு மேல் மகாநாடு கூட்டுகிறார்கள்! மூச்சு விடாமல் பேசுகிறார்கள்!

திருவாங்கூரில் நடக்கும் கல்வி மகாநாட்டுக்குப் பஞ்சாப்பிலிருந்து கல்வி மந்திரிகளும் நிபுணர்களும் வருகிறார்கள்!

அஸ்ஸாமில் நடக்கும் கல்வி மந்திராலோசனைக்குச் சென்னையிலிருந்து வைஸ் சான்ஸலர்களும் மந்திரிகளும் போகிறார்கள்!

திட்டங்கள் வகுக்கிறார்கள்; யாதாஸ்துகள் வெளியிடுகிறார்கள்.

இவ்வளவுக்கும் 'டிமிக்கி' கொடுக்கிறது அந்தப் புண்ணியவான் மெக்காலே அஸ்திவாரம் அமைத்த கல்வி முறை!

புதிய பாட புத்தகங்கள் வருகின்றன; அவை இன்னும் கொஞ்சம் மோசமாயிருக்கின்றன.

புதிய பரீட்சைக் கேள்விகள் வருகின்றன; அவை இன்னும் கொஞ்சம் மாணவர்களின் மூளையைக் குழப்புகின்றன!

கல்விச் சீர்திருத்தம் இந்த ரீதியில் அமோகமாக நடந்து வருகிறது!

• • •

நமது கல்வி முறையில் உள்ள அடிப்படையான குறைபாடு இன்னது என்பதை நம் கல்வி நிபுணர்கள் இன்னும் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

உணர்ந்து கொண்டிருந்தாலும் அதை நிவர்த்திப்பதற்குச் சிறிதளவாவது பிரயத்தனம் செய்வதாகக் காணவில்லை.

நமது கல்வி முறையில் ஏட்டுக் கல்வியே பிரதானமாயிருப்பதால், கையினால் வேலை செய்யும் ஆற்றலை மாணவர்கள் இழந்து விடுகிறார்கள்.

இதன் காரணமாகப் படித்தவர்கள் கையினால் வேலை செய்ய முடிவதில்லை.

கையினால் வேலை செய்கிறவர்கள் கல்வி அறிவு பெற முடிகிறதில்லை.

இவ்விதம், அறிவு வன்மையும் கையின் ஆற்றலும் தனித்தனியாகப் பிரிந்து நிற்கின்றன.

தற்கால இந்தியாவின் பெரிய சாபக்கேடு இதுதான்!

இந்தப் பிரிவினையினாலேயே புதிதாகச் சுதந்திரம் அடைந்த சைனா முதலிய நாடுகளைப் போல் இந்தியா துரிதமாக முன்னேற்றம் அடைய முடியவில்லை!

• • •

நாளது பிப்ரவரி மீ 10உ ரூர்க்கி என்னுமிடத்தில் பேசிய நமது பிரதமர் ஜவாஹர்லால் நேரு இந்த விஷயத்தை நன்றாக எடுத்துக் கட்டிக் காட்டியிருக்கிறார்

"நான் போகுமிடங்களில் எல்லாம் காலேஜ் கட்டடத்துக்குப் பணம் வேண்டும், ஹைஸ்கூல் கட்டுவதற்குப் பணம் வேண்டும், ஹாஸ்டல் கட்டுவதற்குப் பணம் வேண்டும் என்று முறையிடுகிறார்கள். ஆனால் மாணாக்கர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தலைக்கு இரண்டு இரண்டு கை இருக்கிறதே! அந்த இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு என்ன செய்கிறீர்கள்! பணம் இல்லாவிட்டால் என்ன! உங்கள் கைகளை உபயோகித்துக் கட்டடம் கட்டி விடலாமே!" என்றார் பண்டித ஜவாஹர்லால் நேரு!

அமெரிக்காவில் ஜவாஹர்லால்ஜி சுற்றுப் பிரயாணம் செய்தபோது ஒரு கலாசாலைக்குச் சென்றிருந்தாராம். அங்கே, அந்தக் கலாசாலை

மாணவர்கள் தங்கள் கையினாலேயே உழைத்து வேலை செய்து கட்டிய ஹாஸ்டல் கட்டிடத்தைக் காட்டினார்களாம்.

"பணக்கார அமெரிக்காவில் மாணவர்கள் அப்படிச் செய்யும் போது இந்தியாவிலும் மாணவர்கள் ஏன் அவ்வாறு செய்யக் கூடாது!" என்று கேட்டார்.

ஜவாஹர்லால்ஜிக்கு மூன்று முறை "ஜே!" போட்டு விட்டு, நம் செந்தமிழ் நாட்டின் தெற்கு மூலையில் அத்தகைய உதாரணம் ஒன்று இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

நம்மாழ்வார் பிறந்த **ஆழ்வார் திருநகரி** என்னும் க்ஷேத்திரத்தில் பள்ளிக்கூடக் கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். ஆங்கிலக் கல்வி கற்ற பிள்ளைகள் தங்கள் கையினால் வேலை செய்து கட்டியிருக்கிறார்கள்.

யார் வேண்டுமானாலும் ஆழ்வார் திருநகரிக்குச் சென்று இந்த அதிசயத்தைப் பார்க்கலாம்.

வைஸ்சான்ஸலர்கள். கல்வி இலாகா டைரக்டர்கள், பிரின்ஸிபால்கள், புரொபஸர்கள்,—அனைவரும் பார்க்கலாம்.

ஏன்! ஆதாரக் கல்வித் திட்டத்தில் ஆழ்ந்து உழன்று பாடுபடும் மகான்கள்கூடப் போய்ப் பார்க்கலாம்.

ஆழ்வார் திருநகரி இளைஞர் சங்கத்தார் இந்த அதிசயமான வேலை செய்திருக்கிறார்கள். பி. ஏ., எம். ஏ., பாஸ் செய்து வெளியூர்களில் உத்தியோகமாயிருப்பவர்கள்கூட இந்தத் தொண்டு செய்வதற்காக ஊருக்கு வந்து, துணியை வரிந்து கட்டிக் கொண்டு மண்வெட்டி, கல் தூக்கி, கொத்தனுருக்குச் சித்தாளாக வேலை செய்து பள்ளிக்கூடக் கட்டிடத்தைக் கட்டி முடித்திருக்கிறார்கள்!

இந்த முறையை இந்திய தேசத்திலுள்ள எல்லா ஹைஸ்கூல்களும், காலேஜுகளும் கைப்பற்றினால், நமது கல்வி முறை கன்னத்தில் போட்டுக் கொண்டு "இதோ சீர்திருந்துகிறேன்!" என்று சீர்திருந்தி விடும்.

தமிழில் வெளியாகும் புதிய புத்தகங்களுக்குச் சர்க்கார் பரிசு கொடுக்கிறார்கள். நல்ல ஸினிமாக்களுக்குக் கூடச் சர்க்கார் பரிசு கொடுக்கப் போகிறார்கள்.

எந்தப் பள்ளிக்கூடம் அல்லது கலாசாலையின் மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து, ஒரு ரூபாய் கூட ஆள் கூலி கொடாமல், ஒரு முழுக் கட்டிடத்தைக் கட்டி முடிக்கிறார்களோ, அந்தப் பள்ளிக்கூடம் அல்லது கலாசாலைக்குச் சர்க்கார் ஒரு நல்ல பரிசு ஏற்படுத்தட்டும்.

அந்தப் பரிசைப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு நேரில் பிரசன்னமாகி வழங்குவது என்று திட்டம் செய்யட்டும்.

கல்வி முறை சீர்திருந்துகிறதா, இல்லையா என்று அப்போது பார்க்கட்டும்!

# அங்கப் போர்

"கள்ளச் சாராயம் வடிகட்டிக் கொண்டிருந்த ஒருவன் போலீஸாரால் கைது செய்யப்பட்டான்." —கோவைபூர் செய்தி.

மதுவிலக்கு அமுலில் இருக்கும்போது சாராயம் வடிகட்ட முற்பட்டுப் போலீஸாரிடம் அகப்பட்டுக் கொள்வதைவிட வடிகட்டின முட்டாள்தனம் வேறில்லை!

★

"பம்பாய் சாயத் தொழிற்சாலை ஒன்றில் தீப் பிடித்துக் கொண்டது." —செய்தி.

தீப்பிடித்துக் கொண்ட சாயத் தொழிற்சாலையின் கட்டிடம் சாயந் தொடங்குமுன் எல்லாத் தொழிலாளர்களும் ஜாக்கிரதையாக வெளியேறியிருப்பார்கள் என நம்புகிறோம்.

★

"பூரா சர்க்கரையை அஸ்கா சர்க்கரை விலைக்கே விற்கவேண்டும்." —மத்திய சர்க்கார் உத்தரவு.

கையிலுள்ள பூரா சர்க்கரை ஸ்டாக் பூராவையுமே அஸ்கா விலைக்கு விற்க வேண்டுமா என்று கவலையுடன் கேட்கிறார் ஒரு வியாபாரி.

★

"பிரிட்டனில் பித்தான் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று வருஷத்திற்கு 80 லட்சம் ரூபாய் சம்பாதித்துள்ளது." —செய்தி.

இந்தச் செய்தியை நம்பித்தான் தன் கையிலுள்ள மூலதனத்தை இந்தத் தொழிலில் போடலாமா என்று கேட்கிறார் ஒரு முதலாளி.

"மாணவர்கள் தாங்களே தங்களுக்கு வேண்டிய வீடுகளைக் கட்டிக்கொள்ள வேண்டும்." —பண்டித நேரு.

மாணவர்களே கட்டிக்கொள்ளும் வீட்டில் 'படிக்கும் அறை' இருக்காது என்பது நிச்சயம்.

★

"நேபாளத்தில் பத்தாம் பசலி ராணா ஆட்சி இந்த வாரத்துடன் சமாப்தி." —செய்தித் தலைப்பு.

பத்தாம் பசலி ஆட்சிகளை சமாப்தி செய்வதைவிட அவை இனி மறுபடியும் தலைதூக்க முடியாதபடி சமாதி செய்யப்படுவதையே பொது ஜனங்கள் விரும்புவார்கள்.

★

"55 நாட்களும் 2 மணி நேரமும் உண்ணாவிரதம் இருந்த பக்கிரி ஒருவர் உலக ரிகார்டை வென்றார்." —சீன் செய்தி.


இந்தப் பக்கிரியை நம் நாட்டுக்கு வரவழைத்து நம் மக்களுக்கு உண்ணாவிரதத்தில் பயிற்சி அளிக்கும்படி செய்தால் என்ன!

★

சிரியாவில் ஓரிடத்தில் பூமிக்கடியில் கடபுடா வென்ற சத்தம் கேட்பதாயும் அதைப்பற்றிப் பூதத்துவ சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

பூதத்துவ சாஸ்திரிகளானபடியால் கடபுடா சத்தம் பூதத்துடைய சேஷ்டையின் விளைவு என்று சொல்லமாட்டார்கள் என நினைக்கலாம்.

-நமது கார்ட்டூனிஸ்ட்



"உங்கள் வயது என்ன?"
"61"
"ஓ! நான் 16 என்றல்லவா நினைத்தேன்."
"உங்கள் பிறந்த நாள் சொல்லுங்கள்."
"இன்னும் தீர்மான மாகவில்லை."
"உங்கள் தொழில் என்ன?"
"ரயிலில் இலவசமாக முதல் வகுப்புப் பிரயாணம் செய்யப்பாடுபடுதேல்."
எம்.பி.
"நீங்கள் நிர்மாணத் திட்டத்தில் எதைச் செய்கிறீர்கள்?"
"காங்கிரஸுக்கு ஒரு ரூபாய் சந்தா கொடுக்கிறேன்."
காங்கிரஸ் காரர்
"உங்கள் வருமானம் என்ன?"
"நான் ஒரு அகதி ஆயிற்றே!"
"உங்களுக்கு எத்தனை மில்கள் சொந்தம்?"
"ரகுபதி ராகவ ராஜா ராம்."
டாலமியா

ஸென்ஸஸ் எடுக்கிறார்!


"இங்கே வராதீர்! சோஷலிஸ்ட் இந்தியா ஏற்பட்டவுடன் நாங்கள் வேறு ஸென்ஸஸ் எடுத்துக் கொள்ளுகிறோம். உம்முடைய கணக்கு நமக்கு வேண்டாம்."
"உங்கள் மதம் என்ன?"
"உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?"
"தற்சமயம் 160 குழந்தைகள்."
"உங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?"
"அப்பாடா! இனி நிம்மதியாக வீட்டுக்குப் போகலாம். ஸென்ஸஸ் எடுக்கும் வேலை முடிந்துவிட்டது!"
"இன்னும் முடியவில்லை; ஒருவர் பாக்கி!"
"ஆமாம்; இன்று நீர் இன்னொரு குழந்தைக்கு அப்பாவாகி விட்டீர்!"
SHASTRY

# பொன்னியின் செல்வன்

## அத்தியாயம் 36

## "ஞாபகம் இருக்கிறதா?"

லதா மண்டபத்தின் தோட்டவாசலண்டை வந்து நின்று நந்தினி மூன்று தடவை கையைத் தட்டினாள்.

அப்போது அவள் முகத்தில் படிந்திருந்தது பயத்தின் ரேகையா அல்லது மரங்களின் இருண்ட நிழலா என்று சொல்ல முடியாது.

தோட்டத்தில் சிறிது தூரம் வரையில் பெரிய பெரிய அடிமரங்களும் அவற்றைச் சுற்றிக் கொண்டிருந்த கொடிகளும் தெரிந்தன. அப்பால் ஒரே இருட் பிழம்பாயிருந்தது.

இருளைக் கீறிக் கொண்டு, கொடிகளை விலக்கிக் கொண்டு, மரம் ஒன்றின் பின்னாலிருந்து மந்திரவாதி வெளியே வந்தான்.

நந்தினி தன்னுடைய புஷ்ப மஞ்சத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். அவள் அழகிய முகத்தில் இப்போது அமைதி குடிகொண்டிருந்தது.

மந்திரவாதி லதா மண்டபத்துக்குள் நுழைந்தான். தங்க விளக்கின் சுடர் ஒளி அவன் முகத்தின் மீது விழுந்தது.

ஏற்கெனவே பார்த்த முகமாயிருக்கிறதே! யார் இவன்? ஆம்; திருப்புறம்பயம் பள்ளிப் படையினருகில் நள்ளிரவில் கூடியிருந்த மனிதர்களில் ஒருவன் இவன். பையிலிருந்து பொன் நாணயங்களைக் கல கல வென்று கொட்டியவன். "ஆழ்வார்க்கடியானைக் கண்ட இடத்தில் உடனே கொன்று விடுங்கள்!" என்று மற்றவர்களுக்குக் கூறிய ரவிதாஸன்தான் இவன்.

வரும்போதே அவன் முகத்தில் கோபம் கொதித்தது. மலர்ப்படுக்கையில் சாந்த வடிவமாய் அமர்ந்திருந்த நந்தினியைக் கண்டதும் அவனுடைய பூனைக் கண்கள் வெறிக் கனல் வீசின.

மஞ்சத்தின் எதிரில் கிடந்த பலகையில் உட்கார்ந்து கொண்டு, நந்தினியை உற்றுப் பார்த்துக் கொண்டு "ஹூம் ஹ்ரீம் ஹ்ராம்! பகவதி! சக்தி! சண்டிகேசுவரி!..." என்று சில மந்திரங்களைச் சொன்னான்.

"போதும்! நிறுத்து! காதிப் பெண் வாசற்படியில் உட்கார்ந்தபடி தூங்கித் தொலைத்துவிட்டாள் போலிருக்கிறது! சொல்ல வேண்டியதைச் சீக்கிரம் சொல்! அவர் கோட்டைக்குள் வந்து விட்டார்!" என்றாள் நந்தினி.

"அடி பாதகி!" என்று ரவிதாஸன் கூறியது, நாகப்பாம்பு சீறுவதுபோலத் தொனித்தது.

"யாரைச் சொன்னாய்?" என்று நந்தினி சாந்தமாகவே கேட்டாள்.

"நன்றி கெட்ட நந்தினியைத்தான்! பழுவூர் இளைய ராணியைத்தான்! உன்னைத்தான்!" என்று ரவிதாஸன் தன் ஒரு கை விரலால் அவளைச் சுட்டிக்காட்டினான்.

நந்தினி மௌனமாயிருந்தாள்.

"பெண்ணே! நினைவில் வைத்திருக்க வேண்டிய சில சம்பவங்களை நீ மறந்து விட்டாய் போலிருக்கிறது. அவற்றை உனக்கு ஞாபகப் படுத்துகிறேன்" என்றான் ரவிதாஸன்.

"பழைய கதை இப்போது எதற்கு?" என்றாள் நந்தினி.

"இப்போது எதற்கு என்றா கேட்கிறாய்? சொல்கிறேன், முதலில் ஞாபகப் படுத்திவிட்டுப் பிற்பாடு சொல்கிறேன்" என்றான் ரவிதாஸன்.

அவனைத் தடுப்பதில் பயனில்லையென்று கருதியவளைப் போல் நந்தினி ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

"ராணி! கேள்! மூன்று வருஷத்துக்கு முன்னால் ஒருநாள் நடு நிசியில் வைகை நதிக் கரையில் உள்ள மயானத்தில் ஒரு சிதை எரிந்து கொண்டிருந்தது. சாஸ்திரப்படி புரோகிதர்களைக் கொண்டு அந்திமக்கிரியை ஒன்றும் அங்கு நடக்கவில்லை. காட்டில் காய்ந்து கிடந்த கட்டைகளையும் குச்சிகளையும் இலைச் சருகுகளையும் கொண்டு வந்து அச் சிதையை அடுக்கினார்கள். மரத்துக்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த ஓர் உடலைக் கொண்டு வந்து அந்தச் சிதையில் இட்டார்கள். பிறகு தீ மூட்டினார்கள். காட்டுக் கட்டைகளில் தீ நன்றாய்ப் பிடித்துக் கொழுந்து விட்டு எரிந்தது. அப்போது காட்டு நிழலிலிருந்து உன்னைச் சிலர் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தார்கள். உன் காலையும் கையையும் கட்டிப் போட்டிருந்தது. உன் வாயில் துணி அடைத்திருந்தது. இன்று அழகாகப் பூ வைத்துக் கொண்டை போட்டுக் கொண்டிருக்கிறாயே, அந்தக் கூந்தல் விரிந்து தரையில் புரண்டு கொண்டிருந்தது. உன்னை அம் மனிதர்கள் ஜுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்த சிதையில் உயிரோடு போட்டுக் கொளுத்திவிட எண்ணியிருந்தார்கள். 'இன்னும் கொஞ்சம் தீ நன்றாக எரியட்டும்!' என்று அவர்களில் ஒருவன் சொன்னான். உன்னை அங்கேயே போட்டு விட்டு அந்த மனிதர்கள் தனித் தனியே ஒரு பயங்கரமான சபதம் எடுத்துக்கொண்டார்கள். அதை நீ கேட்டுக் கொண்டிருந்தாய். உன் வாயை அடைத்திருந்தார்களே தவிர, கண்ணையும் கட்டவில்லை; காதையும் அடைக்கவில்லை. ஆகையால், பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டுமிருந்தாய். அவர்கள் அனைவரும் சபதம் கூறி முடிந்த பிறகு உன்னை நெருங்கினார்கள். அதுவரை சும்மா இருந்தவள், கட்டுண்டிருந்த உன் கைகளால் ஏதோ சமிக்ஞை செய்ய முயன்றாய். உன் கண்களை உருட்டி விழித்துப் புருவத்தை நெரித்துக் கஷ்டப்பட்டாய். அவர்களில் ஒருவன் 'இவள் ஏதோ சொல்ல விரும்புகிறாளடா!' என்றான். 'பழைய கதையாகத்தான் இருக்கும். தூக்கிச் சிதையில் போடு!' என்றான் இன்னொருவன். 'இல்லையடா! தீயில் போடுவதற்கு முன்னால் என்னதான் சொல்கிறாள், கேட்டுவிடலாம்! வாயிலிருந்து துணியை எடு!' என்றான் மற்றொருவன். அவனே அவர்களுக்குத் தலைவன் ஆனபடியால் உன் வாயிலிருந்து துணியை எடுத்தார்கள். நீ அப்போது என்ன சொன்னாய் என்பது நினைவிருக்கிறதா, பெண்ணே!" என்று ரவிதாஸன் கேட்டு விட்டு நிறுத்தினான்.

நந்தினி மறுமொழி சொல்லவும் இல்லை; அவனைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை. நெஞ்சில் குடிகொண்டிருந்த அருவருப்பையும் பீதியையும் அதே சமயத்தில் பயங்கர சங்கல்பத்தின் உறுதியையும் அவள் முக மண்டலம் காட்டியது. அவளுடைய கரிய கண்களிலிருந்து இரு கண்ணீர்த் துளிகளும் ததும்பி நின்றன.

"பெண்ணே! பேசமாட்டேன் என்கிறாய்! வேண்டாம்! அதையும் நானே சொல்லி விடுகிறேன். அந்த மனிதர்களைப் போலவே நீயும் பழி வாங்கும் விரதம் பூணப்போவதாகச் சொன்னாய். பழி வாங்குவதற்கு அவர்களைக் காட்டிலும் உனக்கே அதிக

கல்கி

காரணம் உண்டு என்று சத்தியம் செய்தாய். உன்னுடைய அழகையும் மதியையும் அதற்கே பயன் படுத்துவதாகக் கூறினாய். அவர்களுக்கு உன்னால் முடிந்த அளவு உதவி புரிவதாகவும் சொன்னாய். சபதத்தை நிறைவேற்றியதும் நீயே உன் உயிரை விட்டுவிடத் தீர்மானித்திருப்பதாகவும் ஆணையிட்டுச் சொன்னாய். உன்னை மற்றவர்கள் நம்பவில்லை. ஆனால் நான் நம்பினேன். நம்பி, உன்னைத் தீயில் போட்டு விடாமல் தடுத்தேன். உன் உயிரைத் தப்புவித்தேன். இதெல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்று ரவிதாஸன் கூறி நிறுத்தினான்.



நந்தினி சற்றுத் திரும்பி அவனைப் பார்த்து, "ஞாபகம் இருக்கிறதா என்று கேட்கிறாயே? என் நெஞ்சில் அவ்வளவும் தீயினால் எழுதியதுபோல் எழுதி வைத்திருக்கிறதே?" என்றாள்.

"பின்னர் ஒரு நாள் நாம் எல்லாரும் அகண்ட காவேரிக் கரையோரமாகக் காட்டு வழியில் போய்க் கொண்டிருந்தோம். திடீரென்று பின்னால் குதிரை வீரர்கள் வரும் சத்தம் கேட்டது. அவர்கள் போகும் வரையில் நாம் ஒவ்வொருவரும் தனித் தனியாகக் காட்டில் ஒளிந்து கொள்ளத் தீர்மானித்தோம். ஆனால் நீ மட்டும் அத்தீர்மானத்தை மீறி வழியிலேயே நின்றாய். அந்த வீரர்கள் உன்னைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களுடைய தலைவனாகிய பழுவேட்டரையன் உன்னைக் கண்டு மயங்கி உன் மோக வலையில் விழுந்தான். அவனை நீ மணந்தாய். என்னைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் நான் ஏமாந்து விட்டதாக என்னை இடித்துக் கூறினார்கள். நான் உன்னை விடவில்லை. எப்படியோ ஒரு நாள் உன்னைத் தனியே பிடித்துக் கொண்டேன். துரோகியாகிய உன்னைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட எண்ணினேன். மறுபடியும் நீ உயிர்ப் பிச்சை கேட்டாய். நம்முடைய சபதத்தை நிறைவேற்றுவதற்காகவே இங்கு வந்திருப்பதாகக் கூறினாய். இந்த அரண்மனையில் இருந்தபடியே எங்களுக்கு வேண்டிய உதவியெல்லாம் செய்வதாகச் சத்தியம் செய்தாய்.




இதெல்லாம் உண்மையா இல்லையா?'' என்று கேட்டு விட்டு நிறுத்தினான் ரவிதாஸன்.

"இதெல்லாம் உண்மைதான்; யார் இல்லை என்றார்கள்? எதற்காகத் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறாய்? இப்போது நீ வந்த காரியத்தைச் சொல்லு!'' என்றாள் நந்தினி.

"இல்லை, பெண்ணே! உனக்கு ஞாபகம் இல்லை. எல்லாவற்றையும் நீ மறந்து விட்டாய்! பழுவூர் அரண்மனையின் சுகபோகத்தில் அழுந்தி உன் சபதத்தை மறந்து விட்டாய்! அறுசுவை உண்டி அருந்தி, ஆடை ஆபரணங்கள் பூண்டு, சப்ரகூட மஞ்சத்தில் பட்டு மெத்தையில் உறங்கி, தந்தப் பல்லக்கில் பிரயாணம் செய்யும் ராணி நீ! உனக்குப் பழைய ஞாபகங்கள் எப்படி இருக்கும்?''

"சீச்சீ! இந்த மஞ்சமும் மெத்தையும் ஆடை ஆபரணமும் யாருக்கு வேண்டும்? இந்த அற்ப போகங்களுக்காகவா நான் உயிர் வாழ்கிறேன்? இல்லவே இல்லை!''

"அல்லது வழியில் போகிற வாலிபனுடைய சௌந்தரிய வதனத்தைக் கண்டு மயங்கி விட்டாய் போலும்! புதிதாகக் கொண்ட மையலில் பழைய பழி வாங்கும் எண்ணத்தை மறந்திருக்கலாம் அல்லவா?''

நந்தினி சிறிது துணுக்கம் அடைந்தாள். அதை உடனே சமாளித்துக் கொண்டு "பொய்! முழுப் பொய்!'' என்றாள்.

"அது பொய்யானால், நான் இன்று வரப்போவதாக முன்னதாகச் சொல்லி அனுப்பியிருந்தும், வழக்கமான இடத்துக்கு உன் தாதிப் பெண்ணை ஏன் அனுப்பி வைக்கவில்லை?''

"அனுப்பி வைத்துத்தான் இருந்தேன். உனக்கு வைத்திருந்த ஏணியில் இன்னொருவன் ஏறி வந்து விட்டான். அந்த மூடப் பெண் அவனை நீதான் என்று எண்ணி அழைத்துக் கொண்டுவந்து விட்டாள். அது என்னுடைய குற்றமா?''

"யாருடைய குற்றமாயிருந்தால் என்ன? இன்னும் ஒரு கணத்தில் என் உயிருக்கு ஆபத்து வருவதாயிருந்தது. அந்த வாலிபனைத் தேடி வந்த கோட்டைக் காவலாளர் என்னைப் பிடித்துக் கொள்ள இருந்தார்கள். இந்த அரண்மனைக்குப் பக்கத்துக் காட்டிலுள்ள குளத்தில் மூச்சுத் திணறும் வரையில் முழுகியிருந்து அவர்கள் போன பிறகு

தப்பித்து வந்தேன். சொட்டச் சொட்ட நனைந்து வந்தேன்..."

"உனக்கு அது வேண்டியதுதான். என்னைச் சந்தேகித்த பாவத்தை அந்த முழுக்கினால் கழுவிக் கொண்டாய்!"

"பெண்ணே! சத்தியமாகச் சொல்! அந்த வாலிபனுடைய அழகில் நீ மதிமயங்கி விடவில்லையா?"

"சீ ச்சீ! இது என்ன வார்த்தை! ஆண்பிள்ளைகளின் அழகைப் பற்றி யாராவது பேசுவார்களா? இந்த வெட்கங் கெட்ட சோழ நாட்டிலே தான் 'அரசன் அழகன்' என்று கொண்டாடுவார்கள். ஆண் பிள்ளைகளுக்கு அழகு உடம்பிலுள்ள போர்த் தழும்புகள் அல்லவா?"

"நன்றாகச் சொன்னாய். இதை நீ உண்மையாகச் சொல்லும் பட்சத்தில், அந்த வாலிப வழிப்போக்கன் இங்கு எதற்காக வந்தான்?"

"முன்னமே சொன்னேனே, நீதான் என்று எண்ணி வாஸுகி அவனை அழைத்துக்கொண்டுவந்தாள் என்று."

"என்னிடம்கூட நீ கொடுக்காத உன் முத்திரை மோதிரத்தை அவனிடம் ஏன் கொடுத்தாய்?"

"அவனை இவ்விடம் தருவித்துப் பேசுவதற்காகவே கொடுத்தேன். இப்போது அம் மோதிரத்தை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டு விடப் போகிறேன்......"

"எதற்காக அவனைத் தருவித்தாய்? அவனிடம் இவ்வளவு நேரம் என்ன சல்லாபம் செய்து கொண்டிருந்தாய்?"

"ஒரு முக்கியமான லாபத்தைக் கருதியே அவனுடன் சல்லாபம் செய்து கொண்டிருந்தேன். நம்முடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள அவனால் பெரிய அநுகூலம் ஏற்படும்."

"அடி பாதகி! கடைசியில் உன் பெண் புத்தியைக் காட்டி விட்டாயா? யாரோ முன்பின் தெரியாத வாலிபனிடம் நமது இரகசியத்தை......"



"வீணில் ஏன் பதறுகிறாய்? நான் ஒன்றும் அவனிடம் சொல்லி விடவில்லை. அவனிடமிருந்துதான் ரகசியத்தை கிரஹித்துக் கொண்டேன்."

"என்ன கிரஹித்துக் கொண்டாய்?"

"இவன் காஞ்சியிலிருந்து பழையாறைக்கு ஓலைகொண்டு போகிறான். பழையாறையில் உள்ள பெண் புலிக்குக் கொண்டு போகிறான். அதை என்னிடம் காட்டினான். அவள் கொடுக்கும் மறு ஓலையை என்னிடம் கொண்டுவர வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அதற்குள் நீ வந்து விட்டாய்."

"ஓலையுமாயிற்று; எழுத்தாணியும் ஆயிற்று. இதனாலெல்லாம் நமக்கு என்ன உபயோகம்?"

"உன்னுடைய அறிவின் ஓட்டம் அவ்வளவுதான்! புலிக் குலத்தை அடியோடு அழிப்பது என்று நாம் விரதம் கொண்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் ஆண் புலிகளை மட்டுமே எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். பெண் புலியினாலும் குலம் வளரும் என்பதை மறந்து விட்டீர்கள். அதுமட்டுமல்ல. தற்போது இந்தச் சோழ ராஜ்யத்தை ஆளுவது யார் என்று எண்ணியிருக்கிறாய்? பலமிழந்து செயலிழந்து நோய்ப் படுக்கையில் படுத்திருக்கும் கிழவனா? காஞ்சியிலும் இலங்கையிலும் உள்ள இளவரசர்களா?......"

"இல்லை; உன்னை ராணியாகப் பெறும் பாக்கியம் பெற்ற தனாதிகாரி பழுவேட்டரையர்தான். இது உலகம் அறிந்ததாயிற்றே!"

"அதுவும் தவறு. உலகம் அப்படி எண்ணுகிறது; இந்தக் கிழவரும் அப்படி எண்ணியே ஏமாந்து போகிறார். நீயும் அந்த ஏமாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறாய். உண்மையில் பழையாறையில் உள்ள பெண் புலிக்குட்டிதான் இந்த ராஜ்யத்தை ஆளுகிறது. அரண்மனைக்குள் இருந்தபடி அந்த கர்வக்காரி சூத்திரக்கயிற்றை இழுத்து எல்லாரையும் ஆட்டி வைக்கப் பார்க்

கிறான்! அவனுடைய கொட்டத்தை நான் அடக்குவேன். அதற்காகவே இந்த வாலிபனை உபயோகப்படுத்திக் கொள்ளப் போகிறேன்..."

ரவிதாஸனுடைய முகத்தில் வியப்புக்கும் மரியாதைக்கும் உரிய அறிகுறிகள் தென்பட்டன.

"நீ பெரிய கைகாரிதான்; சந்தேகம் இல்லை! ஆனால் இதெல்லாம் உண்மை என்பது என்ன நிச்சயம்? உன்னை எப்படி நம்புவது?" என்றான்.

"அந்த வாலிபனை உன்னிடமே ஒப்புவிக்கிறேன். நீயே அவனைச் சுரங்க வழியில் கோட்டைக்கு வெளியே அழைத்துக் கொண்டு போ! கண்ணைக் கட்டி அழைத்துக் கொண்டு போ! பழையாறைக்கு அருகில் சென்று காத்திரு! குந்தவை கொடுக்கும் மறு ஓலையுடன் இங்கே அவனை மீண்டும் அழைத்துக் கொண்டு வா! அவன் தப்பித்துக் கொள்ளப் பார்த்தாலும் உன்னை ஏமாற்றப் பார்த்தாலும் உடனே கொன்று விடு!" என்றாள் நந்தினி.

"வேண்டாம்! வேண்டாம்! நீயும் அவனும் எப்படியாவது போங்கள்! அவனைச் சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் கோட்டைக்குள் இப்போது தேடுகிறார்கள்; வெளியிலும் சீக்கிரத்தில் தேடப் போகிறார்கள். அவனோடு சேர்ந்து போனால் எனக்கும் ஆபத்து வரும். நான் வந்த காரியத்தைப் பற்றிச் சொல்லு!"

"வந்த காரியம் என்னவென்று நீ இன்னமும் தெரிவிக்கவில்லை..."

"காஞ்சிக்கும் இலங்கைக்கும் ஆட்கள் போக ஏற்பாடாகிவிட்டது. இலங்கைக்குப் போகிறவர்கள் பாடு ரொம்பவும் கஷ்டம். அங்கே வெகு சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டும்......"

"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? இன்னும் பொன் வேண்டுமா? உங்களுடைய பொன்னாசைக்கு எல்லையே கிடையாதா?"

"பொன் எங்களுடைய சொந்த உபயோகத்துக்கு அல்ல; எடுத்த காரியத்தை முடிப்பதற்காகத்தான். பின் எதற்காக உன்னை இங்கு விட்டு வைத்திருக்கிறோம்? இலங்கைக்குப் போகிறவர்களுக்குச் சோழ நாட்டுப் பொன் நாணயத்தினால் பயன் இல்லை. இலங்கைப் பொன் இருந்தால் நல்லது..."

"இதைச் சொல்வதற்கு ஏன் இத்தனை நேரம்? நீ கேட்பதற்கு முன்பே நான் எடுத்து வைத்திருக்கிறேன்" என்று நந்தினி கூறி, தான் இருந்த மஞ்சத்தின் அடியில் குனிந்தாள். ஒரு பையை எடுத்து ரவிதாஸன் கையில் தந்தாள். "இது நிறைய இலங்கைப் பொற்காசு இருக்கிறது. எடுத்துக் கொண்டு போ! அவர் வரும் நேரமாகி விட்டது!" என்றாள்.

ரவிதாஸன் பையை வாங்கிக் கொண்டு புறப்பட்டபோது, "கொஞ்சம் பொறு! அந்த வாலிபனைக் கோட்டைக்கு வெளியிலாவது கொண்டு போய் விட்டு விடு! அப்புறம் அவன் வேறு பாதையில் போகட்டும்! சுரங்க வழியை அவனுக்குக் காட்டிக்கொடுக்க எனக்கு விருப்பமில்லை!" என்று சொல்லி விட்டு எழுந்து நின்று, இருண்ட மாளிகைப் பக்கம் பார்த்தாள்.

அங்கே ஒன்றும் தெரியவில்லை. விரல்களினால் சமிக்ஞை செய்தாள்; இலேசாகக் கையைத் தட்டினாள்; ஒன்றிலும் பலன் இல்லை.

அவளும் ரவிதாஸனும் லதா மண்டபப் பாதை வழியாகச் சிறிது தூரம் சென்றார்கள். அந்த பிரம்மாண்டமான இருள் மாளிகையில் அங்கிருந்து பிரவேசிக்கும் வாசலை நெருங்கினார்கள்.

ஆனால் வந்தியத் தேவனைக் காணவில்லை! சுற்று முற்றும் நாலாபுறத்திலும் அவனைக் காணவில்லை!

## அத்தியாயம் 37

# சிம்மங்கள் மோதின!

**ப**ழுவூர்ச் சகோதரர்கள் மீது தஞ்சைபுரி வாசிகள் தனிப்பட்ட அபிமானம் வைத்திருந்தார்கள். அந்தப் பழைய நகருக்குப் புதிய பெருமையும் செல்வாக்கும் அளித்தவர்கள் பழுவேட்டரையர்கள் அல்லவா?

யானை, குதிரை, ஒட்டகைகளுடன் பவனி என்றால், எந்த நாளிலும் ஜனங்



களுக்கு வேடிக்கை பார்ப்பதில் குதூகலந்தான். அதிலும் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் தஞ்சையை விட்டு வெளியே போனாலும் சரி, வெளியே போயிருந்து கோட்டைக்குள் பிரவேசித்தாலும் சரி, வீதியின் இரு புறங்களிலும் ஜனங்கள் திரண்டு நின்று வேடிக்கை பார்ப்பார்கள்; ஜயகோஷம் செய்வார்கள்; வாழ்த்துக் கூறுவார்கள்; பூமாரியும், பொறி மழையும் பொழிவார்கள்.

சாதாரணமாய்ப் பெரிய சகோதரர் வெளியில் போய்விட்டு வந்தால் இளையவர் கோட்டை வாசலில் வந்து நின்று வரவேற்று அழைத்துச் செல்வார்.

அண்ணனும் தம்பியும் ஒருவரையொருவர் கண்டதும் தழுவிக் கொள்ளும் காட்சி நீலகிரியும் பொதிகை மலையும் ஆலிங்கனம் செய்து கொள்வது போலிருக்கும்.

இருவரும் இரண்டு யானைகள் மீதோ அல்லது குதிரைகளின் மீதோ ஏறிக்கொண்டு அருகருகே சென்றார்களானால், அந்தக் காட்சியைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும்.

பழுவூர்ச் சகோதரர்களைச் சிலர் இரணியனுக்கும் இரண்யாட்சனுக்கும் ஒப்பிட்டுப் பேசுவார்கள். இன்னும் சிலர் 'சுந்தோபசுந்தர்கள்' என்பார்கள். இராமரையும் பரதரையும்







ஒத்த அருமைச் சகோதரர்கள் என்றும், வீமனையும் அருச்சுனனையும் ஒத்த வீரச்சகோதரர்கள் என்றும் கூறுவோரும் உண்டு.

ஆனுல் இன்றைக்குப் பெரிய பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்த போது அவருடன் வந்த பரிவாரங்கள் வழக்கமான முழக்கங்களைச் செய்த போதிலும், வீதிகளில் குதூகல ஆரவாரம் இல்லை. ஜனக் கூட்டமும் அதிகமில்லை. சின்னப் பழுவேட்டரையர் கோட்டை வாசலுக்கு அண்ணனை வரவேற்பதற்காக வந்து காத்திருக்கவும் இல்லை.

ஆனுல் தனதிகாரி இதைப் பொருட்படுத்தாமல் நேரே தம்பியின் மாளிகையை நோக்கிச் சென்ருர். ஏதோ ஒரு முக்கியமான காரியத்தில் இளையவன் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று அவர் எண்ணினுர். ஒரு வேளை சக்கரவர்த்தியின் உடல் நிலை ரொம்பக் கேவலமாகிவிட்டதோ, அல்லது......அல்லது, 'பெரிய காரியம்' தான் நடந்துவிட்டதோ என்ற ஐயம் உண்டாயிற்று. ஆகையால், வழக்கத்தை விடத் துரிதமாகவே அவருடைய பரிவார ஊர்வலம் சென்று கோட்டைத் தளபதி சின்ன பழுவேட்டரையரின் மாளிகையை அடைந்தது.

மாளிகை வாசலுக்குத் தமையனை வரவேற்க வந்த தளபதியின் முகத்தில் பரபரப்பும் கவலையும் காணப்பட்டன. தமையனுக்கு வணக்கம் செலுத்திப் பிறகு மார்புறத் தழுவிக் கொண்டார். இருவரும் மாளிகைக்குள் சென்ருர்கள். நேரே அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்துக்குள் பிரவேசித்தார்கள்.

இருவரும் தனிப்பட்டதும், "தம்பி! காலாந்தகா! என்ன ஒரு மாதிரி இருக்கிருய்? ஏதாவது விசேஷம் உண்டா? சக்கரவர்த்தி சுகமா?" என்று தமையனுர் கேட்டார்.

சின்னப் பழுவேட்டரையராகிய கலாந்தக கண்டர், "சக்கரவர்த்தி எப்போதும்போல் இருக்கிருர். அவ

ரது சுகத்தில் அபிவிருத்தியும் இல்லை; சீர்கேடும் இல்லை!" என்றார்.

"பின் ஏன் வாட்டம் அடைந்திருக்கிறது உன் முகம்? ஏன் கோட்டை வாசலுக்கு வரவில்லை? ஊரும் ஒரு மாதிரி சலசலப்புக் குறைந்திருக்கிறதே!" என்று பெரியவர் கேட்டார்.

"அண்ணா! ஒரு சிறு சம்பவம் நடந்திருக்கிறது. பிரமாதம் ஒன்றும் இல்லை. அதைப்பற்றிப் பிற்பாடு சொல்கிறேன். தாங்கள் போன காரியங்களெல்லாம் எப்படி?" என்று காலாந்தக கண்டர் கேட்டார்.

"நான் சென்றிருந்த காரியம் பூரண வெற்றிதான். அழைத்திருந்தவர்கள் அவ்வளவு பேரும் கடம்பூருக்கு வந்திருந்தார்கள். எல்லாரும் ஒரு முகமாக உன் மருமகன் மதுராந்தகனே அடுத்த பட்டத்துக்கு உரியவன் என்று ஒப்புக்கொண்டார்கள். ஜயகோஷத்துடன் ஆமோதித்தார்கள். நியாயத்துக்குக் கட்டுப்படவில்லையென்றால், கத்தி எடுத்துப் போர் செய்து உரிமையை நிலைநாட்டவும் அவ்வளவு பேரும் சித்தமாயிருக்கிறார்கள். கொல்லி மழவனும், வணங்காமுடி முனையரையனும்கூட ஒப்புக்கொண்டார்கள் என்றால், நம்முடைய நோக்கம் நிறைவேறுவதற்குத் தடை என்ன? சம்புவரையர் தம் கோட்டை, கொத்தளம், படை, செல்வம் எல்லாவற்றையும் ஈடுபடுத்தச் சித்தமாயிருக்கிறார். அவருடைய மகன் கந்தமாறன் மிகத் தீவிரமாயிருக்கிறான். நடு நாட்டையும் திருமுனைப்பாடி நாட்டையும் பற்றிக் கவலையேயில்லை. சோழ தேசந்தான் எப்போதும் நம் கையில் இருக்கிறது. வேறு என்ன யோசனை? திருக்கோவலூர் மலையமான், பல்லவன் பார்த்திபேந்திரன், கொடும்பாளூர் வேளான் இந்த மூன்று பேருந்தான் ஒரு வேளை எதிர்க்கக்கூடும். அவர்களில் கொடும்பாளூரான் இங்கில்லை; இலங்கையில் இருக்கிறான். மற்ற இருவராலும் என்ன புரட்டிவிட முடியும்? கூடிய சீக்கிரத்தில் சக்கரவர்த்தியிடம் சொல்லி உடனே முடிவு செய்துவிட வேண்டியதுதான்!" என்றார் பெரிய பழுவேட்டரையர்.

"தலைவர்களைப் பற்றித் தாங்கள் சொல்வதெல்லாம் சரி; ஜனங்கள்? ஜனங்கள் ஆட்சேபித்தால்?" என்று கேட்டார் காலாந்தக கண்டர்.

"ஆகா! ஜனங்களை யார் கேட்கப் போகிறார்கள்? ஜனங்களைக் கேட்டுக்கொண்டா இராஜ்ய காரியங்கள் நடக்கின்றன? ஜனங்கள் ஆட்சேபிக்கத் துணிந்தால், மறுபடியும் அவர்கள் இம்மாதிரி காரியங்களில் பிரவேசிக்காதபடி செய்துவிட வேண்டும். அப்படி ஒன்றும் நேரும் என நான் நினைக்கவில்லை. சக்கரவர்த்தியின் விருப்பம் என்றால் பேசாமல் அடங்கிவிடுவார்கள். மேலும், அருள்மொழிவர்மன் நல்ல வேளையாக இலங்கையில் இருக்கிறான். அவன் இருந்தாலும் ஒரு வேளை ஜனங்கள் தங்கள் குருட்டு அபிமானத்தைக் காட்ட முயல்வார்கள். ஆதித்தகரிகாலன் மீது ஜனங்கள் அவ்வளவு பிரேமை கொண்டிருக்கவில்லை. மதுராந்தகன் மீது அவர்களுடைய அபிமானத்தைத் திருப்புவது சுலபம். 'சிவ பக்தன்' 'உத்தம குணம் படைத்தவன்' என்று ஏற்கெனவே பெயர் வாங்கியிருக்கிறான். சுந்தர சோழரின் புதல்வர்கள் இருவரைக் காட்டிலும் உன் மருமகனுடைய முகத்தில் களை அதிகம் என்பதுதான் உனக்குத் தெரியுமே? 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று கருதும் மூட்டாள் ஜனங்கள் 'மதுராந்தக சக்கரவர்த்தி வாழ்க' என்று கோஷிக்காவிட்டால்தான் ஆச்சரியமாயிருக்கும். எப்படியிருந்தாலும் நான் ஒருவன் இருக்கும்போது உனக்கு என்ன கவலை......?"

"ஆனால் வேளக்காரப் படை இருக்கிறதே? அவர்களை எப்படிச் சமாளிப்பது?"

"வேளக்காரப் படையார் சுந்தர சோழருக்குத்தான் உயிர்ப்பலி விரதம் எடுத்தவர்களே தவிர, அவருடைய பிள்ளைகளுக்கு அல்லவே? அப்படி அவர்கள் குறுக்கிட்டாலும் உன்னுடைய கோட்டைக் காவல் படை எங்கே போயிற்று? ஒரு நாழிகைப் போதில் அவ்வளவு பேரையும் பிடித்துப் பாதாளச் சிறையில் தள்ள வேண்டியதுதானே?"

"அண்ணா! முக்கியமான எதிர்ப்பு பழையாறையிலிருந்துதான் வரும். அந்தக் கிழவியும் குமரியும் சேர்ந்து என்ன சூழ்ச்சி செய்வார்களோ,

தெரியாது. அதைத்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்......"

"தம்பி! காலாந்தகா! போயும் போயும் இரண்டு பெண் பிள்ளைகளுக்கா என்னைப் பயப்படச் சொல்லுகிறாய்? அவர்களுடைய தந்திர மந்திரத்துக்கெல்லாம் மாற்று என்னிடம் இருக்கிறது. கவலைப்படாதே!"

"இரண்டு பிள்ளைகளையும் தஞ்சைக்கு வரும்படி அழைப்பு அனுப்ப வேண்டும் என்று சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார்......"

"ஆதித்த கரிகாலன் வரமாட்டான். ஒருவேளை அருள்மொழி தந்தை கட்டளைப்படி புறப்பட்டு வருவான். வந்தால், அவனைத் தடுக்க வேண்டியதுதான்! மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிச் சிம்மாசனத்தில் சகல அதிகாரங்களுடன் ஏற்றிய பிறகுதான் அவர்கள் இருவரும் வந்தால் வரலாம். அதற்கு முன் வரக் கூடாது. இதை என்னிடம் விட்டுவிடு! மற்றப்படி நீ என்னமோ சிறிய விசேஷம் இங்கே நடந்ததாகச் சொன்னாயே, அது என்ன?"

"காஞ்சியிலிருந்து வாலிபன் ஒருவன் வந்தான். சக்கரவர்த்திக்கு ஒரு ஓலையும் குந்தவைக்கு ஒரு ஓலையும் கொண்டு வந்தான்......"

"அவனை என்ன செய்தாய்? ஓலைகளைப் பிடுங்கிக் கொண்டு அவனைச் சிறைப் படுத்தியிருக்கிறாய் அல்லவா?"

"இல்லை, அண்ணா! கடம்பூரில் தங்களைப் பார்த்ததாகவும், சக்கரவர்த்தியிடம் நேரில் கொடுக்கச் சொன்னதாகவும் கூறினான். அது உண்மையா?"

"ஆகா! வெறும் பொய்! கடம்பூரில் அழையாத வாலிபன் ஒருவன்,— கந்தமாறனின் சிநேகிதன் என்று சொல்லிக் கொண்டு வந்திருந்தான். ஆனால் ஓலைகொண்டு வந்திருப்பதாக என்னிடம் சொல்லவே இல்லையே! அவன் முகத்தைப் பார்த்ததுமே சந்தேகித்தேன். அவனிடம் நீ ஏமாந்து போய்விட்டாயா, என்ன?"

"ஆம், அண்ணா! ஏமாந்துதான் போய்விட்டேன். தங்கள் பெயரைச் சொன்னதால் ஏமாந்தேன்."

"அட மூடா! ஏமாந்து என்ன செய்தாய்? ஓலையைச் சக்கரவர்த்தியிடம் கொடுத்து விட்டாயா? அதைப் பார்க்கக்கூட இல்லையா?"

"பார்த்தேன். அதில் ஒன்றுமில்லை. காஞ்சி பொன் மாளிகைக்கு வரும்படிதான் எழுதியிருந்தது. ஓலையைக் கொடுத்து விட்டு அந்த வாலிபன் ஏதோ 'அபாயம்' என்று சொல்லிக் கொண்டிருந்தான்......"

"பிறகாவது, சந்தேகித்துச் சிறைப் படுத்த வில்லையா?"

"சந்தேகித்தேன்; ஆனால் சிறைப் படுத்தவில்லை!"

"பின்னே, என்ன செய்தாய்?"

"ஊர் பார்க்க வேண்டும் என்றான். பார்த்து விட்டு வரட்டும் என்று இரண்டு ஆளையும் பின்னோடு அனுப்பினேன். அவர்களை ஏமாற்றி விட்டு மறைந்து விட்டான். அவனைத் தேடுவதற்குத்தான் ஏற்பாடு செய்து கொண்டிருந்தேன். அதனால்தான் கோட்டை வாசலுக்குக்கூட வரவில்லை! நகர மக்களுக்கும் எச்சரிக்கை செய்திருக்கிறேன்......"

"அடசீ! நீயும் ஒரு மனிதனா? மீசை முளைக்காத ஒரு சிறு பிள்ளையிடமா ஏமாந்து போனாய்? உனக்குக் காலாந்தக கண்டன் என்று பெயர் வைத்தேனே, என் முட்டாள்தனத்தை நொந்து கொள்ள வேண்டும். உன்னைக் கோட்டைத் தளபதியாக்கினேனே? எனக்கு இது வேண்டியதுதான்! என் பெயரைச் சொல்லி ஒரு தறிதலைப் பயல் உன்னை ஏமாற்றிவிட்டான் என்று சொல்லிக் கொள்ள வெட்கமாயில்லையா?"

"வெறுமனே உங்கள் பெயரைச் சொன்னதோடு இல்லை. உங்கள் முத்திரை மோதிரத்தையும் காட்டினான். அதை அவனுக்கு நீங்கள் கொடுத்தீர்களா?"

"இல்லவே இல்லை! அப்படியெல்லாம் ஏமாற்றி விட நான் உன்னைப் போல் ஏமாளியா?"

"அவனிடம் முத்திரை மோதிரம் இருந்தது உண்மை. என்னிடமும் காட்டினான். கோட்டை வாசல் காவலர்களிடமும் காட்டி விட்டுத்தான் உள்ளே புகுந்தான். நீங்கள் கொடுத்திராவிட்டால், இன்னும் ஒரே ஒரு இடத்திலிருந்துதான் அதை அவன் பெற்றிருக்க முடியும்."

"யாரைச் சொல்கிறாய்?"

"தங்களால் ஊகிக்க முடியவில்லையா? இளைய ராணியைத்தான் சொல்கிறேன்......"

"சீச்சீ! ஜாக்கிரதை! நாக்கை அறுத்து விடுவேன்!"

"நாக்கை அறுத்தாலும் அறுங்கள்; தலையைக் கொய்தாலும் கொய்யுங்கள். வெகு நாளாய்ச் சொல்ல விரும்பியதை இப்போது சொல்லி விடுகிறேன். விஷநாகத்தை அழகா யிருக்கிறது என்று எண்ணி வீட்டில் கொண்டு வைத்து வளர்க்கிறீர்கள். அது ஒரு நாள் கடிக்கத்தான் போகிறது. நம் எல்லாரையும் நாசம் செய்யப் போகிறது! வேண்டாம்! அவளைத் துரத்திவிட்டு மறு காரியம் பாருங்கள்!"

"காலாந்தக கண்டா! வெகு நாளாக உனக்குச் சொல்ல எண்ணியிருந்த ஒரு விஷயத்தை நானும் உனக்கு இன்று சொல்லுகிறேன். வேறு எந்தக் காரியத்தைப் பற்றி வேண்டுமானாலும் உன் அபிப்பிராயத்தை நீ தாராளமாய்ச் சொல்லலாம். என் காரியம் பிடிக்காவிட்டால் தைரியமாகக் கண்டித்துப் பேசலாம். ஆனால் நான் கைப் பிடித்து மணந்துகொண்டவளைப் பற்றிக் குறைவாக இனி எப்போதேனும் ஒரு வார்த்தை சொன்னாலும் சரி; உன்னை வளர்த்த இதே கையினால் உன்னைக் கொன்றுவிடுவேன். உனக்குக் கத்தி பிடிக்கச் சொல்லிக் கொடுத்த நான் உன் கத்தியைப் பிடுங்கியே உன்னை வெட்டிக் கொல்லுவேன்! ஜாக்கிரதை!"

அந்த இரு சகோதரர்களும் அப்போது போட்டுக் கொண்ட ஆத்திரச் சொற்போர் சிங்கமும் சிங்கமும் மோதிப் பயங்கரமான சண்டை பிடிப்பது போலவே இருந்தது. அவர்களுடைய குரலும் சிம்ம கர்ஜனையைப் போலவே முழங்கிற்று. அவர்கள் பேசியது அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்தில்தான் என்றாலும், வெளியில் காத்திருந்தவர்களுக்கெல்லாம் அவர்களுடைய குரல் விவரம் இன்னதென்று தெரியாமல் இடி முழக்கம் போல் கேட்டது. அனைவரும் 'என்ன விபரீதமோ' என்று நடுங்கிக் கொண்டிருந்தார்கள். (தொடரும்)




# காகித உலகத்தில் ஒரு புரட்சி

சென்ற பிப்ரவரி மாதம் 28-ந் தேதி தமிழ் நாட்டில் ஒரு மாபெரும் புரட்சி நடந்தது!

"அது என்ன புரட்சி? எங்கே நடந்தது? எத்தனை பேர் காய மடைந்தார்கள்?" என்றெல்லாம் வாசகர்கள் தெரிந்துகொள்வதற்கு ஆத்திரமடைவதை உணர்கிறேன். ஆகையால் விஷயத்தை உடனே சொல்லி நேயர்களின் விருவிருப்பை அதிகமாக்க ஆசைப்படுகிறேன்.

அரசியல் புரட்சி இல்லை; தொழிலாளர்கள் புரட்சி இல்லை: முதலாளிகள் புரட்சியும் இல்லை. ஆனால் பொருளாதாரப் புரட்சி.

தமிழ் நாட்டில் புதுக்கோட்டைத் தாலுகா ராயவரம் என்ற ஊரில் பிறந்து வளர்ந்த ஸ்ரீமான் பெரியண்ணன் செட்டியார் செய்த புரட்சி!

பனை மட்டையிலிருந்து அருமையான காகிதம் செய்யலாம் என்று அவர் கண்டு பிடித்தார். ஒன்றுக்கும் உபயோகப் படாத பனை மட்டையைப் பணமாகச் செய்யலாம் என்று காட்டினார்.

சென்ற பத்து வருஷங்களாக பாடுபட்டு ஏராளமான பொருட் செலவு செய்து கடைசியில் சென்ற மாதம் 28-ந் தேதி தமது லக்ஷியத்தை நிறைவேற்றினார்.

புதுக்கோட்டை தாலுகா ராயவரம் என்ற ஊரில் 'புதுக்கோட்டை பேப்பர் மில்ஸ் லிமிடெட்' என்ற பெயரில் ஒரு காகித உற்பத்திசாலை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். சென்ற மாதம் 28-ந் தேதி ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் தலைமையில் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் அந்த ஆலையைத் திறந்து வைத்தார்கள்.

அன்று சுமார் 2-30 மணிக்கு விழா ஆரம்பமாயிற்று.

முதலில் பேப்பர் மில் டைரக்டரான ஸ்ரீமான் PV. RM. குழந்தையன் செட்டியார் அவர்கள் ரஸிகமணி டி. கே. சி. அவர்களுக்கு உபசாரப் பத்திரம் வாசித்தளித்தார்கள். உணர்ச்சி பாவம் ததும்ப ஸ்ரீ குழந்தையன் செட்டியார் அவர்கள் உபசாரப் பத்திரம் வாசித்த போது சபையே உணர்ச்சி மயமாகக் காணப்பட்டது.

பின்பு ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களை வரவேற்று ஸ்ரீமான் சக்தி செட்டியார் அவர்கள் அருமையாக உபசாரப் பத்திரம் வாசித்தளித்தார்கள். ராஜா சர் அவர்கள் மேல் நகரத்தாருக்கு உள்ள நன் மதிப்பைக் காட்ட அந்த வரவேற்பு என்றும் சான்றாக விற்கும்.

"நான் சிறு பையனாக இருக்கும்போது அயர்லாந்திலிருந்துதான் காகிதம் வரும். அந்தக் காலத்தில் எப்போதாவது காகிதத்தை நாங்கள் பார்ப்போம். 'ஆகா! இப்படியும் செய்கிறார்களே காகிதம்? இது எப்படிச் செய்கிறார்களோ?' என்று தெரிந்துகொள்ள ஆசையாக இருக்கும். அந்த ஆசை அறுபது வருஷங்களுக்குப் பின்பு இன்று குழந்தையன் செட்டியார் அவர்களால் பூர்த்தியாயிற்று" என்று தம் தலைமைப் பிரசங்கத்தை ஆரம்பித்தார்கள் டி. கே. சி. அவர்கள்.

"இதோ இந்தப் பேப்பர் மில்தான் கலாசாலை; சர்வகலாசாலை. இந்தக் காகித மில்லுக்கு வந்து எதனால் எப்படி காகிதம் செய்கிறார்கள் என்று படிப்பதுதான் படிப்பு என்று நான் சொல்லுவேன். இந்த ஒரு படிப்பு படித்து விட்டால் போதும். எல்லாப் படிப்பும் தானாக வரும்" என்று உணர்ச்சி ததும்பப் பேசினார்கள்.

"பனை மட்டையால் காகிதம்-இவ்வளவு அற்புதமான காகிதம், செய்யலாம் என்று கண்டுபிடித்த பெரியண்ணன் செட்டியார் ஒரு தப்பு செய்தார். அதாவது இந்த தேசத்தில் பிறந்து விட்டார். இப்பேர்ப்பட்ட காரியம் சாதித்தவர் மேல் நாட்டில் மட்டும் பிறந்திருந்தால் அவருக்குச் சர்க்கார் எத்தனையோ உதவி செய்து நாள் ஒன்றுக்கு 500 டன் காகிதம் உற்பத்தி செய்ய சகல வசதிகளும் செய்து கொடுத்திருக்கும்" என்றார்கள்.



பின்பு ராஜா சர் அவர்கள், "நகரத்தார் வெளி நாட்டில் போட்டிருக்கும் மூலதனத்தை நம் தாய் நாட்டில் கொண்டு வந்து போட்டுச் செட்டி நாட்டையே ஒரு பெரிய ஆலை நிறைந்த நாடாக்க வேண்டும். நம்மைச் சுற்றி யிருக்கும் ஏழை மக்களைக் காப்பாற்ற இதைத் தவிர வேறு வழியில்லை. இந்தப் பேப்பர் மில் வளர்ந்து ஓங்க வேண்டுமென்று எல்லாம் வல்ல

# புதுக்கோட்டைக் காகித மில் திறப்பு விழா



(வலதுபுறமிருந்து):—ராஜா ஸர் முத்தையா செட்டியார், மில் டைரக்டர் ஸ்ரீ குழந்தையன் செட்டியார், ரஸிகமணி டி. கே. சி., மற்றொரு டைரக்டர் ஸ்ரீ சக்தி செட்டியார், தொழில் நிபுணர் ஸ்ரீ பெரியண்ணன் செட்டியார்.

இறைவனை வேண்டுகிறேன்" என்று சொல்லிப் பேப்பர் மில்லைத் திறந்து வைத்தார்கள்.

நிசப்தம் குடிகொண் டிருந்த அந்தச் சின்னஞ் சிறு ஊரில் "காகிதம் செய்வோம் — நல்ல காகிதம் செய்வோம்" என்று பாடிக்கொண்டு பேப்பர் மில் வேலை செய்யத் தொடங்கியது.

முதலில் பனை மட்டையை ஒரு மிஷினில் கொடுக்கிறார்கள். அந்த மிஷின் ஒரு நொடியில் மட்டையைச் சின்னச் சின்னத் துண்டுகளாக ஆக்கிவிடுகிறது. அந்தத் துண்டுகளை பெரிய அண்டாவில் போட்டு வேக வைக்கிறார்கள். நன்றாக வெந்ததும் ஒரு வட்டத் தொட்டியில் போடுகிறார்கள். அந்தத் தொட்டியில் மின்சாரத்தின் உதவியால் தண்ணீர் வேகமாகச் சுற்றிக் கொண்டே இருக்கிறது. ஒரு வகை மிருதுத் தன்மை அடைந்ததும் இன்னொரு தொட்டிக்கு மாற்றப்படுகிறது. இப்படி எட்டுத் தொட்டிகளில் மாற்றி மாற்றிக் கடைசியில் கூழ் ஆகிறது.

கூழ் ஆனதும் கலர் சேர்க்கிறார்கள். அதன் பிறகு ஒரு பிரம்மாண்டமான மிஷினில் தண்ணீர் கூழாக அகன்று போகிறது. கொஞ்சதூரம் சென்றதும் முதலில் தண்ணீர் வடிக்கப்படுகிறது. பிறகு சிறிது சிறிதாகக் காய்ந்து நல்ல பேப்பராக வந்து விடுகிறது.

தற்சமயம் நாள் ஒன்றுக்கு இரண்டு டன் பேப்பர் உற்பத்தி ஆகிறது. அதன் இன்றைய விலை சுமார் 3,500 ரூபாய்.

நாள் ஒன்றுக்கு 20,000-க்கு மேற்பட்ட பனை மட்டைகள் வேண்டியிருக்கிறது. 1,000 பனை மட்டைக்கு இப்போது 11-0-0 ரூபாய் விலை தருகிறார்கள். இதற்கு முன் பனை மரத்தில் உபயோகமே இல்லாமல் வீசி எறியப்பட்ட பனை மட்டை இன்று காகிதமாக மாறி அந்தத் தாலுக்காவிலுள்ள எத்தனையோ ஏழைகளை நல்வாழ்வு பெறச் செய்திருப்பது ஒரு பொருளாதாரப் புரட்சியே அல்லவா?

இந்தப் பேப்பர் மில் நல்ல முறையில் வேலை செய்வதற்கு ஊக்கத்துடன் உழைத்துப் பாடுபட்டுவரும் மானேஜர் சீனிவாசன் அவர்களைப் பெரிதும் பாராட்ட வேண்டும்.

# ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

## 26. சந்தேக விளக்கம்

குடும்ப வாழ்க்கை நடத்தி வருபவர்கள் ஆசனம் பழகாமல் விலக்கக் கூடிய நாள் ஏதாவது உண்டா?

ஆசனத்தை வருஷம் முந்நூற்று அறுபத்து ஐந்து நாளும் செய்யலாம். எந்தக் காரணத்தைக் கொண்டும், காரியத்தைக் கொண்டும் விலக்க வேண்டிய அவசியமில்லை. ஸ்திரீகள் மட்டும் மாத விலக்காய் இருக்கும் நாட்களைத் தவிர மற்ற நாட்களிலெல்லாம் விடாமல் செய்யலாம். கர்ப்ப ஸ்திரீகள் புதிதாய் ஆசனம் பழக ஆரம்பிக்கக் கூடாது. வழக்கமாகச் செய்துவரும் ஸ்திரீகள் கர்ப்பங் கொண்டால் இரண்டு மூன்று மாதம் வரைதான் செய்யலாம். பிறகு சிலவற்றை விட வேண்டிவரும். அவைகளை அந்தந்த ஆசனங்களைப் பற்றிய கட்டுரையில் விவரமாக எழுதுகிறேன்.

ஆசனத்தைக் காலையில் பழகுவது நல்லதா? காலையில் பழகுவதுதான் சிலாக்கியம். காலையில் பழகுபவர்களுக்குக் கட்டாயம் வயிறு காலியாய்த்தான் இருக்கும். மாலையில் அப்படிச் சொல்ல முடியாது. மாலையில் அல்லது இரவில் செய்யப் பிரியப்படுகிறவர்கள், வயிறு காலியாய் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். சிற்றுண்டியாய் இருந்தால் நான்கு மணி நேரத்துக்குப் பிறகும், முழு ஆகாரமாய் இருந்தால் ஆறு மணி நேரம் ஆனபிறகே ஆசனம் போடலாம். ஆசனம் செய்த உடனே சாப்பிடக் கூடாது. அரை மணி நேரமான பின் சாப்பிடலாம்.

எண்ணெய் ஸ்நானம் செய்த அன்று ஆசனம் செய்யலாமா? ஆசனம் செய்துவிட்டு அரைமணி நேரம் பின் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் பண்ணலாம். ஆனால் எண்ணெய் ஸ்நானம் முதலில் செய்துவிட்டுப் பிறகு ஆசனம் செய்யக் கூடாது.


உலகில் பல நாட்டவர்கள் எண்ணெய் ஸ்நானம் செய்வதில்லை. நம்மைப் போல எண்ணெய் தேய்த்துக் குளிப்பதென்பதும் கிடையாது. ஏன்? நம் தேசத்திலேயே வட நாட்டவர்களுக்கு அவ்வழக்கமே இல்லை. நமது தென்னாட்டில் மட்டும்தான் அந்த வழக்கம். நமது ஆகாரத்திற்கு அது அவசியமாகும். கோதுமை சேர்த்துக் கொள்பவர்களுக்கு அது அவசியமில்லை. நாம் அரிசியையே சாப்பிடுகிறோம். அரிசி ஆகாரம் சருமத்தை அவ்வளவு பளபளப்பாய் வைத்துக் கொள்ளாது. கூட புளியையும் நாம் அதிகமாய் உபயோகிப்பதால் இரத்தம் வறண்டு போய் சருமம் அவர்களைப் போல இருப்பது இல்லை. எண்ணெய் ஸ்நானம் அந்தக் குறைகளை நீக்குகிறது.

எண்ணெய் ஸ்நானத்திற்கு வெந்நீர் நல்லதா? குளிர்ந்த ஜலம் நல்லதா?


சாதாரணமாய்க் குளிர்ந்த ஜலம்தான் ஆரோக்கியத்திற்கு ஏற்றது. சிறு குழந்தைகள், வயது முதிர்ந்தவர்கள், பலஹீனமானவர்கள், நோயாளிகள் தவிர, மற்றவர்கள் எல்லோரும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் பண்ணலாம். மழை, பனிக் காலத்தில் கூட குளிர்ந்த ஜலத்தில் குளிப்பதுதான் நல்லது. அதிகமான குளிர்ப் பிரதேசங்களில் அதாவது 60, 55 டிகிரிக்குக் குறைந்த பிரதேசங்களில் வெந்நீரில்தான் குளிக்க வேண்டும். வெந்நீர் உபயோகிப்பவர்களும் சாதாரணமாய் வெதுவெதுப்பான நீரில், அதாவது நமது உடம்பின் சூடளவு சுமார் 98 டிகிரி நீரில் குளிக்கலாம். சுடச்சுட, பொறுக்கப் பொறுக்க உபயோகிக்கக் கூடாது.

தினமும் தலை முழுக்கு. அதாவது எண்ணெய் தேய்க்காமல் தலையில் ஜலம் கொட்டிக்கொண்டு செய்வது நல்லதா? உடம்பு மட்டும் குளித்தால் போதுமா?

## ஸென்ஸஸ் ஹாஸ்யம் - 1



# ஸென்ஸஸ் ஹாஸ்யம் - 2




இதை அவரவர்கள் இஷ்டம் போல் செய்யலாம். தலைக்குக் கூட சேர்த்துக் குளிப்பதுதான் நல்லது. இது சிலருக்குப் பிடிக்காது. தலைமுடி நிறைய இருப்பவர்களுக்குக் கஷ்டமாய் இருக்கும். முக்கியமாய் ஸ்திரீகளுக்குக் கஷ்டமாய் இருக்கும். ஆகவே எப்படியும் அவரவர்கள் சௌகரியப்படி செய்யலாம். ஆனால் வாரத்திற்கு ஒரு முறையாவது எண்ணெயைத் தலை முதல் உடல் பூராவும் தேய்த்துக் குளிப்பது நல்லது.

வாசனை எண்ணெய்கள், தைலங்கள் தேய்த்து ஸ்நானம் பண்ணலாமா?

இவைகளை சௌகரிய முள்ளவர்களால் தான் பண்ண முடியும். இந்தக் காலத்தில் இவைகளெல்லாம் சுத்தமான நல்லெண்ணெயிலேயோ அல்லது தேங்காய் எண்ணெயிலேயோ தயாரிப்பது கிடையாது. அனேகமாய் மினரல் ஆயில் என்று சொல்லும் நிலக்கரியிலிருந்து கிடைக்கும் ஒருவித வாசனையற்ற எண்ணெயைக் கொண்டு தயாரிப்பார்கள். அசல் வாசனையைச் சேர்ப்பது இல்லை. பலவித ரசாயன முறைகளால் செய்யப்பட்ட செண்டுகளைக் கலப்பதாலும், வயதைக்காட்டிலும் சீக்கிரமாக முடி நரைத்துவிடும், உதிர்ந்துவிடும். நல்லெண்ணெயே அப்பட்டமாகக் கிடைக்காத இந்தக் காலத்தில் இவைகளுக்கெல்லாம் வீணே பணத்தை விரயம் செய்வானேன். இவைகள் எல்லாம் மண்டையிலுள்ள ஜீவ அணுக்களை நசிக்கச் செய்யும். சுத்தமான நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய்தான் ஸ்நானத்திற்கோ தலைக்குத் தடவி வாரிக் கொள்வதற்கோ நல்லது. அப்படி வாசனை வேண்டுமானால், புஷ்பங்களைக் கொண்டு வீட்டில் சௌகரியமுள்ளவர்கள் தயாரித்துக் கொள்ளுங்கள்.

உடம்பு தேய்த்து ஸ்நானம் பண்ணுவதற்குச் சோப்பு நல்லதா?

சோப்புகளெல்லாம் சில வருஷங்களாகத்தான் உபயோகிக்கிறார்கள். அவை வாசனையாய் இருப்பதாலும், உபயோகிக்க சௌகரியமாய் இருப்பதாலும் எல்லோரும் விரும்புகின்றனர். அது ஒரு நாகரிகமாய்ப் போய் விட்டது. ஆனால் பாசிப் பயிறு மாவு, கடலை மாவின் குணம் இவைகளுக்கு வருமா? வேண்டுமானால் அந்த மாவில் சந்தனத் தூளைச் சேர்த்துக் கலந்து வைத்துக் கொண்டு தேய்த்துக் குளித்துப் பாருங்கள். சந்தன சோப்புப் போட்டுத் தேய்த்துக் குளிப்பதைவிட வாசனையாய் இருக்கும். நலங்கு சாமான் பொடியைச் சேர்த்துக் கலந்தும் உபயோகிக்கலாம்.

சோப்பில் காஸ்டிக் சோடா சேருகிறது. காஸ்டிக் சோடா அழுக்கை எடுத்தாலும் அது நாளடைவில் சருமத்தை வளரச் செய்து, மயிர்க்கால்கள் சுருங்கச் செய்யும். காஸ்டிக் சோடா ஜலத்தில் ஒரு சொட்டைச் சருமத்தில் எங்கேயாவது ஒரு இடத்தில் வைத்துப் பாருங்கள்! அந்த இடத்திலுள்ள சதையைத் தின்றுவிடும். அப்பேர்ப்பட்ட வஸ்துவைப் பலவித எண்ணெய்களுடன் சேர்த்துச் செய்வதால் அதன் வேகம் குறைகிறது. அது துணிகளை வெளுக்கவும், மற்ற உபயோகத்திற்கும் நல்லதே தவிர, மிருதுவான சருமத்திற்கும் ஏற்றதல்ல. சிலர் தலைக்குக் கூட அவைகளைப் போட்டுத் தேய்ப்பார்கள். சீக்கிரம் மயிர் நரைப்பதற்குக் காரணம் வேறு தேட வேண்டியதில்லை.

வியாபாரம் பெருத்தும் அவைகளில் கூடச் சுத்த எண்ணெய் கலப்பதில்லை. கொழுப்புகளைக் கலக்கிறார்கள். சில சோப்புகளை உபயோகித்தால் சுகந்த மணத்திற்குப் பதில் லேசாய் ஒருவித கொழுப்பு நாற்றம் உண்டாவதை அறியலாம்.

குளிர் காலத்தில் சோப்பை உபயோகிப்பதனால் இன்னும் சருமம் வறண்டு அங்கங்கு வெளுப்புத்தட்டி, மர மரப்பாய்ப் போய் விடுகிறது. அதை மறைக்கக் கிரீம்கள், ஸ்நோக்கள், பவுடர்கள் வேறு உபயோகிக்கிறார்கள். இயற்கைத் தோற்றத்தைக் காண முடிவதில்லை. எல்லாம் வேஷ மயமாய் விட்டது. ஆசனங்களைப் பழகி, ஆரோக்கிய வழியைக் கடைப்பிடித்து, இயற்கைப்படி வாழுபவர்களுக்கு இவைகளெல்லாம் தேவையில்லை. ஆரோக்கிய தேஜஸ்; அழகுக் களை முகத்தில் தாண்டவமாடும். (தொடரும்)

# ரதியா

கமல் ஜோஷி



ஹரிசன் ரோட்டுக்கு வடக்கே ஒரு நீண்ட சந்து போகிறதே, அங்கேதான் ரதியாவின் அவல், பட்டாணி, வேர்க்கடலைக் கடை இருக்கிறது. அவள் கடையிலே ஒரு கயிற்றில் பழுத்தோ பழுக்காமலோ அல்லது அழுகிப் போயோ சில வாழைப் பழச் சீப்புக்களும் தொங்கிக் கொண்டிருக்கும்.

ஓட்டு வீடு, சின்னக்கடை. அந்தக் கடையின் ஒரு மூலையில்தான் ரதியா கடலை வறுக்கிறள், பொரி பொரிக்கிறள். அவள் கடைக்கு நல்ல விற்பனையும்கூட. எப்பொழுது பார்த்தாலும் அவள் கடையிலே சின்னஞ்சிறு குழந்தைகளும் வேலைக்காரர்களும், வேலைக்காரிகளும் ஈ போல் மொய்த்தவண்ணம் இருந்தனர்.

திடீரென்று ஒரு நாள் ஜனங்கள் பத்திரிகைகளில் அவள் மரணச் செய்தியைப் படித்தனர். அந்தச் செய்தி அவர்களுக்கு மிகவும் ஆச்சரியத்தை விளைவித்தது.

கடலையும் பட்டாணியும் அவலும் விற்கும் ரதியாவின் மரணச் செய்தி உண்மையிலேயே பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. பெரிய பெரிய தனவான்களும் சீமான்களும் இறந்தால் பிரசுரிக்கிறர்களே, துயரம் என்னும் அந்தப் பத்தியில் அவள் பெயர் பிரசுரமாகவில்லை. கோர்ட்டு நடவடிக்கைகள் என்று போடப்பட்டிருக்குமே, அந்தப் பத்தியில்தான் 'ரதியா கொலை செய்யப் பட்டாள்!' என்னும் செய்தி பிரசுரமாகி யிருந்தது.

ரதியா ரொம்ப நாட்களாக அதே தெருவில்தான் இருந்தாள். அவள் பேச்சில் யாரையும் மயக்கி விடக் கூடியவள் அல்ல; இருந்தாலும் ஜனங்கள் அவளிடம் அப்படி யென்ன குணத்தைக் கண்டு விட்டார்களோ, தெரியவில்லை! அவளுக்கு அலாதி மதிப்புக் கொடுத்து வந்தனர். ரதியாவுக்குப் பரோபகார சிந்தனை அதிகம். ஜனங்களுக்கு ஆபத்து சம்பத்து ஏற்படும்பொழுது அவள் தன்னாலியன்ற உதவியைக் கட்டாயம் செய்வாள். துன்பப்படுபவர்களைக் கண்டால், அவளால் கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க முடியாது. ஆகவே அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து அவளுக்கு அழைப்பு வந்த வண்ணமே இருக்கும்.

அப்படி இருக்கும் பொழுது அவள் இறந்து விட்டாள் என்ற செய்தி ஜனங்களுக்கு வருத்தத்தை அளிப்பது இயல்புதானே!

ஆனல் கொலைக்குக் காரணம் என்ன! அவளைக் கொலை செய்தது யார்! அவள் என்ன குற்றம் செய்தாள்! இதைப் பற்றி யெல்லாம் யாருக்காவது ஏதாவது தெரிந்திருந்தால்தானே!

ரதியாவுக்குக் கிட்டத்தட்ட வயது நாற்பது இருக்கும். இந்த வயதில் அவளுடைய தேகம் இருக்கும் நிலையைப் பார்த்தால், அவள் தன் வயதுக் காலத்தில் மிகவும் நல்ல அழகியாக இருந்திருக்க வேண்டும் என்பதைப் பார்க்காமலே சொல்லிவிடலாம். அவள் தன் கிராமத்திலிருந்து இந்தப் பெரிய பட்டணத்துக்கு எப்பொழுது வந்தாள் என்பது ஒரு வேளை அவளுக்கே நினைவிருக்குமோ, இருக்காதோ! தான் யாருடன் வந்தோம் என்பதைக் கூட அவள் மறந்திருக்க வேண்டும்.

அங்கே வந்த பின்னர் அவள் என்ன என்னவெல்லாமோ வேலைகள் செய்தாள். அதற்கப்புறம் எல்லாவற்றுக்கும் கடைசியாக அந்தத் தெருவில் கடலை, பட்டாணிக் கடை வைத்தாள். அவள் அந்தக் கடையை ஆரம்பித்த பொழுது, அவளுக்கு ஒரு பிள்ளை இருந்தான்.

அவளும் அவள் பிள்ளை ராமுவும் அந்த ஓட்டு வீட்டிலே இரண்டு அறைகள் வாடகை எடுத்துக்கொண்டு வசித்து வந்தனர். வாசல் புறத்து அறைதான் கடை. உள்புறத்து அறையைத் தன் உபயோகத்துக்கு வைத்துக் கொண்டிருந்தாள். அங்கேதான் அவள் படுப்பது வழக்கம். கடையிலே பொரி பொரிப்பதற்காகவும் கடலை வறுப்பதற்காகவும் வைத்திருந்த அடுப்பிலேயே தனக்கு வேண்டிய சமையலையும் அவள் சமைத்துக் கொண்டுவிடுவாள்.

ராமுவுக்குப் பதினெட்டுப் பத்தொன்பது வயதாயிற்று. அம்மாவைப் போல் அழகில்லை என்றாலும், அவனைக் கறுப்பு என்று சொல்லி விடமுடியாது. ஒல்லியான ஒற்றை நாடியான சரீரம். சட்டையைக் கழற்றி விட்டால் மார்பு எலும்புகளை எண்ணி விடலாம். தலையிலே கட்டைக் குட்டையான மயிர். ஒரு டீக் கடையில் வேலை செய்து கொண்டிருந்தான்.

இவ்வளவுதான் குடும்பம். இப்படி இருக்கும் பொழுது ரதியாவைக் கொலை செய்தவன் யாராயிருக்கலாம்!

கொஞ்ச நாட்களாகவே அம்மாவுக்கும் பிள்ளைக்கும் சண்டை.

ராமு வீட்டுக்கு வருவதே ரொம்பக் குறைச்சல். அவன் குளிப்பது, சாப்பிடுவது எல்லாம் அவன் வேலை பார்த்துவந்த டீக்கடையிலேயே தான்! என்றைக்காவது பகல் வேளை

யில் இளைப்பாறுவதற்காக அவன் வீட்டுக்கு வருவது உண்டு. சில நாட்கள் வீட்டுப் பக்கமே எட்டிப் பார்ப்பதில்லை. அப்புறம் சாயந்திரம் புறப்பட்டு விட்டால் இரவு வருவதேயில்லை. எங்கே தங்குகிறான், எங்கே தூங்குகிறான் என்று யாருக்குமே தெரியாது. கேட்டால், கடையிலேயே தூங்குவதற்கு நல்ல வசதி இருக்கிறது என்று சொல்லுவான். இன்று வரை அவன் டீக்கடையில் வாங்கும் சம்பளத்தில் தம்பிடி கூடத் தாயாரிடம் கொண்டுவந்து கொடுத்தது கிடையாது.



டீக்கடையில் என்ன ஆயிற்றோ, தெரியவில்லை! சில நாட்களாக அவன் தினந்தோறும் விடாமல் பகல் வேளைகளில் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான்.

அன்று வந்து சிறிது நேரம் தாயாரிடம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்து விட்டு, "அம்மா! தெரு மூலையிலே ஜகந்நாதனுடைய டீக்கடை இருக்கிறதே, தெரியுமா! அது விற்பனைக்கு வந்திருக்கிறது!" என்றான்.

"ஏன்! வியாபாரம் சரியாக நடக்கவில்லையோ!"

"அவன் சுத்த அசடு. இல்லாவிட்டால் இவ்வளவு நல்ல இடத்தில் இருக்கும் கடைக்கு வியாபாரம் ஆகாமல் போகுமா! பக்கத்திலே பெரிய பெரிய காலேஜாக மூன்று காலேஜ்கள் இருக்கின்றன. நல்ல வியாபாரமாக இல்லாமற் போனாலும் ஏதோ சாப்பாட்டுக்காவது கட்டாமல் இருக்காது!"

"அப்படியானால் அவன் ஏன் விற்கிறான்!"

"அவனுக்குப் பணம் வேண்டியிருக்கிறது. யாராவது ஐம்பது ரூபாய் கொடுத்தால் மேஜை நாற்காலிகளை விற்று விடுவதாகச் சொல்லுகிறான். கேட்டாயா, அம்மா! ஐம்பதே ஐம்பது ரூபாய்தானும்!" என்றான்.

ரதியா ஒன்றும் பதில் பேசவில்லை.

"என்னிடம் மட்டும் பணம் இருந்தால் அதை வாங்கிப் போட்டுவிடுவேன்!"

"உன்னிடம் பணம் இல்லாமல் என்ன! இவ்வளவு நாட்களாக நீயும்தான் எங்கேயோ வேலை செய்து கொண்டிருக்கிறாய். உன் சம்பாத்தியத்தில் ஒரு செல்லாக் காசு கூட நீ என் கண்ணில் காட்டியதில்லை. அந்த ரூபாய் எல்லாம் எங்கே போய் விட்டது!"

"பணம் எங்கே மிச்சம் இருக்கிறது! சம்பளம்தான் அப்படி என்ன அதிகமாக அள்ளிக் கொடுத்து விடுகிறார்கள்!"

"எத்தனை கிடைத்தால் என்ன! சாப்பாட்டுக் கென்று உனக்கு ஒரு தம்பிடி கூடச் செலவில்லையே!"

"சாப்பாட்டுச் செலவு இல்லாவிட்டால் என்ன! வேறு செலவுகள் கிடையாதா! வேஷ்டி, சட்டைத் துணிமணி, சினிமா-கினிமா இதற்கெல்லாம் செலவு ஆவது பணம்தானே! அப்புறம் மிச்சம் ஆவது எங்கே!"

"அப்படியானால் எப்படி வாங்குவாய்!"

"அதுதான் யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறேன்!" என்றான் ராமு.

சில தினங்களுக்குப் பிறகு ராமு மறுபடியும் வீட்டுக்கு வந்தான். இந்தத் தடவை அவன் தன் தாயாருக்குக் கூடமாட ஒத்தாசையும் செய்யலானான்.

"அம்மா! கோடாலி கொண்டு வா! விறகு பிளந்துதருகிறேன்!" என்றான்.

வெகு நாட்களுக்கு முன்பே ரதியா விறகு வாங்கிப் போட்டிருந்தாள். அதைப் பிளந்து தரும்படி ராமுவை எத்தனையோ தடவை அவள் கேட்டுக் கொண்டாள். ஆனால் அப்பொழுதெல்லாம் அவனுக்கு அதற்குப் பொழுதிருந்தால்தானே! தினம் ஏதாவது ஒரு சாக்குச் சொல்லி விட்டு அவன் போய்விடுவான். பெரிய விறகுகளை அடுப்பில் வைத்துப் பற்ற வைக்க முடியாமல் ரதியா திண்டாடினாள். ஆனால் ராமுவுக்கு அதையெல்லாம் பற்றி என்ன அக்கறை! ஆனால் அன்று ஏனோ தெரியவில்லை, அம்மா சொல்லாமலேயே அவன் விறகு பிளக்கத் தொடங்கினான்.

விறகு பிளந்து விட்டு வந்த பின்னர், "அம்மா! நாளைக்கு உன் அறையைச் சுத்தம் செய்து தருகிறேன். இப்படிக் கந்தல்—கூளமாக வைத்துக் கொண்டு நீ இதில் எப்படித்தான் வாழுகிறாயோ!" என்றான்.

ரதியா மனத்துக்குள்ளே சிரித்துக் கொண்டாள். ராமு நாற்புறமும் சுற்றி முற்றி ஒரு தடவை அந்த அறையைப் பார்த்தான்.

"அப்பப்பா! படுக்கையைப் பாரேன்! என்ன அழுக்கு! தோய்த்துத் துவாபரயுகம் ஆகியிருக்கும் போலிருக்கிறதே!"

"நான் படுக்கையில் படுத்து எங்கே தூங்குகிறேன், அதைத் துவைத்துச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதற்கு!"

"நீ தூங்கவில்லை என்பது சரிதான். இருந்தாலும் துவைத்துச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டாமா!"

"தோய்க்கப் பொழுது ஏது! பொழுது விடிவதற்கு முன்னால் அடுப்பண்டை வந்து உட்கார்ந்து விடுகிறேன். அப்புறம் மூன்று மணி வரைக்கும் எழுந்திருக்கப் பொழுதே இருப்பதில்லை. சாப்பிட்டு எழுந்திருந்தால் சிரமமாக இருக்கிறது. சற்றுப் படுத்துக் கொள்ளலாம் என்று படுத்தால் பத்துத் தடவை எழுந்து, வருகிறவர்களுக்கும் போகிறவர்களுக்கும் வியாபாரம் செய்யவேண்டியிருக்கிறது. வீட்டைக் கவனிக்க எனக்குப் பொழுது எங்கே இருக்கிறது!"

"சரி, சவுக்காரம் இருக்கிறதா!"

"இருக்கும். அந்தப் பிறையில் ஒரு கட்டி வைத்திருந்தேன். இருக்கிறதா என்று பாரு!"

சவுக்காரத்தைத் தேடி எடுத்து ராமு படுக்கையின் விரிப்பை எடுத்துத் தோய்க்கலானான்.

"அம்மா! நாகநீசன் வேலையை விட்டு விட்டான், தெரியுமா!"

"ஏன்! அவனுக்குப் புத்தி ஏன் அப்படிப் போயிற்று!"

"அவன் செய்தது சரிதானே! மக் கடையில் வேலை செய்வது என்றால் சுலபம் என்று நினைத்தாயா! ஆள் பிராணன் அல்லவா போகும்! இந்தக் கஷ்டத்திலிருந்து விடுபட்டதில் அவனுக்கு எவ்வளவு சந்தோஷம் என்கிறாய்!"

"ஆமாம், அப்புறம் சாப்பாட்டுக்கு என்ன செய்யப் போகிறானாம்!"

அவன் சவுக்கார நுரை நிறைந்திருந்த தன் கைகளை நீட்டி, "சாப்பாட்டுக்கு அவனுக்கு என்ன குறைச்சல்! இப்பொழுது அவன் மூன்று ஆசாமிகள் வைத்துக் கொண்டு அல்லவா வேலை வாங்குகிறான்! விவேகானந்தா ரோட்டிலே அவன் ஒரு கடை திறந்து விட்டான். நீயும் சேர்ந்து கொள்ளேன் என்று என்னிடம் சொல்லுகிறான்!" என்றான்.

பிறகு சிறிது நேரம் வரை பேசாமல் இருந்து விட்டு, "நேற்று அவன் கடைக்குப் போயிருந்தேன். என்ன வியாபாரம் நடக்கிறது, தெரியுமா! அம்மா, எல்லாச் செலவும் போக இப்பொழுதே அவனுக்குத் தினம் இரண்டு ரூபாய் மிஞ்சுகிறதாம். என்னைக் கேட்கிறான், நீயும் கடையில் சேருகிறாயா என்று! ஆனால் பணத்துக்கு எங்கே போவது!" என்று நிறுத்தினான்.

ரதியா அப்பொழுதும் பேசாமல் இருந்தாள்.

"அம்மா! நீ ஐம்பது ரூபாய் கொடேன், அம்மா!" என்றான் ராமு.

"என்னிடம் ரூபாய் ஏது!"

"உன்னிடம் ரூபாய் இல்லாமலா! நான் என்ன அதிக ரூபாய் கேட்கிறேனா! ஐம்பது ரூபாய்தானே! மாதம் பத்து ரூபாய் வீதம் திருப்பித் தந்து விடுகிறேன். நான் பொய் சொல்லவில்லை. உண்மையைத்தான் சொல்லுகிறேன்" என்றான் ராமு.

"என்னைத் தொந்தரவு செய்யாதே! என்னிடம் பணம் என்ன காய்க்கிறதா! இருந்தால் தரமாட்டேனா!" என்றாள் ரதியா.

ரதியாவிடம் கொஞ்சம் ரூபாய் இருக்கிறது என்பது என்னவோ, வாஸ்தவம்தான். அவளிடம் நானூறு ஐந்நூறுக்கு மேல் இல்லை. பொரியும் கடலையும் விற்றுச் சாப்பாட்டிலே சிக்கனம் பிடித்து ரதியா என்ன! வேறு யாரால் தான் இவ்வளவு மிச்சம் பிடித்து வைக்க முடியும்!

மனித வாழ்க்கையில் துக்கம் — சுகம், வியாதி வெக்கை என்றெல்லாம் ஏற்படுவது இயல்புதானே! இரண்டு நாட்களுக்கு ரதியா வியாதியாய்ப் படுத்து விட்டால் கடையையும் மூட வேண்டியதுதான். வியாபாரம் நடக்காது, போதிய வரும்படியும் இராது. போதாக் குறைக்கு வைத்தியச் செலவுக்கும் மருந்துச் செலவுக்கும் பணம் தண்ணீராய்ச் செலவழியும். வயதும் நாற்பதுக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் கொஞ்ச நாட்கள் போனால் சரீர சிரமப் பட முடியாமற் போனாலும் போய்விடலாம். ஆபத்து சம்பத்தை எண்ணி அரை வயிற்றுக் கஞ்சிக்காவது சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டியதுதானே புத்திசாலித்தனம்! ஆகவே அவள் அந்த ரூபாயை யாருக்கும் கொடுத்த தில்லை. ரொம்ப ரொம்ப ஜாக்கிரதையாக அவள் அந்த ரூபாய்களை ஒளித்து வைத்திருக்கிறாள். அவள் ஒளித்து வைத்திருக்கும் இடம் யாருக்குமே தெரியாது. பணம் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிப்பது ராமுவினால் ஆகாத காரியம்.

ராமு எத்தனையோ முயற்சிகள் செய்து பார்த்தான். முதலில் கெஞ்சிக் கூத்தாடிப் பார்த்தான்; பிறகு அழுது புரண்டு பார்த்தான். கோபித்துக் கொண்டு பார்த்தான். கடைசியில் தற்கொலை செய்துகொண்டு விடுவதாகப் பயமுறுத்தியும் பார்த்து விட்டான்.

ஆனால் ரதியா அதற்கெல்லாம் அசைந்து கொடுக்கவில்லை.

அவளிடம் ரூபாய் ஏது! அவளுக்கு ரூபாய் யார் கொடுப்பார்கள்! அவள் என்ன பெரிய சர்க்கார் உத்தியோகம் பார்க்கிறாளா! இல்லை, ராமுதான் ஆயிரம் இரண்டாயிரம் என்று கொண்டு வந்து அவளிடம் கொடுத்து விட்டுப் போயிருக்கிறானா! அவள் நடத்துவது என்னவோ சின்னஞ்சிறு கடை. அதன் வரும்படியைக் கொண்டு கடைக்கும் குடியிருக்கும் இடத்துக்கும் வாடகை கொடுக்க வேண்டும். இரண்டு பேர் வயிறு அலம்பியாக வேண்டும். உடுக்கச் சேலை வாங்கியாக வேண்டும். இவ்வளவு செலவும் போக அவளிடம் அப்படியென்ன அதிகமாக மிஞ்சி விடுகிறது! ராமு ஏன் இப்படி ஒன்றும் தெரியாதவன் போலப் பேசுகிறான்! அவளிடம் பணம் இருந்தால் ராமு கெஞ்சப் பார்த்துக் கொண்டிருப்பாளா! உடனே எடுத்துக்கொடுத்து விடமாட்டாளா!

ஆனால் ராமு இப்படி ஒரேயடியாக ஒன்றும் தெரியாமல் பேசுகிறானே! என்ன செய்வது!



இரண்டு நாட்கள் ஆயின, நான்கு நாட்கள் ஆயின; பத்து நாட்களும் ஆயின. கேட்டுக் கேட்டு அவன் ரொம்ப அலுத்துப் போனான்.

கடைசியில் ஒரு நாள் சாயங்காலம் கோபம் தலைக்கேறக் கையில் கத்தியை எடுத்துக் கொண்டு வந்து, "பணம் தருகிறாயா! இல்லை, உன்னைக் கொன்று போடட்டுமா!" என்று மிரட்டினான்.

ரதியா 'குய்யோ, முறையோ' என்று கூச்சலிட்டாள். அவள் போட்ட கூச்சலைக் கேட்டுத் தெரு ஜனங்கள் கூடி விட்டனர்.

ராமுவின் கையிலிருந்து கத்தியைப் பிடுங்கி எறிவது அவர்களுக்குப் பெரும் பாடாகி விட்டது. ராமு முணுமுணுத்துக் கொண்டே வெளியேறினான்.

போகும் பொழுது அவன் சும்மாப் போகவில்லை. ''உன்னை ஒரு கை பார்த்துக் கொள்ளுகிறேன். நடு இராத்திரி வந்து உன் கழுத்தைத் திருகிப் போடாவிட்டால் நான் ராமு இல்லை. எவன் உன்னை அப்பொழுது காப்பாற்ற வருகிறான், பார்த்து விடுகிறேன்!'' என்று கூறிக்கொண்டே போனான்.

இந்த அதட்டலுக்கும் உருட்டலுக்கும் ரதியா பயந்தால் கட்டுபடி ஆகுமா! இதே கல்கத்தாவில்தான் அவளுடைய வாழ்க்கையின் பெரும் பகுதி கழிந்திருக்கிறது. எத்தனையோ மனிதர்களுடன் பழகி, எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்த பின்னர்தான் அவள் இந்தத் தெருவுக்கு வந்திருக்கிறாள். யாரும் அவளுக்கு உதவியதில்லை. எப்பொழுதுமே அவள் தனிமையில் வாழ்ந்தவள்தான். உள்ளத்திலே உறுதியும் நம்பிக்கையும் கொண்டு அவள் எத்தனையோ கடினமான பரீக்ஷைகளில் எல்லாம் தேறியிருக்கிறாள்.

இருந்தாலும் அன்று அவளுக்குச் சற்று பயமாகத்தான் இருந்தது.

முன்பின் அறிமுகம் இல்லாத எத்தனையோ பேர்களுக்கு மத்தியில் அவளுடைய வாழ்க்கை கழிந்திருக்கிறது. ராமு அவளுடைய சொந்தப் பிள்ளை. அவள்தான் அவனை வளர்த்து இத்தனை பெரியவனாக்கி இருக்கிறாள். தன் சொந்தப் பிள்ளையிடத்திலேயே ஏன்தான் அவளுக்கு இத்தனை பயமோ!

அவளுடைய கண்கள் ரத்தச் சிவப்பாகச் சிவந்திருந்தன. கைகளும் கால்களும் 'வெட வெட' வென்று கோபத்தில் நடுங்கிக் கொண்டிருந்தன. நாக்கிலிருந்து சரியாகப் பேச்சு

மாமா:—சுகுணா என்கிற பெண்ணுக்கு நன்றாகப் பாடத் தெரியுமாம்; படித்தவளாம். நன்றாக



டான்ஸ் ஆடுவாளாம். அந்தப் பெண் உன்னைத்தவிர வேறு யாரையும் கலியாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்கிறாளாம். நீ ரொம்ப அதிர்ஷ்டசாலிதான். அப்படி என்னடா பொடி போட்டு அவளை மயக்கி விட்டாய்?

மருமான்:—பொடி ஒன்றும் போடவில்லை. எனக்கு நன்றாகச் சமைக்கத் தெரியும் என்று எவனோ அவளிடம் சொல்லி விட்டான், அதுதான் காரணம்.

எழும்பவில்லை. இவற்றையெல்லாம் கண்டு அவள் சிறிதும் பயப்படவில்லை.

ஆனால் பணத்தாசையில் அவளுடைய சொந்தப் பிள்ளையே கையில் கத்தி ஏந்தி, பெற்ற தாயாரைக் குத்த வந்ததைப் பார்த்த பொழுது—தன் பிள்ளையின் கண்களில் கொடிய விலங்கின் கொலைகார உருவத்தைக் கண்ட பொழுது அவளுடைய உள்ளம் உடல் எல்லாம் பதறல் எடுத்தது. இந்தக் கல்கத்தாவிலே மனிதன் பிராணனைக் கையில் பிடித்துக் கொண்டு தானே நடமாடி வருகிறான்! எந்தச் சமயம் எவனுக்கு மரணமோ, யார் கண்டார்கள்! எங்கு பார்த்தாலும் திருடர்களும், கொள்ளைக்காரர்களும் சுற்றிக்கொண்டிருக்கிற இடத்திலே எதுதான் நடக்காது! ஆகவே, அவள் அதற்கெல்லாம் பயப்படவில்லை. ஆனால் தன் வயிற்றில் பிறந்த பிள்ளை கத்தியை எடுத்துக் கொண்டு தன்னையே குத்த வந்த பொழுதுதான் அவளுக்குக் குலை நடுக்கம் எடுத்தது.

அன்று ராமு போனவன்தான்! அப்புறம் திரும்பிவரவே இல்லை.

அவன் திரும்பி வந்து, அம்மா என்ற மரியாதையுடன் அவளைக் கண்டிருந்தால் ஏதாவது பலன் ஏற்பட்டாலும் ஏற்பட்டிருக்கும். அவள் மனத்து பீதியும் அடங்கியிருக்கும். ஆனால் அவன்தான் திரும்பிவரவில்லையே! ஆகவே, அவளுடைய பயம் இன்னும் அதிகரித்து விட்டது!

ராமு வரவில்லை. அவன் எங்கேயிருக்கிறானோ, என்ன பண்ணிக் கொண்டிருக்கிறானோ, யாருக்குத் தெரியும்! பூட்டுப் போட்டுப் பூட்டியிருக்கும் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைவதற்குக்கூட ரதியாவுக்குப் பயமாயிருந்தது. ராமு எங்கேயாவது ஒளிந்து கொண்டிருந்து விட்டால் என்ன செய்வது என்று அஞ்சினாள். ராமு வீட்டை விட்டு வெளியேறியது முதற்கொண்டு அவள் உள்புறமாகக் கதவைத் தாளிட்டுக் கொண்டுதான் தூங்கி வந்தாள். வெளியே 'சிறுக்' என்று சிறு சத்தம் கேட்டாலும்கூட அவளுக்கு ஒரேயடியாகத் தூக்கிவாரிப் போடும்.

வாழ்க்கைப் பாதையிலே எவ்வித இடையூறும் இன்றி வளைய வந்த பிறகு, இந்தக் கிழட்டு வயதிலே பிள்ளையின் கையால் குத்தப்பட்டுச் சாகவேண்டும் என்று அவள் தலையில் எழுதியிருந்தால் அதை யாரால்தான் அழிக்க முடியும்!

இருந்தாலும் உள்ளூற அவளைப் பயம் வாட்டிக் கொண்டுதான் இருந்தது.

அவளுடைய மனம் இம்மாதிரியெல்லாம் படாதபாடு பட்டுக்கொண்டிருந்தபொழுது தான் எதிர்பாராத வகையில் தேவகுமாரனைச் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது.

தேவகுமாரன் படிப்பு வாசனையே அற்றவன். இருந்தாலும் பார்ப்பதற்கு ராஜகுமாரனைப் போலிருந்தான். ஆரம்ப காலத்திலே அவன் நாடகக் கழகங்களிலே ராஜபார்ட் போட்டுக் கொண்டு நடித்தும் இருக்கிறான். ரதியா அவனை நம்பித்தான், அவனைக் கைப்பிடித்த கணவனாக ஏற்றுக்கொண்டு கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தாள். இருவரும் ஆனந்தமாக இன்ப வாழ்க்கை நடத்தினார்கள். தின

றென்று இருவருக்கும் ஒரு நாள் சண்டை வந்தது. தேவகுமாரன் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் இரவோடு இரவாக அவளைத் தன்னந் தனியளாக விட்டு விட்டு அந்த ஊரை விட்டே கம்பி நீட்டிவிட்டான்.

அதற்குப் பிறகு அவர்கள் இருவருக்கும் சந்திப்பே ஏற்படவில்லை.

ஆனால் அன்று அந்தப் பக்கமாக தேவகுமாரன் எங்கே போய்க் கொண்டிருந்தானோ, தெரியவில்லை! கடக் கடக் கடலை விற்கப்படுவதைக் கண்டு வாங்குவதற்காகக் கடைக்கருகே சென்றான். ரதியாவின் முகத்தைப் பார்த்ததும், "அட, ரதியாவா!" என்று வியப்புத் தாண்டவமாடக் கேட்டான்.

ஏதோ யோசனையில் மூழ்கியவாறே ரதியா கடலை வறுத்துக் கொண்டிருந்தாள். அந்தத் தெருவில் அவள் பெயர் யாருக்குமே தெரியாது. அவள் பெயரைச் சொல்லி இதுவரை யாருமே கூப்பிட்டதும் கிடையாது. எத்தனையோ காலம் கழித்துத் தன் பெயரைச் சொல்லி ஒருவர் கூப்பிடுவதைக் கண்ட அவள் துணுக்குற்றுத் திரும்பினாள்.

அவள் கண்களுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. "தேவகுமாரனா!" என்று கேட்டாள்.

தேவகுமாரன் இப்பொழுது முன்போல அழகு வாய்ந்தவனாக இல்லை. அவன் மிகவும் அழுக்கேறிய ஆடை அணிந்திருந்தான். கையிலே ஒரு பழைய குடையும், காலிலே ஒரு அறுந்த செருப்பும் காட்சி அளித்தன. தலைமயிர் முக்கால்வாசி நரைத்துப் போயிருந்தது. உடலும் கறுத்துப் போயிருந்தது. முகத்திலே அம்மை வடு வேறு. ரதியாவின் மதியை மயக்கிய அவனுடைய நீண்ட விழிகள் குழி விழுந்துபோய்க் கிடந்தன.

ரதியா தலை குனிந்து, "நீ இந்தப் பக்கம் எங்கே வந்தாய்!" என்று கேட்டாள்.

"இந்தப் பக்கம் போய்க்கொண்டிருந்தேன். பசியாக இருந்தது. கடலைக் கடையைப் பார்த்ததும் அரையணாவுக்குக் கடலை வாங்கிக் கொறித்துக் கொண்டு போவோமே என்று தோன்றியது. இங்கே உன்னைப் பார்த்ததும் வியப்பாக இருந்தது!"

"வியப்பாக இருப்பானேன்! வா, உள்ளே வந்து உட்காரு!" என்றாள் ரதியா.

அன்று ரதியாவின் கடை அப்பொழுதே மூடப்பட்டு விட்டது.

தேவகுமாரனை உள்ளே தன் அறைக்கு அழைத்துச் சென்று அன்புடன் சிற்றுண்டி கொடுத்தாள். பசி தீர்த்ததும், தேவகுமாரன் அவளைப் பார்த்து, "ஆமாம், இந்த அறையிலே நீ மட்டும்தான் தனியாக இருக்கிறாயோ!" என்று கேட்டான்.

"ஆமாம், தனியாகத்தான் இருக்கிறேன்."

ரதியா சிரித்தாள். தேவகுமாரனுக்குப் பிறகு வெற்றிலை மடித்துக் கொடுத்தாள்.

"உன் உபசாரத்தைப் பார்க்கும் பொழுது இங்கே விட்டுப்போகவே மனம் வரமாட்டேன் என்கிறதே!" என்றான் தேவகுமாரனும் சிரித்துக்கொண்டே.

"உன்னை இனிமேல் யார் விடப் போகிறார்கள்! நீ இங்கேயே இருக்க வேண்டியதுதான்!" என்றாள் ரதியா பதிலுக்கு.



"உன் பிள்ளை எங்கே!" என்று கேட்டான்.

"செத்து விட்டான்!" என்றாள் அவள்.

"என்ன! செத்துவிட்டானா! எப்படி!"

ரதியா கதை முழுவதையும் சொன்னாள். கடைசியில் சிரித்துக் கொண்டே, "என்ன இருந்தாலும் உன் பிள்ளைதானே! அப்பன் குணம் போகுமா!" என்றாள்.

தேவகுமாரன், "சரி. நான் வரட்டுமா!" என்று சொல்லி எழுந்தான்.

"அதெல்லாம் கூடாது. நீ இங்கேயேதான் இருக்க வேண்டும். அப்படி உனக்கு இங்கே இருக்க இஷ்டமில்லாவிட்டால் கொஞ்ச நாட்களுக்காவது இருந்துவிட்டுப் போ! எனக்குத் தனியாக இருக்கப் பயமாயிருக்கிறது!" என்று பிடிவாதம் பிடித்தாள் ரதியா.

"அதெல்லாம் கொஞ்ச நாட்கள் இருக்க முடியாது. இன்று இரவு மட்டும் தங்க இடம் கொடுப்பாயா, சொல்லு!"

"சரி, அப்புறம் உன் இஷ்டம்!"

"இன்றைக்கு நல்ல சாப்பாடாகச் சமைத்துப் போட வேண்டும்"

"என்ன வேண்டுமோ, போடுகிறேன். ஆனால் நீதான் கறி காய் வாங்கிவரப் போக வேண்டும்" என்றாள் ரதியா.

தேவகுமாரன் அவள் விருப்பப்படியே அவளிடம் காசு வாங்கிக் கொண்டு கறிகாய் வாங்கி வரப் புறப்பட்டான்.

அன்று படுக்கை விரிப்புக்குச் சவுக்காரம் போட்டபின் மிகுந்திருந்த சவுக்காரத்தை ரதியா பிறையில் ஜாக்கிரதையாக எடுத்து வைத்திருந்தாள். தேவகுமாரன் வெளியே சென்றதும் அந்தச் சவுக்காரத் துண்டை எடுத்து நன்றாக முகத்தைக் கழுவிக் கொண்டாள். தலையை வாரி முடிந்து கொண்டாள். பிறகு தன்னிடம் இருப்பதற்குள் நல்ல புடவை ஒன்றை எடுத்து உடுத்திக் கொண்டாள். படுக்கையில் துவைத்த விரிப்பை விரித்தாள். அதற்குப் பிறகு வெற்றிலைப் பாக்கு முதலியவைகளை எடுத்து வைத்துக் கொண்டாள்.

தேவகுமாரனுக்கு வெற்றிலை போடுவதென்றால் வெகு பிரியம் என்பது அவளுக்குத் தெரிந்தது தானே! வெகு நாட்களுக்கு அப்புறம் இன்றைக்கு ரதியாவும் வாய் சிவக்க நிறைய வெற்றிலை போட்டுக்கொண்டாள். சிறிது நேரத்துக்கெல்லாம் கறிகாய் வாங்க மார்க்கெட்டுக்குச் சென்றிருந்த தேவகுமாரன் திரும்பி வந்தான்.

"தக்காளி, உருளைக் கிழங்கு, வெங்காயம்! அட, நீ ஒன்று கூடப் பாக்கி விடவில்லையே!"

ரதியா சிறிதும் முகம் சுளித்துக் கொள்ளவில்லை. சிரித்துக் கொண்டே, "கொடுத்த காசை யெல்லாம் தீர்த்து விட்டு வந்து விட்டாயோ, இல்லையோ! எப்பொழுதுமே உன் வழக்கம் இதுதானே! உன் கையிலே காசு அகப்பட்டால் சரிதான்!" என்று அன்பாகக் கடிந்து கொண்டாள் ரதியா.

"எனக்கு இன்னும் கொஞ்சம் காசு வேண்டும். தருவாயா, மாட்டாயா!"

"எதற்காக உனக்குக் காசு!"

"இந்தக் கேள்வியெல்லாம் உனக்கு எதற்கு! கேட்டால் கொடுக்க வேண்டியதுதானே!"

ரதியா அதற்கு மேல் அதிகம் வளர்த்த விரும்பவில்லை. எத்தனையோ வருஷங்களுக்குப் பின் வீட்டுக்கு வந்திருக்கும் கணவனின் மனத்தைப் புண்படுத்த அவள் விரும்பவில்லை. ஆகவே அவன் கேட்ட தொகையை எடுத்துக் கொடுத்து விட்டாள். எத்தனையோ வருஷங்களுக்குப் பின் ரதியாவின் வாழ்க்கையிலே மறுபடியும் அதே பழைய ஆனந்த மயமான இரவு வந்தது.

அதற்குப் பிறகுள்ள கதை மிகவும் சுருக்கமானதுதான். மறு நாள் காலையில் பார்த்தால் அந்தச் சுத்தமான விரிப்பு ஒரு மூலையில் விரிந்துக் கிடந்தது. இன்னொருபுறம் தரையில் ரதியாவின் உயிர் அற்ற உடல் ரத்தம் தோய்ந்து கிடந்தது. —ரா. வி.

# நல்ல சமாசாரம்

"ஸார்! ஒரு நல்ல சமாசாரம் இன்றையப் பத்திரிகையில் பார்த்தீர்களோ இல்லையோ?" என்றார் கிருஷ்ணமாச்சாரியார்.

"தேவேன்! எதைச் சொல்லுறேளோ தெரியவில்லையே!" என்றார் ராகவாச்சாரியார்.

"அதுதான் காணும்! அரிசி ரேஷன் ஒரு அவுன்ஸ்கூடப் பண்ணிப்பிட்டானே!"

"அதைச் சொல்றேளா? இது என்ன நல்ல சமாசாரம், மொத்த ரேஷனிலே மூணு அவுன்ஸுன்னு குறைச்சு......"

"மூன்று அவுன்ஸ் குறைச்சாலும். முப்பது அவுன்ஸ் குறைச்சாலும் கிரிக்கெட் மாட்சுக்குப் போகிற கூட்டத்திலே என்னமோ குறைச்சலே இல்லை! இந்த வருஷம் நீர் மாட்சுக்குப் போயிருந்தீரா?"

"நான் எங்கேயும் போகவில்லை. வீடே விஷ்ணு பதம் என்று இருந்துவிட்டேன்!"

"ஆமாம், உம்ம வீட்டுக்காரர் ரொம்ப நல்லவர் போலிருக்கிறது! என்ன இருந்தாலும் நீர் அதிர்ஷ்டசாலிதான் ஐயா!"

"ஏன்?"

"ஐந்து வருஷம் சேர்ந்தாற் போல் ஒரே வீட்டிலிருக்கிறீரே! நீர் அதிர்ஷ்டசாலியாக இருக்கக் கொண்டுதானே இது சாத்தியமாக இருக்கிறது!"

"இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் என்று வாடகையை அதுக்கு இதுக்கு என்று உயர்த்திக் கொண்டே போகப் போக வாயை மூடிக்கொண்டு அழுது கொண்டிருக்கிறேனே—இப்போ நீரே சொல்லும். நான் அதிர்ஷ்டசாலியா எங்கள் வீட்டுக்காரர் அதிர்ஷ்டசாலியா என்று?"

"ஆமாம், ஆமாம்! இந்தக் காலத்திலே சினிமா டிக்கட் கூடன்னா திடீர் திடீர் என்று உசத்திப்பிடறு?"

"சினிமாவைப் பற்றி யாருக்குங்காணும் கவலை? காசு இருக்கிறவன் அல்லவா அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்?"

"அப்படியானால் உம்மிடம் காசு இல்லை என்று சாதிக்கிறீரா?"


"ஓய்! என்னங்காணும் கதை? சும்மா ஊர்க்கதையெல்லாம் பேசிவிட்டு ஐந்து, பத்து கடன் வாங்கிக் கொண்டு போகலாம் என்று பார்க்கிறீரா? என்னிடம் பணம் கிடையாது! இருந்தாலும் உமக்குக் கொடுக்க முடியாது. இது வரைக்கும் ஐந்து பத்து என்று கொடுத்தே நூறு ரூபாய்க்கு மேலிருக்கும் போலிருக்கிறது! ஒரு தம்பிடிக் காசு திரும்பி வரவில்லை..."

"எதுக்குங்காணும் இப்படிக் கத்துகிறீர்! இந்தாருங்காணும் உம்ம ரூபாய்! இதுவரை உம்மிடம் வாங்கினது நூற்றுப் பதினைந்து ரூபாய்—கணக்கு வைத்திருக்கிறேன், இந்தாரும் எடுத்துக்கொள்ளும்!"

"என்னங்காணும் இது?"

"உம்மிடம் வந்ததும் வராததுமாக நான் வாங்கின கடனைத் திருப்பிக் கொடுத்தால் மூர்ச்சை போட்டு விழுந்து விடுவீரே என்று, எப்பொழுதும் போல் (கடன் கேட்க வரும்போது பேசுவது போலத்தான்) ஊர்க்கதை யெல்லாம் பேசிக்கொண்டிருந்து விட்டு, பணத்தைக் கொடுத்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். இல்லை என்றால், நான் வாங்கின பணத்தைத் திடீரென்று திருப்பிக் கொடுப்பதைப் பார்த்து நீர் மூர்ச்சை போட்டு விழுந்து, ஒன்று கிடக்க ஒன்று ஆகி விட்டால் எனக்கல்லவா கஷ்டம்?"—வெங்கு.


எனக்கு மொறுமொறுப்பே பிடிக்கும்
எல்லோருடைய
எனக்கு உப்பானதே இஷ்டம்
விருப்பத்திற்கேற்ற
எனக்கு தித்திப்பே வேண்டும்
பிஸ்கோத்துகள்
எனக்கு எல்லாமே பிடிக்கும்
சிறந்த பிஸ்கோத்து
பிரிட்டானியா
FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA



# விஜய குமாரன்

சீதா

## 1. தாத்தா, கதை சொல்லு!

"தாத்தா! என்னை பீச்சுக்கு அழைச்சுக் கொண்டு போங்க தாத்தா!" என்று கெஞ்சினான் ஏழு வயதுப் பேரன் கோபு.

"எதுக்கடா, இந்தக் குளிர் காலத்தில் சமுத்திரக் கரைக்குப் போவது? குளிர் நடுக்கும்; வேண்டாம்! சொன்னால் கேள்!" என்றார் தாத்தா.

"இன்னிக்குப் பௌர்ணமி தாத்தா! சமுத்திரத்திலிருந்து பூரண சந்திரன், பெரிய வட்ட வடிவமான சந்திரன் உதயமாகிற காட்சியைப் பார்க்கணும் என்று ரொம்ப ஆசையாக இருக்கிறது தாத்தா! அழைத்துக் கொண்டு போங்க தாத்தா!" என்று மறுபடியும் கேட்டான் கோபு.

"உன்னைப் போலவே, அந்தக் காலத்திலேயும் ஒரு ராஜகுமாரன் இருந்தான். அவனுக்குச் சூரியோதயம், சந்திரோதயம் முதலியவற்றைப் பார்ப்பதில் ரொம்ப ஆசை. இந்த ஆசையினால் அந்த ராஜகுமாரன் என்னவெல்லாம் துன்பம் அடைய நேர்ந்தது தெரியுமோ, இல்லையோ?"

"தெரியாதே, தாத்தா! அதையெல்லாம் சொல்லுங்கோ தாத்தா!"

"ஐயோ! அது பெரிய கதையாச்சே!" என்றார் தாத்தா.

"சரி, அப்படியானால், பீச்சுக்கு அழைத்துக்கொண்டு போய், மணலில் உட்கார்ந்து சொல்லுங்கோ?" என்றான் கெட்டிக்கார கோபு.

பேரன் இப்படியெல்லாம் வற்புறுத்தினால் எந்தத் தாத்தாவால்தான் சும்மா இருக்க முடியும். தாத்தா பீச்சுக்கு அழைத்துக்கொண்டு போகச் சம்மதித்து விட்டார்.

உடனே கோபு உள்ளே போய், அக்கா அம்புலு, தங்கை தங்கம், தம்பி கிட்டு, எல்லாரையும் அழைத்து, "தாத்தா நம்மைப் பீச்சுக்கு அழைத்துக்கொண்டு போகிறாராம். இஷ்டப்பட்டவர்கள் எல்லாம் வரலாம்" என்று ஒரு கூச்சல் போட்டான்.

எந்தக் குழந்தைதான் தாத்தா பீச்சுக்கு அழைத்துக் கொண்டு போவதாகச் சொன்னால் 'வர மாட்டேன்' என்று கூறும்? ஆனால் அதற்கு மாறாக, அக்கம் பக்கத்து வீட்டுக் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு தாத்தா பீச்சுக்குப் புறப்பட வேண்டியதாகப் போய் விட்டது!

கடற்கரையை அடைந்ததும் நல்ல மணல் திட்டாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டனர். உடனே, கோபு, "சொல்லுங்க தாத்தா!" என்றான்

உடனே மற்றக் குழந்தைகள் எல்லாம் கோபு என்ன சொல்லச் சொல்லுகிறான் தாத்தாவை என்று உடனே புரிந்துகொண்டு விட்டனர். "கதை சொல்லுங்கோ தாத்தா! கதை சொல்லுங்கோ தாத்தா!" என்று கத்தத் தொடங்கிவிட்டார்கள். இனிமேலும் தாத்தாவால் சும்மா இருக்க முடியுமா? கதை சொல்ல ஆரம்பித்தார்:

**ரொ**ம்பப் பழைய காலத்திலே, காந்தார தேசம் என்றொரு தேசம் இருந்தது. அந்தத் தேசத்திலே ராஜாவின் அரண்மனையிலே, ஒருநாள் விடியற்காலை ஒரே கலவரமாகப் போய் விட்டது. எல்லோரும் ஒரே அடியாய்ப் பரபரப்படைந்து, அரண்மனையின் மேலும் கீழும் ஓடத் தொடங்கினர்.

இதற்குக் காரணம் என்ன தெரியுமா?

அந்தத் தேசத்து ராஜாவுக்கு ஒரு குமாரன் இருந்தான். அவன் பெயர் விஜயன். அவனுக்கு அப்போது பதினைந்து பதினாறு வயதிருக்கும். தினம் ராஜகுமாரன் விடியற்காலை பால் சாப்பிடுவது வழக்கம். ஆமாம், அந்தக் காலத்தில் காப்பி யில்லாததால் பால் தான் குடித்து வந்தார்கள்.

ராஜகுமாரன் விஜயனுக்குத் தினம் ஒரு தாதி காலையில் ஒரு அழகிய தங்கக் கிண்ணத்தில் பால் கொண்டு போய்க் கொடுப்பாள். அவ்விதமே அன்றும் காலையில் ராஜகுமாரன் படுக்கையறைக்குப் பால் கொண்டு கொடுக்கச் சென்றபோது, ராஜகுமாரன் படுக்கை காலியாக இருந்தது. விஜயகுமாரனைக் காணவில்லை. அதைப் பார்த்ததும் அவள் திடுக்கிட்டாள்; கையிலிருந்த பால் கிண்ணம், கை நழுவிக் கீழே விழுந்தது. "மகாராணி! மகாராணி!" என்று கூவிக் கொண்டு ஓடினாள்.

அரண்மனையி லிருந்த சேவகர்கள், அந்தப்புரத்திலிருந்த சேவகர்கள் எல்லாரும் திடுக்கிட்டு "என்ன? என்ன?" என்று ஆவலுடன் கேட்டுக் கொண்டே ஓடி வந்தார்கள்.

ஒரு கொடியில், மகாராஜாவிலிருந்து எல்லாருக்கும் ராஜகுமாரன் விஜயன் காணாமற்போன செய்தி தெரிந்து விட்டது. அதனால்தான் அன்று அவ்வளவு கலவரமாக இருந்தது.


அரண்மனைச் சேவகர்கள் அத்தனை பேரும் மூலைக்கு ஒருவராய்ப் போய்த் தேடியதில், பதினைந்து நிமிஷத்தில் ராஜகுமாரனைக் கண்டு பிடித்து விட்டார்கள்.

விஜயனைக் கைப் பிடியாய்க் கொண்டு வந்து மகாராஜாவின் முன்னர் நிறுத்தி விட்டார்கள்.

மகாராஜா, "எங்கேடா, விஜயா காலங்காத்தாலே போய், இருக்கிறவர்கள் வயிற்றிலெயெல்லாம் நெருப்புக் கட்டிக் கொள்ளச் செய்து விட்டாய்?" என்று வருத்தத்துடன் கேட்டார்.

"சூரியோதயம் பார்க்கப் போயிருந்தேன் அப்பா! விடியற் காலையிலே தோன்றும் செவ்வானமும் செம்பிழம்பாக உதயமாகும் அழகிய சூரியனையும் பார்க்கப் போயிருந்தேன். நம்ம அரண்மனைச் சாளரத்திலிருந்து பார்த்தால் அவ்வளவு நன்றாகத் தெரியவில்லையப்பா! அதனாலே நம்ம அரண்மனையை ஒட்டி யிருக்கும் பரந்த மைதானத்தில் நின்று கொண்டிருந்தேன்!" என்றான்.

இப்படித்தான், சூரியோதயம் சந்திரோதயம் என்றால் அந்தக் காட்சிகளைப் பார்க்க அவனுக்கு ஆசை யுண்டாகிவிடும். நல்ல அழகிய மலர்கள் பூத்திருந்தால் அவற்றை மணிக் கணக்





காகப் பார்த்துக் கொண்டு அதன் அழகில் மயங்கி நிற்பான். புறாக்களைக் கண்டால், அவற்றைத் தடவிக் கொடுத்து மகிழ்வான்; கிளிகளைக் கண்டு கொஞ்சுவான்; பூனையுடன் விளையாடுவான்; நாயுடன் உறவாடுவான். பசு, எருது என்றால் அவற்றை விட்டு அகலமாட்டான். இப்படி உலகில் உள்ள அத்தனை ஜீவராசிகளிடமும் அவனுக்கு அபார அன்பு.

இந்த அன்பு நாளடைவில் வளர்ந்து, விஜயகுமாரன் மனத்தில் ஒரு பெருங் கவலையை யுண்டாக்கிவிட்டது!

அதாவது, அவன் நாயுடன் கொஞ்ச நேரம் விளையாடினால் தானும் நாயாக மாற முடியவில்லையே என்று ஏங்குவான். குரங்குடன் விளையாடினால், தானும் குரங்காகி அத்துடன் விளையாடும் பாக்கியம் தனக்குக் கிடைக்கவில்லையே என்று ஏங்குவான்.

இவ்விதம் நினைத்த மாத்திரத்தில் நினைத்த உருவம் எடுத்துக் கொள்ளும் சக்தி அருளும்படி கடவுளை வேண்டுவான். கடவுள் விஜயனின் ஏக்கத்துக்கு இரக்கங் கொண்டு அனுப்பியது போல், ஒரு நாள் காலை ஒரு மனிதர் அரண்மனை வாசலை அடைந்தார்.

வாயிற் காப்போன், "நீர் யார்?" என்று கேட்டான் அவரை.

"நான் தான் மகிழபுரி மந்திரவாதி மாய்மாலன்! நான் வந்திருப்பதாக மகாராஜாவிடம் தெரிவி!" என்றார்.

சேவகர்கள் மகாராஜாவிடம் போய், "யாரோ மந்திரவாதியாம்; பெயர் மாய்மாலனாம், தங்களைப் பார்க்க விரும்புகிறார்" என்று தெரிவித்தார்கள்.

மந்திரவாதி என்று கேட்டவுடனே உள்ளே வரச் சொல் என்று உத்தரவிட்டார் மகாராஜா. உடனே சேவகர்கள் வாசலுக்குப் போய் மந்திரவாதியை அழைத்து வந்தார்கள்.

கம்பீர நடை போட்டு வந்த மாய்மாலன் மகாராஜாவின் எதிரில் வந்ததும், அடிபணிந்து வணங்கிப் பின்னர் எழுந்து நின்றான்.

மகாராஜா, "நீ எந்த ஊர்? எந்த தேசம்?" என்று விசாரித்தார்.

உடனே மாய்மாலன், "மகாராஜா, நான் மலையாள தேசத்து மந்திரவாதி! என் குருநாதரிடம் எட்டு வருஷ காலம் இருந்து மந்திர வித்தைகள், மாயாஜால வித்தைகள் எல்லாம் பரிபூரணமாகக் கற்ற பின் தேசாந்திரியாகப் புறப்பட்டேன். ஒவ்வொரு தேசத்துக்கும் சென்று அந்தந்த தேசத்து அரசர்கள், மக்கள் எல்லோர் முன்னிலையிலும் என் மந்திர வித்தைகள் செய்து காட்டி மகிழ்வித்து, அவர்களிடம் தக்க சன்மானம் பெற்று வருகிறேன்" என்றான்.

"மந்திரவாதி! உமக்கு என்ன எல்லாம் வித்தை வரும்?" என்று கேட்டார் மகாராஜா.

"மகாராஜா! எனக்குச் செய்யத் தெரியும் வித்தைகளைத் தற்பெருமையாகச் சொல்லிக் கொள்ளும் சுபாவமுடையவனல்ல நான். தங்கள் முன்னிலையில் எனக்குத் தெரிந்த வித்தைகளைச் செய்து காட்டுகிறேன். அவை தாங்கள் இதுவரை கண்டும் கேட்டும் இராத வித்தைகளாக இருப்பின் தக்க சன்மானம் தாருங்கள். இல்லையேல் வேண்டாம்!" என்றான்.

"இன்று மாலை நமது அரண்மனையில் கூடும் சதஸில் உம்முடைய திறமையைக் காட்டும்" என்றார் மகாராஜா!

"அப்படியே! தங்கள் கட்டளையைச் சிரமேற் கொள்ளத் தயார்" என்றான் மந்திரவாதி.

அன்று மாலை அரண்மனையில் நல்ல 'சதஸ்' கூடியிருந்தது. மந்திரிமார்கள், தளபதிகள், தானாபதிகள், பிரமுகர்கள், மகாராணியார் மற்றுமுள்ள அந்தப்புரத்து ஸ்திரீகள் யாவரும் கூடியிருந்தனர். மகாராஜாவுக்குப் பக்கத்து ஆசனத்தில் இளவரசன் விஜயகுமாரன் வீற்றிருந்தான்.

மந்திரவாதி தனது திறமையைக் காட்டத் தொடங்கினான்.

மந்திரவாதி ஒவ்வொரு வித்தை செய்து முடித்ததும், சபையோர் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தினர். சில சமயம் 'ஆ! ஆ!' என்றும் 'த்ஸோ த்ஸோ' என்றும் கூறித் தங்கள் வியப்பைத் தெரிவித்தனர்.

காலிப் பைக்குள்ளிருந்து லட்டும் ஜிலேபியும் எடுத்துக் கொடுத்தபோது அங்கே கூடியிருந்தவர்களுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

சாதாரண மரக் கட்டையை உயிருள்ள முயல் குட்டியாக மந்திரவாதி மாற்றியபோது அவர்கள் கண்கள் அகல விரிந்தன.

மந்திரத்தால் ஒரு மாமரத்தை அந்தரத்தில் தோற்றுவித்து, அதில் ஒரு மாங்கனியையும் காட்டி, அதைப் பறித்து நறுக்கிச் சபையோருக்கெல்லாம் ஒவ்வொரு துண்டு அளித்தபோது, "என்ன ருசி! என்ன ருசி! என்ன ஆச்சரியம்!" என்று வியந்த வண்ணம் இருந்தனர். (தொடரும்)

**விடுகதை**

கார்த்திகை மார்கழி பூக்கும் பூ
கானகர் ஜோனகர் விற்கும் பூ
மன்னாதி மன்னன் மதிக்கும் பூ
மதியுள்ள மந்திரி கொள்ளும் பூ.

சென்ற வார விடுகதைக்கு விடை: சுண்ணாம்பு.

# வழக்கு முடிந்தது!

ஒரு பெரிய வீட்டில் பத்துப் பேர் குடித்தனம் இருந்தார்கள். பத்து வீட்டுப் பெண்களுக்கும் சதா சண்டைதான். குழந்தைகள் விஷயமாகச் சண்டை; குழாய் ஜலத்தை யார் முன்னால் பிடிப்பது என்பதில் சண்டை; வாசலை யார் பெருக்கிக் கோலமிடுவது என்பதில் சண்டை; கதவை யாராவது தட்டினால் யார் போய்த் திறப்பது என்பதில் சண்டை; சதா காலமும் இப்படிப் போரும் புயலுமாக அந்த வீட்டுக் குடித்தனக்காரப் பெண்கள் காலந் தள்ளி வந்தார்கள்.

அன்று ஏற்பட்ட சண்டை சாதாரணமாக முடிவடைகிற வழியாயில்லை. மேலும் மேலும் வலுத்துக் கொண்டே போயிற்று. கடைசியில் அடிதடி ரகளை ஏற்பட்டுக் கோர்ட்டுக்குப் போகவேண்டிய அளவுக்கு விஷயம் முற்றிவிட்டது.

அந்த வழக்கின் முடிவைத் தெரிந்து கொள்ளுவதற்குக் கோர்ட்டில் கூட்டம் நிறையக் கூடிவிட்டது.

அந்தப் பெண்களின் வழக்கு விசாரணைக்கு வந்ததும் பத்துப் பெண்களும் ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டு மாஜிஸ்டிரேட்டுக்கு எதிரே வந்தார்கள். பத்துப்பேரும் ஒரேயடியாக இரைச்சல் போட்டுக்கொண்டு, தங்கள் குறைகளைச் சொன்னார்கள்.

மாஜிஸ்டிரேட்டுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. மேஜையை இடைவிடாமல் தட்டி, "சத்தம் போடாதீர்கள்! யாராவது ஒருவர் சமாசாரத்தைச் சொல்லுங்கள்!" என்றார்.

அந்த 'ஒருவர்' யார் என்று நிர்ணயிப்பதில் அந்தப் பெண்களுக்குள் பிரமாதமாகச் சச்சரவு ஏற்பட்டுக் கூச்சல் அதிகமாயிற்று.

மாஜிஸ்டிரேட்டுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. தலையில் கை வைத்தபடி யோசனையில் ஆழ்ந்துவிட்டார். சட்டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே மாஜிஸ்டிரேட் தம்முடைய மேஜையைத் தட்டி அந்தப் பெண்களின் கூக்குரலை ஒருவிதமாக அடக்கினார். பிறகு அவர் மிகவும் நிதானமாகவும் கம்பீரமாகவும், "சரி, உங்களுக்குள் யார் வயதில் பெரியவளோ அவள் முதலில் தன்னுடைய குறையைச் சொல்லலாம்!" என்று சொன்னார்.

அவ்வளவுதான்; அப்புறம் எவள் வாயைத் திறப்பாள்? வழக்கு சுலபமாக முடிந்துவிட்டது! — விஜயம்.

# சேற்றில் செந்தாமரை

● எஸ்.வி.எஸ். ●

நல்ல சூழ்நிலையில்தான், நல்ல மனத்தில்தான் நல்ல எண்ணம் உதிக்க வேண்டும் என்ற நியதி இல்லை போலும். அதனால்தான் சேற்றில் தாமரை முளைக்கிறது போலும். இருட்டில் முல்லை அரும்புகிறது போலும். அதனால்தான் என் உள்ளத்திலும் அன்று அந்த எண்ணம் உதித்தது போலும்!

அன்று காலைப் பத்திரிகையில் கல்கத்தா மெயில் கவிழ்ந்து விட்டது என்ற செய்தியைப் படித்ததும் தூக்கிவாரிப் போட்டது! அதற்கடுத்த கணம், மானேஜர் மகாதேவன்கூட நேற்று அந்த வண்டியிலேதானே விசாகப் பட்டணத்துக்குப் புறப்பட்டுப் போவதாக இருந்தார். அதில் நேற்றுப் போயிருப்பாரோ...... அவரும் இந்த விபத்தில் சிக்கிக் கொண்டிருப்பாரோ......அவர் உயிருக்கு ஏதாகிலும் ஹானி நேர்ந்திருக்குமோ ......?

இப்படி எண்ணிக் கொண்டு வந்த போதே, மனதில் சொல்லொணாத் துயரம் ஏற்பட்டது. அந்தத் துயரத்தின் அடிநாதத்தில் ஒரு லேசான இன்ப உணர்ச்சி ஏற்படுவது போலிருந்தது. நீண்ட நாளாக நான் பழிவாங்க வேண்டும் என்று நினைத்த எண்ணம் கைகூடி விட்டாற்போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. இத்தகைய எண்ணம் ஏற்படக் காரணம் என்ன? என்ன என்று என்னை நானே பலமுறை கேட்டுப் பார்த்துக் கொண்டேன். புலப்படவில்லை! கண்களை இறுக மூடிக்கொண்டு ஆலோசித்துப்பார்த்தேன்.

இறுக மூடிய கண்களுக்கு, ஒரு கஜ தூரத்தில் ஒரு கரும் புள்ளி தென்பட்டது. அந்தப் புள்ளி மெள்ள என்னை நோக்கி, விரிந்து கொண்டே வந்தது. அப்படி விரியும்போது, கண், காது, மூக்கு பல் வரிசை, நெற்றியில் திலகம் எல்லாம் தோன்றின. இந்த முகம் அறிமுகமான முகம் போலிருக்கிறதே என்று நினைத்தேன். அடுத்த கணம், என்னுடைய பால்யத் தோழி விமலாவின் முகமாகவே இருந்தது! — அந்த முகத்தில் இரண்டு துளிக் கண்ணீரும் 'பல்ப்' தொங்குவது போல் தயங்கக் கண்டேன்! அவ்வளவு தான், துயரத்தின் அடிநாதமாக ஏற்பட்ட என் இன்ப உணர்ச்சியின் காரணமும் 'பளிச்'சென்று புலப்பட்டு விட்டது!

உடனே எனக்கு என்மேலேயே அளவு கடந்த கோபம் வந்தது. எவ்வளவு கீழ்த்தரமான பிரகிருதி நான்!—என்று என் மேலேயே எனக்கு வெறுப்புண்டாயிற்று.

விமலாவும் நானும் ஒரே ஊரில் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். அந்நாட்களிலிருந்தே, அதிர்ஷ்ட தேவதை அவள் பக்கம்தான் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தாளே தவிர, இந்தப் பக்கம், என் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

சுபாவத்தில் நான் ரொம்பவும் அடக்கமானவள் என்று பெயர். அவள் கொஞ்சம் அரட்டைக்கல்லி, தைரியசாலி, துணிச்சலுள்ளவள் என்று பெயர். நான் ஓயாது ஒழியாது படித்துக்கொண்டேயிருப்பேன்; அவள் படிப்பைத் தவிர எல்லாவற்றிலும் பங்கு எடுத்துக் கொண்டிருப்பாள்.

ஒரு சமயம் நான் இரவு பகல் என்ற வித்தியாசம் பாராமல் படித்துக் கொண்டிருந்தேன். ஆம், ஒரு வாரத்தில் வருஷப் பரிட்சை ஆரம்பமாக விருந்தது. அப்போது ஒருநாள் காலை விமலா எங்கள் வீட்டுக்கு வந்தாள்.

"ஏண்டி கமலா! நான் இந்தப் பரிட்சைக்கு ஒரு எழுத்துக்கூடப் படிக்கவில்லையடி. எப்படித் தான் பரிட்சை எழுதப் போகிறேனோ தெரியவில்லை. இன்னும் ஒரு வருஷம் இதே வகுப்பில் கிடக்க வேண்டியதுதான் போலிருக்கு. கணக்கு ஒன்றுமே புரியவில்லை; ஹிஸ்டரி அதைவிட. இதெல்லாம் எனக்குக் கொஞ்சம் சொல்லித்தாடீ!" என்று கெஞ்சினாள்.

அவ்வளவு இரந்து கேட்கும்போது, 'நான் மாட்டேன்' என்று சொல்ல முடியுமா? 'சரி' என்று ஒப்புக் கொண்டேன். அன்றைய தினத்திலிருந்து நானும் விமலாவும் ஒன்றாகவே படித்தோம்! பரிட்சை முடிய அவள் கேட்ட சந்தேகங்களுக்கெல்லாம் நான் தெளிவாகப் பதில் சொல்லிப் புரிய வைத்தேன்.

பரிட்சை முடிந்து, கோடை விடுமுறையும் முடிந்து, பள்ளிக்கூடமும் திறந்தார்கள். பள்ளிக்கூடம் திறக்கும் அன்று தான் பரிட்சை முடிவுகள் சொல்லுவார்கள். அதில் என்னவாயிற்று தெரியுமா? விமலா 'பாஸ்' செய்து விட்டாள். கமலா பெயில் ஆகிவிட்டாள்! கமலாவிடம் வந்து சந்தேகம் கேட்டுப் படித்த விமலா பாஸ்; இராப் பகலாகக் கண் விழித்துச் சிரத்தையுடன் படித்த இந்தக் கமலா பெயில். இப்படி நிலைமை என்றால் என் மனசு எப்படியிருக்கும்?

இந்தச் சம்பவத்திலிருந்தே எனக்கு, விமலாவின்மீது நான் கொண்டிருந்த பற்று போய், பொறாமை ஏற்படத் தொடங்கிவிட்டது. அவளைக் கண்டால் பிடிக்காமல் போய்விட்டது. ஆனால் இதை

வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் அவளிடம் பழகி வந்தேன்.

சில வருஷங்களுக்குப் பிறகு எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் பாஸ் செய்தேன். அப்போது எங்கள் குடும்பம் சிரம தசையிலிருந்ததால், என்னைப் பணக்காரக் கிழவன் ஒருவனுக்கு இரண்டாம் தாரமாகக் கட்டிக் கொடுத்து, என் பெற்றோரும் அந்தப் பணக்காரக் கிழவனுடைய ஆதரவில் வந்துவிடத் திட்டமிட்டனர். நான் இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் பட மறுத்து விட்டேன். அதனால் குடும்பம் நடத்த வேண்டிய பொறுப்பு என் தலையிலே வந்து விழுந்தது. நான் சென்னைக்கு வந்து ஒரு கம்பெனியில் குமாஸ்தாவாக வேலைக்கு அமர்ந்தேன். மாதம் இருநூறு ரூபாய் சம்பளத்தில் அமர்ந்தேன்.

இந்தக் கம்பெனியின் மானேஜர் மகாதேவன் எனக்கு ஒரு விதத்தில் தூரபந்து. இந்த விஷயம் அவருக்குத் தெரியாது. என்னுடைய யோக்யதாம்சங்களைப் பார்த்துத்தான் எனக்கு வேலை கொடுத்தார். அவருக்குத் திருப்திகரமாகவே வேலை செய்து வந்தேன்.

தினம் இப்படி ஒரு கம்பெனி வேலையில் ஈடுபட்டு, புருஷர்களைப் போல் வேலை செய்வது கொஞ்சநாளில் எனக்கு அலுப்பாகப் போய்விட்டது!

இரண்டாந் தாரமாகவோ, மூன்றாந் தாரமாகவோ எவனையாவது மணந்து ஒரு குழந்தையோ இரண்டு குழந்தையோ பெற்றுக் குடும்பப் பாங்காக வாழாமற் போய் விட்டோமே என்ற எண்ணம் எழலாயிற்று. இந்த மாதிரி எண்ணம் கல்யாணமாகாமல் கம்பெனிகளிலும் அரசாங்கக் காரியாலயங்களிலும் வேலை செய்யும் எல்லாப் பெண்களுக்கும் ஏற்படுகிறதோ என்னவோ, எனக்குத் தெரியாது. என் வரைக்குந்தான் எனக்குச் சொல்லத் தெரியும்!

ஆகவே, கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் போய் விட்டோமே என்ற எண்ணம் எழுந்த சில நாட்களுக்கெல்லாம் இன்னொரு எண்ணமும் எழலாயிற்று.

அதாவது இந்த மானேஜர் மகாதேவன், 'நான் ஏதாகிலும் ஆபீஸ் சம்பந்தமான கடிதங்கள் எழுதினால் என் வாசகங்களைப் பாராட்டுகிறார்; அந்தக் கடிதங்களைப் பிழையில்லாமல் 'டைப்' பண்ணிக் கொண்டு போய்க் கொடுத்தால் பாராட்டுகிறார். எந்தச் சிறு வேலை செய்தாலும் பாராட்டுகிறார். இதனால் அவருக்கு நாம் செய்யும் காரியம் பிடித்திருக்கிறது என்று தெரிகிறது. ஆனால் அவருக்கு என்னையும் பிடித்திருந்தால்......அவருடைய வாழ்க்கைத் துணை நலமாக என்னை ஏற்றுக் கொள்ளப் பிடித்திருந்தால்......' என்று எண்ணி எண்ணி ஏங்குவேன். எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விடும் கதையாகவே இருந்து வந்தது என் நிலைமை. ஆம், நான் எப்படிப் போய் என்னை மணந்து கொள்ளுங்கள் என்று கேட்பது!

*


இப்படி நான் உழன்ற போதுதான் என்னிடம் விமலா வந்து சேர்ந்தாள்.

முதலில் என் பால்ய சகி விமலாவைப் பார்த்ததும் எனக்குச் சந்தோஷமாக இருந்தது. அப்புறம் அவளுக்கு நேர்ந்த கஷ்டங்களையெல்லாம் சொன்ன போது சிரிப்பும் அழுகையுமாக வந்தது.

கஷ்டத்தைச் சொன்னால் சிரிப்பு வருமா என்று நீங்கள் கேட்கலாம். உதாரணத்துக்கு ஒன்று சொல்லுகிறேன்.

விமலாவுக்குக் கல்யாணம் பண்ண வேண்டும் என்று தீர்மானித்து, அவள் அப்பா ஒரு பிள்ளையாண்டானை 'பெண் பார்க்க' அழைத்து வந்தாராம். அவன் விமலாவை, "உனக்கு நாட்டியம் ஆடத் தெரியுமா?" என்று கேட்டானாம்.

இதைக் கேட்டதும் அவளுக்குக் கோபம் கோபமாக வந்ததாம். "உம், வரும்; உங்களுக்கு அதற்குத் தகுந்தபடி பாட்டுப் பாடத் தெரியுமா?" என்று கேட்டாளாம்.



இதைச் சொன்னபோது யாருக்குத்தான் சிரிப்பு வராமலிருக்கும். கடைசியில், அந்த வரனும் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்று சொல்லி விட்டுப்போய் விட்டானாம்!


இப்படி ஒரு வரனா இரண்டு வரனா? எத்தனையோ கைநழுவிப் போயினவாம். கடைசியில் ஒரு வரன் நிச்சயமாகி, அந்த வரன் பெண் பார்க்க வருவதாக இருந்த போது திடீர் என்று விமலாவின் தந்தை அகால மரணமடைந்தார்! அதனால் அந்த இடமும் குதிரவில்லை!

தந்தை அகால மரணமடையவே, கஷ்டங்கள் சொல்லொணாமற் போய் விட்டன. கடன்காரர்கள் தொல்லை அதிகமாகிவிட்டது! ஆகவே, வீடு வாசல் நிலம் எல்லாம் விற்றுக் கடனை தீர்த்துவிட்டுப் பட்டணத்தில் ஏதாகிலும் உத்தியோகம் செய்து பிழைக்கலாம் என்று தாயும் மகளும் என்னைத் தேடி வந்திருந்தார்கள்.

எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மானேஜர் மகாதேவனிடம் இதைப் பற்றிச் சொல்லலாம் என்று தீர்மானித்தேன்.

நான் சொன்ன முகூர்த்தமோ, அல்லது விமலாவின் அதிர்ஷ்டமோ என்னவோ, விமலாவுக்கு எங்கள் காரியாலயத்திலேயே வேலை கிடைத்து விட்டது!

முதலில் நூறு ரூபாய் சம்பளம் என்றும், 'டைப்' அடிக்கவும் சுருக்கெழுத்து எழுதவும் கற்றுக் கொண்டவுடன் சம்பளம் உயர்த்தப்படும் என்றும் சொல்லியிருந்தார் மானேஜர்.



ஆறு மாதங்களில், ஓரளவு இந்த இரு அரிய வித்தைகளைக் கற்றுக் கொண்டு மகாதேவனுக்குத் திருப்தியளித்து விட்டாள் விமலா. விமலாவின் இந்தத் திறமையைக் கண்டு என்னிடமே, "உன் தோழி கெட்டிக்காரியாக இருக்கிறாளே! அதற்குள் இவ்வளவு வேகமாக சுருக்கெழுத்து எழுதக் கற்றுக்கொண்டு விட்டாளே!" என்று பாராட்டினார்.

அப்பொழுது எனக்கும் பெருமிதமாகத்தான் இருந்தது!

ஆனால் நாளடைவில், மகாதேவன் விமலாவைப் பற்றி என்னிடம் பாராட்டும் போதெல்லாம் எனக்குப் பொறாமை வளரத் தொடங்கி விட்டது!

இதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. விமலாவும், மகாதேவனும் பேச ஆரம்பித்தார்களானால், ஒரு மானேஜரும், கிளார்க்கும் பேசும் பாவனையின்றி, ரொம்ப நெருங்கிய நண்பர்கள் அல்லது காதலர்கள் சம்பாஷணை புரிவது போல் பேசத் தொடங்கினார்கள். சிரிப்பதும், அட்டகாசம் செய்வதும் அதிகமாகப் போய்விட்டது. கம்பெனியிலிருந்த மற்றக் குமாஸ்தாக்கள் பியூன்கள் மறைமுகமாகக் கேலி செய்வதும் 'குசு' 'குசு' என்று பேசுவதும், ஆபாஸமாக வார்த்தையாடுவதும் அதிகமாகி விட்டது. என்னைப் போன்ற பெண் கிளார்க்குகளுக்குப் பெருந் தொல்லையாகவும் வேதனையாகவும் போய் விட்டது. ஆகவே இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று தீர்மானித்து, நேரே மகாதேவன் அறைக்குச் சென்று என் உணர்ச்சிகளையும், விமலாவுடன் அவர் பழகும் முறை நன்றாக இல்லை என்றும் கூறினேன். "இந்த ஆபாசமான நடவடிக்கைகளுக்கு எல்லாம் சீக்கிரமாக முடிவு காணுங்கள்!" என்று ஆங்கிலத்தில் வெகு வேகமாகச் சொன்னேன்.

"ஆகட்டும்!" என்று பொறுமையுடன் கூறினார் மகாதேவன்.

ஒரு வாரம் கழித்து, மானேஜர் என்னைத் தம் அறைக்குக் கூப்பிட்டார்.

"கமலா! நீ சொன்னபடி எங்கள் நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவு கண்டு விட்டேன். ஆகவே, இதைக் கொண்டுபோய், நல்ல அச்சாபீஸில் கொடுத்து அச்சடிக்க வேண்டிய பொறுப்பு உன்னைச் சேர்ந்தது!" என்று கூறினார்.

அவர் கொடுத்த காகிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். அது விமலாவுக்கும் எங்கள் மானேஜருக்கும் நடக்கப்போகும்

கல்யாண அழைப்பிதழாக இருந்தது! அதை அச்சடிக்க வேண்டிய பொறுப்பு எனக்கே வந்து சேர்ந்தது! அப்பொழுது என் மன நிலை எப்படியிருந்திருக்கும்!

அதிர்ஷ்ட தேவதை மறுபடியும் எனக்கு வஞ்சனை செய்து விட்டது!

விமலா, மகாதேவனின் மனைவியான பிறகு ஆபீஸ் லக்ஷ்மியாக இருப்பதை விட்டு விட்டு, பரிபூரண கிரகலக்ஷ்மியாகிவிட்டாள்.

நான் பழையபடி ஆபீஸ் வேலைகளைத் தொடர்ந்து செய்து வந்தேன்.

விமலா கிரகலக்ஷ்மியான பிறகு, அதிகமாகச் சந்திப்பதில்லை; கிட்டத்தட்ட இரண்டு வருஷங்களாகி விட்டன! ஆம், எனக்குத்தான் ஆபீஸ் வேலையே நாள் முழுவதற்கும் சரியாக இருக்கிறதே!

அன்று ஒருநாள் ஆபீஸ் சென்ற போது, மகாதேவன் என்னைப் பார்த்து "நாளை இரவு கல்கத்தா மெயிலில் நான் கல்கத்தாவுக்குப் போகிறேன். வர ஒரு வாரம் ஆகும்......" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இது சொன்ன அன்றுதான், கல்கத்தா மெயில் தண்டவாளத்தை விட்டு இறங்கிக் கவிழ்ந்தது! அந்தச் செய்தியைப் படித்தவுடன் தான், ஆரம்பத்தில் கூறிய உணர்ச்சிகள் எல்லாம் ஏற்பட்டன.

★

விமலாவின் நினைவு வந்ததும். எனக்கு அவளுடைய வைதவ்ய கோலமும் நினைவு வந்தது! "இவ்வளவு சிறு வயதில் இந்தக் கோலமா? பாவமே, விமலா இந்தக் கோலமடைவதற்கு என் பொறுமை தான் காரணமோ! ஐயோ!" என்று பலபடியாக எண்ணினேன். உடனே விமலாவைப் பார்க்கவேண்டும் போல் தோன்றிற்று—புறப்பட்டேன்.

விமலாவின் வீட்டை அடைந்ததும், மானேஜர் மகாதேவனே வாசலில் நின்று என்னை வரவேற்றார். எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது! நிஜமான மகாதேவனா? அல்லது மகாதேவன் ஆவியா என்ற சந்தேகங்கூட எழுந்தது!

சற்று நேரத்துக்கெல்லாம் விமலாவும் வந்து என்னை வரவேற்றாள் மலர்ந்த முகத்துடன்!

எனக்குத் திக்பிரமை பிடித்தாற்போல் ஆகிவிட்டது! பேச நா எழவில்லை; என்ன சொல்வது, எப்படிப் பேச்சு ஆரம்பிப்பது என்பது தெரியாமல் விழித்தேன்.

இந்த என் தர்ம சங்கடத்தை விமலாவே தீர்த்து வைத்தாள். என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு. "நேற்று நான் அலங்காரம் பண்ணிக் கொண்டு அவருடன் புறப்பட நேரமாயிற்று. அதனால்தான் கல்கத்தா மெயில் தவறி விட்டது. இதற்காக என்னை ஓயாமல் திட்டிக் கொண்டிருந்தார்! ஆனால் இன்று காலைப் பத்திரிகை பார்த்தாயல்லவா? எவ்வளவு பெரிய விபத்து! நான் தாமதித்ததனால் ரயில் தவறிப் போனது எவ்வளவு நல்லதாகப் போய்விட்டது!" என்று பெருமையடித்துக் கொண்டாள்.

அவர் ஒன்றும் சொல்லவில்லை. நான் "வாஸ்தவம்" என்றேன்.

கொஞ்ச நேரம் வேறு ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள். நான் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். பிறகு, "நேரமாகிவிட்டது! நான் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

போகும் வழியில் எல்லாம், "மகாதேவன் பிழைத்தது ரொம்ப சந்தோஷமான விஷயந்தான்! ஆனாலும், 'குறித்த காரியத்தைக் குறித்த நேரத்தில் செய்ய வேண்டும்' என்ற அரிய கொள்கையைக் கடைப்பிடிப்பதற்காக, உயிர்த் தியாகம் செய்ய நேர்ந்தாலும் தவறில்லை! அது அவ்வளவு நல்ல கொள்கையாயிற்றே!" என்று எண்ணிக் கொண்டே வந்தேன்.

இந்த எண்ணம் எனக்குத் தோன்றியது நியாயமா? சேற்றில் செந்தாமரை முளைப்பதற்கு ஒப்பாகுமா?



# இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?




வாயைச் சுத்திகரித்து மூச்சின் நாற்றத்தை போக்குகிறது.

உமிழ்நீர் கெடுதலைத் தடுத்து ஈறுகளைப் பாதுகாக்கிறது.

மேலே உள்ள கறைகளை அகற்றி பற்களுக்கு **வெண்மை** தருகிறது.

மக்ளீன்ஸ் பெராக்ஸைட் டூத் பேஸ்ட் உபயோகிக்கும்போது நீங்கள் உங்கள் பற்களுக்கும், ஈறுகளுக்கும் சிறந்த பாதுகாப்பு அளிக்கிறீர்கள். பற்கள் வெண்ணிறமாகி பளபளக்கிறது; அதே சமயத்தில் சுவாசத்திலும் நறுமணம் உண்டாகிறது. அதனால்தான் லக்ஷக் கணக்கான மக்கள் மக்ளீன்ஸைத் தவிர வேறு எதையும் உபயோகிப்பதில்லை.

**இன்றே மக்ளீன்ஸ் வாங்குங்கள்!**




MTX-5 TM

# மத்திய கேந்திரம்

~ ஜெயமணி ~

## 1. ஆப்கானிஸ்தான்

ஒரு விதத்தில் ஆப்கன் சரித்திரம்தான் இந்தியாவின் சரித்திரம்; இந்தியாவின் சரித்திரம்தான் ஆப்கன் சரித்திரம் எனலாம்!

ஆப்கானிஸ்தான் இந்தியாவின் வாசற்படியாக இருந்திராவிடில், இந்திய சரித்திரத்தின் போக்கே முற்றிலும் வேறுவிதமாகி யிருக்கும்.

எனவே, கைபர் கணவாய் வழியாக மத்திய கேந்திர நாடுகளில் ஒன்றான ஆப்கானிஸ்தானுக்கு முதலில் செல்லுவோம்.

"எகிப்து நாட்டின் எஜமானர்களாக இருப்பவர்கள் தான் இங்கிலாந்தை அடக்கி ஒடுக்கும் வல்லமை பெற்று விளங்க முடியும்", என்று நெப்போலியன் கூறியதாக முந்தியக் கட்டுரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அது போலவே, "காபூல் நகரின் எஜமானர்தான் இந்தியாவின் சக்கரவர்த்தியாக விளங்க முடியும்" என்று இந்தியாவில் ஒரு பழமொழி வழங்கியதாகச் சரித்திரங்களில் காண்கிறோம். நெப்போலியனின் கூற்றைக் காட்டிலும் மேற்படி பழமொழி முற்றிலும் உண்மையாகிவிட்டது! காபூலின் எஜமானர்களான மொகலாயர்கள்தான் பின்னர் இந்தியாவின் சக்கரவர்த்திகளாக விளங்கினார்கள்.

மகா அலெக்ஸாண்டர் முதல் மொகலாயர்கள் வரையில் எல்லோரும் இந்தியாவின் மீது படையெடுப்பதற்கு ஆப்கானிஸ்தானத்தின் தலைநகரான காபூல்தான் கேந்திர ஸ்தானமாக இருந்து வந்திருக்கிறது. இந்தியா மீது படையெடுத்துப் பல நகரங்களையும் கொள்ளையிட்டுச் சூறையாடிய அராபியர்களும் மொகலாயர்களும் ஆப்கானிஸ்தான் வழியாக வந்தவர்களே. மேற்படி கொள்ளைக்காரர்களில் கஜனி முகமதும் நாதர் ஷாவும்தான் முதல் ஸ்தானம் பெற்றனர் என்பதை அறியாதார் இருக்க முடியாது.

உலக சரித்திரம் குறிப்பிடும் மகா கோரமான போர்க்களங்களில் ஆப்கானிஸ்தானும் ஒன்றாகும். மகா அலெக்ஸாண்டர் பாரசீக சாம்ராஜ்யத்தைச் சேர்ந்திருந்த ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றிய பின், பல பல ஆண்டுகள் வரையில் அந்த நாடு கிரேக்கர்களின் ஆட்சியில் இருந்து வந்தது. கிறிஸ்துவ சகாப்தத்துக்குப் பின், 600-ம் ஆண்டில் ஆப்கானிஸ்தானை அராபியர்கள் கைப்பற்றுமுன், அங்கு பௌத்த மதமே வியாபித்திருந்தது. 1220-ம் ஆண்டில்தான் பூலோக யமனாக விளங்கிய ஜெங்கிஸ் கான் ஆப்கானிஸ்தானைச் சூறையாடினான். பதினெட்டாம் நூற்றாண்டில் பாரசீக மன்னனாக இருந்த நாதர் ஷா ஆப்கானிஸ்தானைத் தன்னுடைய ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தான். அதிலிருந்து நூறு வருஷங்களுக்குப் பிறகுதான் அங்கு பிரிட்டிஷாரின் ஆதிக்கம் ஏற்பட்டது.

பாரசீகத்தில் ஏழ்மையான ஆட்டு இடையர் குடும்பத்தில் பிறந்த நாதர் ஷா அதிர்ஷ்ட வசத்தினால் பாரசீக மன்னனாகச் சிம்மாசனம் ஏறும் பாக்கியம் பெற்றான். 1739-ம் வருஷம் ஆப்கானிஸ்தான் வழியாகப் படையெடுத்து, இந்திய மக்களை வெட்டி வீழ்த்தி, டில்லி மாநகரைத் தரை மட்டமாகச் செய்தவனும் அவன்தான். உலகப் பிரசித்தி பெற்ற கோஹினூர் வைரத்தையும் மயில் சிம்மாசனத்தையும் கொள்ளையடித்துச் சென்ற நாதர் ஷா இந்திய சரித்திரத்தின் கடுமையான கண்டனத்துக்கு ஆளானதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை. நாதர் ஷாவும் அவனது படைகளும் ஐம்பத்தெட்டு நாட்கள் வரையில் டில்லியைச் சூறையாடிக் கொள்ளையிட்டனர் என்றால் டில்லிமா நகரம் அக்காலத்தில் எவ்வளவு செல்வச் செழுமையுடன் விளங்கியிருக்க வேண்டும் என்பதை யாரும் ஊகித்துக் கொள்ளலாம்.

டில்லியை ஆட்சி புரிந்து சரித்திரப் பிரசித்தி பெற்ற பிருத்விராஜனைக் கொன்ற ஷஹாபுதீனும் ஆப்கானிஸ்தானத்திலிருந்து தான் படையெடுத்து வந்தான். எனவே இந்தியாவிலே முதன் முதலாக அன்னியரின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு ஆப்கானிஸ்தான் தேசமே முக்கிய தளமாக இருந்தது.

* * *

பல நூற்றாண்டுகளாக ஆப்கானிஸ்தான் ஆசியாவின் வர்த்தகப் போக்கு வரவுக்கு மாத்திரமல்ல, கலாசாரப் போக்கு வரவுக்கும் முக்கிய ஸ்தானமாக இருந்து வந்திருக்கிறது.

இன்றும்கூட அந்த நாட்டில் பாறையில் குடையப்பட்டுள்ள புராதன பௌத்த மடங்கள் இருக்கின்றன. கிறிஸ்துவ சகாப்தத்தின் ஆரம்பத்தில் அங்கு பௌத்த

மதம் பரந்திருந்தது என்பதற்கு அந்த மடங்களைக் காட்டிலும் நிரந்தரமான சிலாசாஸனம் வேறு என்ன வேண்டும்?

இந்தியாவும் ஆப்கானிஸ்தானும் வெகு காலம் வரையில் ஒன்றாக இருந்தது. பிறகு அது இந்தியாவிலிருந்து பிரிந்து விட்டது. எனினும், இந்தியா—ஆப்கன் எல்லை ஆயிரம் மைல் தூரம் இருப்பதால், இரு நாடுகளும் பரஸ்பரம் நெருங்கிய தொடர்புக்குக் குந்தகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.



நாதர் ஷா

ஆப்கானிஸ்தானம் இந்தியாவிலிருந்து பிரிந்த பிறகு அங்கு அடுத்துள்ள ருஷ்யர்களும் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தி வந்த பிரிட்டிஷாரும் தங்கள் தங்கள் செல்வாக்கைப் பலப்படுத்திக் கொள்வதற்காகப் போட்டா போட்டியிலும் சூழ்ச்சியிலும் ஈடுபட்டனர்.

அதன் விளைவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டனுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் அடிக்கடி போர்கள் மூண்டன. பல தடவைகளிலும் பிரிட்டிஷார் தோல்வியடைந்தார்கள். எனினும் இறுதியில் பிரிட்ஷார் அங்கு தங்களுடைய ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் நிலைநிறுத்திக் கொள்வதில் வெற்றி பெற்றதுதான் மிகவும் ஆச்சரியமாகும்.

அக்காலத்திலே மேற்படி சூழ்ச்சிகளுக்குப் பயந்து வட இந்தியாவில் வந்து அடைக்கலம் புகுந்த ஆப்கன் ராஜ குடும்பங்களின் சந்ததிகள் இன்றும் இந்த நாட்டிலேயே வசித்து வருகிறார்கள்.

இறுதியாக 1879-ம் வருஷத்தில் பிரிட்டனுக்கும் ஆப்கானிஸ்தானத்துக்கும் ஒரு சமரசம் ஏற்பட்டது. பிரிட்டனுடன் சிநேக பாவம் கொண்ட அமீர்களின் ஆட்சி ஆப்கானிஸ்தானத்தில் அமைவதற்குப் பிரிட்டிஷார் இசைந்தனர். எனினும் அத்தேசத்தின் வெளிநாட்டு விவகாரங்களின் நிர்வாகத்தைப் பிரிட்டிஷார் தாங்களே மேற்கொண்டனர்.

பிரிட்டிஷாருக்குக் கீழ்ப் படிந்து நடக்க ஆப்கன் அமீர்கள் வேண்டா வெறுப்புடன் இசைந்தார்கள். ஆனால், அவர்கள் மீது பிரிட்டிஷாருக்குப் பரிபூரண நம்பிக்கை உண்டாகவில்லை. எனவே, அமீர்கள் திரை மறைவில் எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் இருப்பதற்காகப் பிரிட்டிஷார் அவர்களுக்கு ஏராளமான கப்பத்தொகை கொடுத்து வந்தார்கள்.

அவ்விதம் பிரிட்டிஷாருடன் உறவு கொண்ட அமீர் அப்துர் ரஹ்மானின் ஆட்சி 1901-ம் ஆண்டு முடிவடைந்தது. பிறகு பிரிட்டிஷாரின் தயவில் ஹபிபுல்லா பட்டத்துக்கு வந்தார்.

பிரிட்டிஷாருடன் ஆப்கன் அமீர்கள் சமாதானத்தை நாடியதற்குப் பூகோள ரீதியான முக்கிய காரணம் உண்டு.

ஆப்கானிஸ்தானம் நாலாபுறமும் அன்னிய தேசங்களினால் சூழப்பட்டிருக்கிறது. அதற்குச் சொந்தமாக கடற்பாதையோ துறைமுகமோ இல்லை. எனவே அது வெளிநாடுகளுடன் போக்குவரவுத் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு அடுத்துள்ள ஒரு தேசத்தின் தயவையும் உதவியையும் நாடியே தீரவேண்டும்.

அக்காலத்தில் வடக்கே ருஷ்யா வழியாக வெளி உலகத்துடன் போக்குவரவுத் தொடர்பை வைத்துக் கொள்வது சுலபமாக இல்லை. அப்பொழுது அங்கு போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி அடையாததே அதற்குக் காரணம். எனவே, போக்குவரத்து வசதிகளுக்கு ஆப்கானிஸ்தான் இந்தியாவின் உதவியை நாட வேண்டியிருந்தது.

பிரிட்டனுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் அங்கு சூழ்ச்சியும் சதியும் ஓயவில்லை.

தங்களுக்குப் பணிந்து நடப்பவர்களே ஆப்கன் மன்னர்களாக வர வேண்டும் என்பதில் பிரிட்டிஷார் அக்கறை கொண்டு பல்வேறு உபாயங்களைக் கையாண்டு வந்தார்கள். பிரிட்டிஷாருடன் நெருங்கிய உறவு கொண்டிருந்த ஹபிபுல்லா மன்னர் சில சதிகாரர்களால் கொலையுண்டார். அவருக்குப் பின் அவரது சகோதரர் நஸருல்லா அமீர் பட்டத்துக்கு வந்தார்.

# 14 நாட்களில் நீங்களும் அழகிய சருமத்தை அடையலாம் என்று டாக்டர்கள் நிரூபிக்கின்றனர்



பாமோலிவ் அழகுத்திட்டம் வெவ்வேறு வயதுள்ள வெவ்வேறு சருமத்தை உடைய 1418 ஸ்திரீகளிடம் உபயோகிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. 14 நாட்களில் மூன்று பேர்களில் இருவர் அழகிய சருமத்தைப் பெற்றனர்.
நீங்கள் செய்யவேண்டியது இவ்வளவுதான். பாமோலிவ் சோப்பால் உங்கள் முகத்தைக்கழுவுங்கள், அதன் அடர்த்தியான நுரையை உங்கள் சருமத்தின் மேல்வைத்து 60 விநாடிகள் தேயுங்கள். பிறகு அலம்புங்கள். ஒரு நாளைக்கு 3 வேளை விதம் 14 நாட்கள் இவ்வாறு செய்யுங்கள். கீழ்க்கண்ட சருமமாறுதல்களைக் கவனிப்பீர்கள் :

- புதிய, பிரகாசமுள்ள நிறம் !
- குறைந்த தேய்ப்பு!
- அதிக மிருதுத்தன்மை, வழவழப்பு—உலர்ந்த சருமத்திற்கும் !
- தங்கி நிற்கும் புதிய புஷ்பத்தின் வாசனை.
- நீடித்து உழைப்பது.




சோப்பு மட்டுமில்லை — ஓர் அழகு சாதனம் !

---

மிகவும் அபூர்வமான

# PEPS



**வெந்த தொண்டைக்கு ஆறுதலளித்து இருமல், ஜலதோஷம், இன்ப்ளுவென்ஸாவை ஒழிக்கிறது**

பெப்ஸ் மாத்திரை வாயில் கரையும்போதே அதன் மருந்து சத்துக்கள் சுவாஸப் பைக்கும் மார்புக்கும் செல்கின்றன. பெப்ஸிலுள்ள அபூர்வ சத்துக்கள் வெகு விரைவில் அபாயகரான கிருமிகளை அழித்து, தொண்டை கரகரப்பை அகற்றி, நமைச்சலைப் போக்கி, ஓயாத இருமலையும் அடியோடு நிறுத்தி விடுகிறது. சாப்பிட இனிமையானது.



**PEPS** மார்பு, சுவாசப்பை உபத்திரவங்களுக்கு பகவும் இன்றியமையாத கிருமிநாசன மாத்திரைகள்

# சஞ்சீவி மருந்து

கி. ரா. கோபாலன்

**ப**ன்னிரண்டு வருஷங்கள் ஓடிவிட்டன. எல்லாம் மறந்து போய் விட்டது.

மறந்து விட்டதா......! எப்படி மறக்க முடியும்! எதையும் நினைத்துப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பமும் அவகாசமும் ஏற்பட்டால் ஒவ்வொன்றாக ஞாபகத்துக்கு வரலாமல்லவா!

ஒரத்தநாடு என்ற கிராமத்தில்தான் ராமமூர்த்தி பிறந்தான். அங்குதான் பதினைந்து வயது வரையில் வளர்ந்தான். திடீரென்று அவனுடைய தகப்பனாருக்குச் சென்னையில் ஒரு உத்தியோகம் கிடைத்ததால் குடும்பத்தைச் சென்னைக்கு மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நான்கு வருடங்களுக்குப் பிறகு அவருடைய உத்தியோகம் சென்னையிலிருந்து பம்பாய்க்கு மாறியது. உத்தியோகத்தைப் போலவே குடும்பமும் பம்பாய்க்கு மாறியது.

எப்படியோ பம்பாயில் பன்னிரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. இந்தப் பன்னிரண்டு வருடங்களில் ராமமூர்த்தி தன் தாயார் தகப்பனார் இருவரையும் இழந்து விட்டான். நல்ல வேளையாக அவன் அங்கு ஆதரவின்றி விடப்படவில்லை. அவனுடைய தகப்பனார் உத்தியோகத்திலிருந்த இடத்திலேயே அவனுக்கும் ஒரு உத்தியோகம் கிடைத்தது

ஒரத்த நாடு என்னும் ஊரில் அவனுக்குச் சொந்தமாக ஒரு வீடோ ஒரு குழி நிலமோ கிடையாது. தனக்கு ஒன்று விட்ட அத்தை ஒருத்தி இருந்தது மாத்திரம் அவனுக்கு நினைவுக்கு வந்தது. அவன் ஒரு மாத ரஜாவில் சென்னைக்கு வந்த பொழுது, தான் பிறந்து வளர்ந்த ஊரையும் ஒரு தடவை போய்ப் பார்க்க வேண்டுமென்று ஆசை ஏற்பட்டது.

பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு அந்த ஊரில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கலாம். தன்னோடு சிறு வயதில் பழகிய சிநேகிதர்களெல்லாம் இருக்கிறார்களோ இல்லையோ! அப்படி யாரேனும் இருந்தாலும் அவனைப் பற்றிய ஞாபகம் அவர்களுக்கு இருக்குமோ இருக்காதோ! நினைத்து நினைத்துப் பார்த்தாலும் ராமமூர்த்திக்கு அவனோடு பழகிய நண்பர்களின் முகங்கள் ஞாபகத்துக்கு வந்ததே தவிர பெயர்களில் ஒன்றாவது ஞாபகத்துக்கு வரவில்லை. அவனுக்கு ஒன்று மாத்திரம் ஞாபகத்துக்கு வந்தது. அதாவது அவனுக்கு ஒன்று விட்ட அத்தை அந்த ஊரில் இருந்ததுதான். ஆனால் அவளும் இப்பொழுது உயிரோடு இருக்கிறாளோ இல்லையோ! அப்படியே அவள் உயிரோடு இருந்தாலும் தன்னை முகமலர்ச்சியோடு வரவேற்பாளோ மாட்டாளோ! ஏனென்றால் அவளுக்கும் அவனுடைய தகப்பனாருக்கும் அவ்வளவு சௌஜன்யமான உறவு கிடையாது. பண விஷயத்தில் ஏதோ தகராறு. இந்தத் தகராறெல்லாம் அவனுக்கு அவ்வளவு விவரமாகத் தெரியாது. எப்படி இருந்தால் என்ன! அந்தத் தகராறுகளெல்லாம் தன் தகப்பனாரோடு ஒழியட்டும். இப்பொழுது தனக்கு உறவு என்று சொல்லிக் கொண்டு அந்த ஊருக்குப் போக ஒரு ஜீவன் இருந்தது அவனுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. ஒரு வேளை அந்த அத்தை இறந்து போயிருந்தாலும் அவளுடைய குடும்பத்தினர் யாராவது இருக்க மாட்டார்களா! அவர்களிடமாவது தன் உறவைப் பற்றிச் சொல்லி அந்த ஊரில் தங்குவதற்கு வசதி செய்து கொள்ளலாமென்று ராமமூர்த்தி எண்ணினான்.

சென்னையிலிருந்து இரவு புறப்படும் வண்டியில் ஏறி உட்கார்ந்ததிலிருந்து ராமமூர்த்தியின் ஞாபகமெல்லாம் ஒரத்தநாட்டிலேயே இருந்தது. அவன் நினைவுக்கு வந்த முகம் ஒவ்வொன்றையும் பற்றிச் சிந்தித்துப் பார்த்தான். அவனோடு ஓடி விளையாடியவர்களெல்லாம் இப்பொழுது அவனைப் போல் வளர்ந்து வாலிபர்களாக இருப்பார்கள். அவர்களில் எவ்வளவு பேர் உத்தியோகத்துக்காக வெளியூர்களுக்குப் போய் விட்டார்களோ! எவ்வளவு பேர் சொந்த ஊரிலேயே இருக்கிறார்களோ! கோயில், குளம், தெருக்கள், வீடுகள் எல்லாம் எவ்வளவு மாறுதல் அடைந்திருக்கின்றனவோ! ஆறு, குளம், கோயில், வீதியெல்லாம் ராமமூர்த்தியின் மனக்கண்ணில் மேக சஞ்சாரம் போல் தோன்றி கரைந்து கொண்டிருந்தன.

## 2

**வா**சலில் குதிரை வண்டி வந்து நிற்பதைக் கண்டதும் திண்ணையில் உட்கார்ந்திருந்த சங்கரய்யர் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார்.



வண்டியிலிருந்து ஒரு வாலிபன் இறங்கினான். அவன் கையில் ஒரு தோல் பை இருந்தது. அவன் வண்டிக்காரனிடம் சில்லறையைக் கொடுத்து விட்டு, சங்கரய்யரை நெருங்கி ஏற இறங்க ஒரு தடவை பார்த்துவிட்டு, "இது தானே சங்கரய்யர் வீடு!" என்று கேட்டான்.

"ஆமாம்! ஆமாம்! இதே வீடுதான். நான் தான் அவர். வாருங்கள் உள்ளே......" என்று உபசாரம் செய்து அழைத்துப் போனார் சங்கரய்யர். வாலிபன் தயங்கியபடியே அவரோடு வீட்டுக்குள்ளே சென்றான்.

சங்கரய்யர் அந்த வாலிபனுக்குத் தாழ்வாரத்திலிருந்த ஒரு நாற்காலியைக் காட்டி அமரச் சொல்லிவிட்டு, தாமும் ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்து வினயத்தோடு "இந்த ஊருக்கு வருகிறதே உங்களுக்கு ரொம்ப சிரமமாய் இருக்கும். உங்கள் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது, ரொம்பக் களைப்படைந்திருக்கிறீர்கள் என்று. நீங்கள் தனியாகத்தான் வந்தீர்களோ! கனபாடிகள் வரவில்லையோ!" என்று சொல்லிச் சிரித்து நிறுத்தினார்.

வாலிபன் அவருக்கு ஏதோ பதில் சொல்ல நினைத்தான். ஆனால் அவர் அவனை வாய் திறக்க விடுவதாயில்லை. "கனபாடிகள் வராவிட்டால் பாதகமில்லை. அவருக்கு எப்பொழுதும் ஏதாவது ஜோலி இருந்துகொண்டே இருக்கும். நீங்கள் பார்த்து மனதுக்குப் பிடித்திருந்தால் எல்லாம் சரிதான் என்று அவர் முன்பே எனக்குச் சொல்லியிருக்கிறார். காலத்தை அனுசரித்து எல்லா விஷயத்திலும் இங்கிதமாகப் போக எனக்குத் தெரியும்...... சரி! சரி! நீங்கள் ரொம்பக் களைப்பாய் இருக்கிறீர்கள். இதோ வந்துவிட்டேன்..." என்று சொல்லிவிட்டு உள்ளே ஓடினார்.



வாலிபனுக்கு இதெல்லாம் கொஞ்சம் வியப்பாகத்தானிருந்தது. 'இவர் என்ன மனிதர்! என்னை வாய் திறக்க வழி விடாமல் செய்து ஏதேதோ காரியங்கள் செய்ய முனைந்து விட்டாரே!' என்று யோசனையில் ஆழ்ந்தான்.

உள்ளே சென்ற சங்கரய்யர் சில நிமிஷங்களுக்குள் ஒரு வெள்ளித் தட்டில் கேஸரியும் ஒரு டம்ளரில் காப்பியும் எடுத்துக்கொண்டு அவன் எதிரில் வந்து நின்றார். "இந்தாருங்கள். இதை முதலில் சாப்பிடுங்கள். அப்புறம் எல்லாவற்றையும் விவரமாகப் பேசிக்கொள்ளலாம்" என்றார்.

வாலிபன் அவைகள் இரண்டையும் வாங்கிப் பக்கத்தில் வைத்து விட்டு, "ஒரே ஒரு வார்த்தை! முதலில் நான் யாரென்று......" என்று ஆரம்பித்தான்.

"எனக்குத் தெரியும். கனபாடிகள் உங்களைப் பற்றி ரொம்பச் சொல்லியிருக்கிறார். எனக்கு எல்லா விஷயத்திலும் பூரண திருப்தி. வீட்டிலே அவளுக்கும் ரொம்பத் திருப்தி!" என்றார்.

இந்த மனிதரைத் தெளிய வைப்பது அந்த வாலிபனுக்குப் பகீரதப் பிரயத்தனமாகத்தான் பட்டது. "நான் மதுரையிலிருந்து வருகிறேன்" என்றான் மெதுவாக.

"நீங்கள் மதுரையிலிருந்துதான் வரப் போகிறீர்கள் என்று கனபாடிகள் என்னிடம் சொல்லியிருக்கிறார்" என்றார் சங்கரய்யர்.

"எனக்குக் கனபாடிகளையே தெரியாது!" என்றான் வாலிபன் பதட்டமே இல்லாமல்.

இதைக் கேட்டதும் சங்கரய்யர் துள்ளிக் குதித்தார். "அப்படியென்றால் நீங்கள்......" என்று பாக்கியையும் சொல்ல முடியாமல் விழுங்கினார் சங்கரய்யர்.

"கனபாடிகள் சொல்லிய மனிதர் வேறு, நான் வேறு!" என்றான் வாலிபன்.


"நீங்கள் யாரு!"

"நானா! நான் உங்கள் ஒன்றுவிட்ட மைத்துனன், சிவராமய்யரின் பிள்ளை. பம்பாயில் இருந்தாரே, அவருடைய பிள்ளை ராமமூர்த்தி!" என்றான்.

இதைக் கேட்டதும் இன்னொரு துள்ளுத் துள்ளினார் சங்கரய்யர். "நீ சிவராமனுடைய பிள்ளையா! அடடே! உன்னைச் சிறு குழந்தையாக இருந்த போது பார்த்தது!" அதற்கு மேல் அவர் அங்கு நிற்கவில்லை. "அடியே!" என்று கூவிய வண்ணம் சமையலறையை நோக்கி ஓடினார்.

சில நிமிஷங்களுக்குள் ராமமூர்த்தியின் அத்தை மங்களத்தம்மாள் பதட்டத்துடன் வெளியே வந்து ராமமூர்த்தியிடம் பிரலாபிக்கத் தொடங்கினாள். "அப்பா! வா! உனக்காவது அத்தை என்று உறவு கொண்டாடிக் கொண்டு வரத் தோன்றியதே. நான் கூடப் பிறந்த தங்கையாக இல்லாவிட்டாலும் உன் அப்பன் இப்படித் திரஸ்காரம் செய்து விட்டு இருக்க வேண்டாம். இப்படிக் கண்காணாத சீமையில் போய்ச் செத்து வைக்க வேண்டாம். பணம் காக விஷயத்தில் பதினாயிரம் தகராறு இருந்தாலும் பழைய தோஷத்துக்காவது எனக்கு ஒரு வரி கடிதாக போட்டுக்கொண்டிருந்தால் எனக்கு எவ்வளவோ மன ஆறுத

# சென்ஸஸ் ஹாஸ்யம் - 3




லாய் இருந்திருக்கும்......" என்றாள் கண்கலங்கத் தழு தழுத்த குரலில் அவன் அத்தை.

வாசலில் ஏதோ வண்டி வந்து நிற்கும் சத்தத்தைக் கேட்டுச் சங்கரய்யர் பரபரப்புடன் வெளியே ஓடினார். மங்களத்தம்மாள் சமையலறைக்குள் சென்றாள். ராமமூர்த்தி இவைகளை யெல்லாம் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டு அந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தான்.

சங்கரய்யர் யாரை எதிர் பார்த்திருந்தாரோ, அவர்கள் வந்து விட்டார்கள். சங்கரய்யர் அவர்களை உபசரித்து உள்ளே அழைத்து வந்து, தாழ்வாரத்திலிருந்த விரிப்பில் அமர்த்தித் தாமும் உட்கார்ந்தார். வந்திருந்த இருவரில் ஒருவர் வயதானவர். அவருக்குக் கிட்டத்தட்ட அறுபது வயது இருக்கும். மற்றொருவன் வாலிபன். அவனுக்குச் சுமார் இருபத்தைந்து வயது இருக்கும். அவன் பார்ப்பதற்கு மிகவும் சங்கோச சுபாவமுள்ளவனாகவும் கூச்சமுள்ளவனாகவும் தென்பட்டான். சுருண்ட கிராப்புத் தலை. கவர்ச்சிகரமான முகம், பிரகாசமான கண்கள், சில்க் ஜிப்பா, விசிறிமடி ஜரிகை அங்கவஸ்திரம், கைக் கடிகாரம், மோதிரம் எல்லாம், புதிதாகப் பெண்ணைப் பார்க்க வரும் வரன் எவ்விதமான ஆடை அலங்காரத்துடன் வரவேண்டுமோ, அதில் துளிக்கூட குறைவில்லை.

சில நிமிஷங்கள் லோகாபிராமமாகப் பேச்சுக்கள் நடந்தன. பையனின் பூர்வோத்திரம், உத்தியோகம், அந்தஸ்து இவைகளை யெல்லாம் பற்றித் திரத் தெளிய விசாரிக்கலானார் சங்கரய்யர். அந்த வாலிபன் அவருடைய கேள்விகள் சிலவற்றுக்கு 'ஆமாம்' என்றும், சிலவற்றுக்கு 'இல்லை' என்றும், சில கேள்விகளுக்குத் தலையை ஆட்டியும் பதில்சொன்னான்.

ராமமூர்த்தி இவை எல்லாவற்றையும் கவனித்தான். அவனுக்கு முதலில் எல்லாம் ஆச்சரியமாக இருந்தாலும் போகப் போக எல்லாம் தெளிவாக விளங்கியது. ஆனால் அவன் மனதில் வியப்புக்குக் காரணமாக இருந்தது ஒன்றே ஒன்றுதான். அவனுடைய அத்தைக்குக் கல்யாண வயதுக்குரிய பெண் ஒருத்தி இருப்பது அப்பொழுதுதான் அவனுக்குத் தெரிந்தது. குழந்தைப் பருவத்தில் அவன் அந்த ஊரில் இருந்தபொழுது அவன் பார்த்துப் பழகிய முகங்கள் எவ்வளவோ அவன் ஞாபகத்துக்கு வந்தன. ஆனால் தன் அத்தை பெண்ணின் முகத்தை அவன் ஞாபகத்துக்குக் கொண்டு வரவே முடியவில்லை. அவன் அந்த ஊரை விட்டுக் கிளம்பும் பொழுது மூன்று வயதுக் குழந்தையாக இருந்த பார்வதியை அவன் அடியோடு மறந்துவிட்டான். இதற்குக் காரணம் எவ்வளவோ உண்டு. அவனுடைய தகப்பனார் அந்த ஊரை விட்டுக் கிளம்பும்பொழுது அவருக்கும் அவருடைய ஒன்று விட்ட சகோதரியாகிய மங்களத்துக்கும் விரோதம் உச்ச நிலையில் இருந்தது. ஒருவரோடு ஒருவர் பேசவில்லை. ஒரு குடும்பத்துக்கும் மற்றொரு குடும்பத்துக்கும் போக்குவரத்து இல்லாமல் இருந்தது. பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகுதான் தன் அத்தையைப் பற்றிய ஞாபகமே ராமமூர்த்திக்கு ஏற்பட்டதென்றால் தன்னோடுசேர்ந்து கூடப் பழகாத அத்தையின் பெண் பார்வதியைப் பற்றி அவனுக்கு எங்கே ஞாபகம் இருக்கப்போகிறது! அந்தச் சமயத்தில் ராமமூர்த்தி ஒரு நாடகத்தைப் பார்க்கும் ரஸிகனைப் போல் தான் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டு வந்தான். உண்மையாகவே கல்யாணத்துக்குப் பெண் பார்க்க வரும் சம்பிரதாயமே முன்னேற்பாடான நாடக ஒத்திகை போலத்தானே இருக்கிறது!

சங்கரய்யர் உள்ளே போய் வந்திருந்தவர்களுக்குக் காப்பி, பலகாரம் முதலியவைகளைக் கொண்டு வந்து கொடுத்து உபசரித்தார். பாவம்! வந்திருந்த பையன் மிகவும் சங்கோசத்துடன் அவற்றைச் சாப்பிட்டு வைத்தான். பலகாரம் சாப்பிட்டாகி விட்டது! அடுத்த நிகழ்ச்சி! அதைப் பெண் பார்க்க வந்த வாலிபன் எவ்வளவு துடிப்போடு எதிர்பார்த்தானோ, அதைவிட அதிகத் துடிப்போடு எதிர் பார்த்தான் ராமமூர்த்தி.

"ஹாம்! சரி! குழந்தையைப் பார்க்கலாமே...!" என்றார் கனபாடிகள்.

"ஆகட்டும். இதோ வந்துவிட்டேன்!" என்று சொல்லியபடி சமையலறையைப் பார்த்துக் கொண்டே ஒரு கனைப்புக் கனைத்தார் சங்கரய்யர். உண்மையாகவே ஒரு நாடகத்தின் முக்கியமான காட்சியை எதிர் பார்ப்பதுபோல் இருந்தது அப்பொழுது ராமமூர்த்தியின் மனசு.

சமையலறையின் வாசற்படியிலிருந்து மின்னலைப்போல் கண்ணைப் பறிக்கும் ஜோதி ஒன்றும் தோன்றிவிட வில்லை. ஆனால் மனதை இழுக்கும் சிறு சுவடித்திரம்போல் வந்து நின்றாள் பார்வதி. ஊர்வசியோ மேனகையோ வானத்திலிருந்து வையத்தில் வந்து அப்பொழுது குதித்துவிடவில்லை. வாசற்படியை ஒட்டினாற் போல் சங்கரய்யரின் பெண்—ராமமூர்த்தியின் அத்தை பெண்—பார்வதிதான் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய தாயார் அவளுக்கு விசேஷமாக ஏதேதோ அலங்காரங்கள் செய்

இருந்தாள். ஒவ்வொரு தாயாரும் செய்யக் கூடியதுதானே இது! ஆனால் இவ்வளவு அழகான முகத்தையும் கண்களையும் படைத்த பார்வதிக்கு இந்த அலங்காரங்களெல்லாம் அவசியமே இல்லை என்பது ராமமூர்த்தியின் அபிப்பிராயம். உண்மையாகவே அவளைப் பார்த்ததும் ராமமூர்த்தியின் நெஞ்சு நெகிழ்ந்து விட்டது. வெட்கத்தினால் கீழ் நோக்கிப் புதைத்திருந்த அவளுடைய கண்களும் அவளுடைய வசீகரமான முகமும் அவன் மனத்தைத் தடுமாறத்தான் வைத்தன. ஆனால் அவளை மனைவியாக்கிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் பார்க்க வந்திருப்பவன் வேறொருவனாயிற்றே!

சித்திரத்தில் எழுதப்பட்ட சுந்தரி போல நின்று கொண்டிருந்த பார்வதியைப் பார்த்துச் சங்கரய்யர், "பாரு, முதலில் கனபாடிகளை நமஸ்காரம் பண்ணு!" என்றார்.

பார்வதி வரிசைக் கிரமமாக எல்லோரையும் நமஸ்காரம் செய்து எழுந்தாள். ராமமூர்த்தியை அவள் நமஸ்காரம் செய்ய வந்த போது அவன் நிலைமையே குழப்பமடைந்திருந்தது. அப்பொழுதுதான் அவள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவனும் அவளைக் கவனித்தான். அவளுடைய களங்கமற்ற கண்களின் மிருதுவான பார்வையிலிருந்து அவன் எந்த விதமான ஜீவ ரகசியத்தையும் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவள் அவனை எதற்காக நமஸ்கரித்தாள்! வயதில் பெரியவன், தான் யாரோ ஒருவனை விவாகம் செய்து கொண்டு சுகமாக வாழவேண்டுமென்று அவன் ஆசீர்வாதம் செய்ய வேண்டுமென்பதற்காகத் தானே நமஸ்காரம் செய்தாள்! ஆனால் அவன் மனோநிலை அப்பொழுது அப்படி இருந்ததா!

ஏதோ சம்பிரதாய நாடகங்களெல்லாம் நடந்தேறின. மற்ற லௌகிக சம்பந்தமான பேச்சுக்கள் எல்லாம் பேசி முடித்தாகிவிட்டது. இரண்டு மூன்று நாட்களில் நிச்சயதார்த்தம் செய்து முகூர்த்தப் பத்திரிகை எழுதுவதாகவும் தீர்மானித்தனர்.

ராமமூர்த்தி, தான் பிறந்து வளர்ந்த ஊரைப் பார்த்துவிட்டுப் போகத்தான் வந்தான். ஆனால் வந்த இடத்தில் அவன் எதிர்பாராத விதமான மனமாறுதலுக்கு இடம் ஏற்பட்டு விட்டது. சூழ்நிலை அவன் மனத்தைப் போராட்டத்தில் இழுத்து விட்டுவிட்டது. அவன் மனத்தில் ஒரு புதிய குழப்பமும் புகைச்சலும் ஏற்படும் படியான நிகழ்ச்சிகள் ஏற்பட்டு விட்டன. அவனுடைய அத்தை பெண் பார்வதிக்கு ஒரு வரன் நிச்சயம் செய்யப்பட்டது அவனுக்கு மிகவும் ஆற்றாமையாகத் தானிருந்தது. தன் கைக்கு எட்டிய பொருளை வேறு ஒருவன் தட்டிப் பறித்துக் கொண்டு போய்விட்டது போன்ற உணர்ச்சி அவனுக்கு உண்டாயிற்று.

## 3

இரண்டு மூன்று நாட்கள் ஓடின. ராமமூர்த்தி இரண்டொரு நாள் அந்த ஊரில் தங்கியிருந்து விட்டுத் திரும்பி விடுவதாகத் தான் நினைத்தான். ஆனால் இப்பொழுது அவ்வளவு சுலபமாக அந்த ஊரைவிட்டுக் கிளம்பிவிட அவன் மனம் இடங் கொடுக்கவில்லை. தவிர அவனுடைய அத்தை அவனைப் பார்வதியின் கல்யாணம் வரையில் தங்கிவிட்டுப் போகும்படி வற்புறுத்தினாள். பார்வதியின் கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் துரிதமாக நடந்து கொண்டிருந்தன.

மங்களத்தம்மாள் ராமமூர்த்தியிடம் மிகவும் பரிவாகத்தான் நடந்து கொண்டாள். ஆனால் அவளுடைய பரிவு உணர்ச்சியை இன்னும் அதிகமாக எதிர்பார்த்தான் ராமமூர்த்தி. உண்மையாகத் தன்னிடம் அவ்வளவு பரிவும் அன்பும் அத்தைக்கு இருந்தால் ஒரு அழகான பெண்ணை வளர்த்துத் தன்னை வஞ்சித்துவிட்டு வேறொருவனுக்கு அவளை மணம் செய்து வைக்க முயற்சிப்பானேன்! அந்த வாலிபனை விடத் தான் அழகில் குறைந்தவனா! அந்தஸ்தில் குறைந்தவனா! படிப்பிலோ உத்தியோகத்திலோ தாழ்ந்தவனா! ஏன் அவனுக்குப் பார்வதியைக் கல்யாணம் செய்து கொடுக்கக்கூடாது! அத்தையிடம் தன் மனத்திலுள்ள ஆசையைச் சொல்லி வாதிட்டு எப்படியாவது பார்வதியைக் கல்யாணம் செய்து கொள்ள ஏற்பாடு செய்யலாமா என்று நினைத்தான். அத்தையின் பரிவும் பாசமும் வெறும் பாசாங்காக இருக்குமோ என்று அவனுக்குத் தோன்றியது. அத்தையிடம் தன் மன ஆசையைச் சொல்லியும் அவள் சம்மதிக்காவிட்டால் வெட்கத்தை விட்டுக் கேட்டும் அவமானப்பட்டதாக அல்லவா போய் விடும்! அவனுக்கு இன்னொரு யுக்தி தோன்றியது. எப்படியாவது பார்வதியோடு நெருங்கிப் பேசி அவள் மனத்தைத் தன் வசப்படுத்தி அவளைக் கல்யாணம் செய்து கொண்டுவிடலாம் என்று எண்ணினான் ராமமூர்த்தி. ஆம்! செல்வமாக வளர்ந்த ஒரே பெண்ணின் ஆசைக்கு விரோதமாக எந்தப் பெற்றோர்

## சென்ஸர் ஹாஸ்யம் 4



களால்தான் நடக்கமுடியும்! ராமமூர்த்திக்கு இதுதான் சரியான வழியாகப்பட்டது.

ராமமூர்த்தி வந்த இரண்டொரு நாள் வரையில் பார்வதி அவனிடம் சிறிது சங்கோசத்துடன் நடந்து கொண்டாளே தவிர, இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு அவனோடு சரளமாகப் பேசிப் பழகலானாள். அவளுடைய கலகலப்பான பேச்சு-சிரிப்பு, கபடமற்ற பார்வை எல்லாம் ராமமூர்த்தியின் மனத்தில் நாளுக்கு நாள் ஆசைக் கனலைத் தூண்டிவிட்டதே தவிர நிம்மதியையும் சாந்தியையும் உண்டாக்குவதாயில்லை. ராமமூர்த்தி அவள் பேச்சின் போக்கை மாற்ற நினைத்து ஏதாவது பேச ஆரம்பித்தால் பார்வதி உள்ளே ஓடி விடுவாள்.

அன்று மத்தியானம் அவனோடு பேச அவளுக்குச் சிறிது சந்தர்ப்பம் அகப்பட்டது. "அம்மாஞ்சி! பம்பாயில் கத்திரிக்காய், பாகற்காய் எல்லாம் மலிவாகக் கிடைக்குமோ!" என்று கேட்டாள் சிரித்துக்கொண்டே.

ராமமூர்த்தி சிரித்துக் கொண்டே "அங்கேயா...! கிடைக்கும். ஆனால் இவ்வளவு மலிவாகக் கிடைக்காது. அங்கே பீட்ரூட், காரட், காபேஜ், டொமாட்டோ, பொடாட்டோ இதெல்லாம்தான் சல்லிசாகக் கிடைக்கும்" என்றான்.

பாவம், இப்படிப்பட்ட பெயர்களையெல்லாம் பார்வதி கேள்விப்பட்டதே இல்லை. "பெயர்களெல்லாம் விநோதமாக இருக்கிறதே! இதெல்லாம் என்ன காய்கறிகளா! இல்லா விட்டால் வேறு ஏதாவது..." என்றாள் கபடமில்லாமல்.

"இதெல்லாம் காய்கறிகள்தான். இங்லீஷ் வெஜிடபில்ஸ். பாம்பே என்றால் சாதாரணமா! தேவலோகம் மாதிரி. ரோடுகள், பார்க்குகள், பங்களாக்கள்! எங்கு பார்த்தாலும் ஒரே ஜோதி மயமாய்த்தானிருக்கும். பாவம்! பட்டிக்காட்டுப் பெண் உனக்கு இதெல்லாம் எங்கே தெரியப்போகிறது! பம்பாயில் இருக்கும் ஒருவனைக் கல்யாணம் செய்து கொண்டாலும் அதிர்ஷ்டக்காரி என்று சொல்லலாம்" என்றான் அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டே.

"பம்பாயைப் போலத்தானே மதுராவாம்! அவருக்குத்தான் மதுராவில் வேலையாமே...!" என்றாள் அரைகுறையான வெட்கத்துடன்.

"மதுரால் எனக்குப் பிடிக்கவில்லை. என்ன இருந்தாலும் பம்பாயைப் போல ஆகாது..." என்றான் ராமமூர்த்தி.

"உனக்குப் பிடிக்காவிட்டால் போகட்டும். உனக்குப் பம்பாயில் இருந்து பழக்கம். எனக்கு மதுரால்தான் ரொம்பப் பிடிக்கிறது!" என்றாள் குழந்தை போல.

ராமமூர்த்தி பார்வதியின் முகத்தைப் பார்த்தான். அதில் அறியாமையும் வெகுளித்தனமும் தான் நிறைந்திருந்தன. அவள் மிகவும் வெகுளியாக இருந்தாலும் தன் மனத்தில் உள்ளதை அவள் உணரும்படி செய்வது அவனுக்குச் சிறிது சிரமமான காரியமாகத்தான் பட்டது. ஆகவே, சம்பாஷணையை வேறு வழியில் திருப்ப நினைத்தான். "அதிருக்கட்டும். நீ கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயே, அவனை உனக்குப் பிடித்திருக்கிறதா......! என்றான்.

"போ, அம்மாஞ்சி! உனக்குச் சதாபரிகாசம் தான்......" என்றாள் தன் வெட்கத்தை ஒரு விதமாகச் சமாளித்துக் கொண்டு.

"பரிகாசமில்லை. உண்மையாகவே கேட்கிறேன்..." என்றான் ராமமூர்த்தி.

"பிடிக்காமல் என்ன! அவருக்கு என்ன குறைந்து விட்டது!" என்றாள் பளிச்சென்று.

ராமமூர்த்தி ஒன்றும் பதில் பேசவில்லை. உண்மைதான். அவனுக்கு என்ன குறைவு! ராமமூர்த்தியைப் போல் அவனும் வாலிபன். அழகில் எந்த விதத்திலும் ராமமூர்த்திக்குக் குறைந்தவனில்லை. அவனும் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறான். குணமும் நன்றாய்த்தான் இருக்கும் போலிருக்கிறது. இதைவிட ஒரு பெண்ணுக்கு வேறு என்னவேண்டும்! வேண்டுமானால் ராமமூர்த்தி சுயநலம் காரணமாக வஞ்சனையாக அந்த வாலிபன் மீது ஏதாவது குறைகள் இருப்பதாகச் சொல்லிப் பார்வதியின் கபடமற்ற உள்ளத்தை மாற்ற முயற்சி செய்யலாம். ஆனால் அவனுக்கு அந்த அளவுக்குத் துணிவு உண்டாகவில்லை.

"அதற்குச் சொல்லவில்லை. கொஞ்சம் நெருங்கிய உறவினனாக இருந்தால் நன்றாய் இருக்கும். என்ன இருந்தாலும் முகம் தெரியாத இடம்தானே!" என்றான் ராமமூர்த்தி எங்கேயோ பார்த்துக் கொண்டு.

"எல்லோரும் உறவுக்காரர்களைத்தான் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்கிறார்களா! யார் யாருக்கோ யார் யாரோ வந்து அமைகிறார்கள்! எப்படியோ மனம் ஒத்திருந்தால் சரிதான்......" என்றாள் பார்வதி.

ராமமூர்த்தி மௌனமாக உட்கார்ந்திருந்தான். தன் மனத்திலுள்ளதை அவள் புரிந்து கொள்ளும்படி இன்னும் எவ்வளவு தெளிவாகச் சொல்ல முடியும் என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தான் போலிருக்கிறது. அந்தப் பேதைப் பெண்ணின் மனத்தைக் கலைப்பதில் அப்பொழுது தன் திறமையைக் காட்ட அவனுக்கு இஷ்டமில்லை. வேறொரு சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ள நினைத்தான்.

"ஆமாம்! யார் யாரோ முகம் தெரியாதவர்கள்தான் வந்து ஒவ்வொரு பெண்ணையும் கல்யாணம் செய்து கொள்கிறார்கள். ஒவ்வொரு பெண்ணும் நன்ம நன்மாத்திரமாக அவர்களோடு பழகியவர்கள் போல் கல்யாணம் செய்து கொண்டு அவர்களோடு வாழ்க்கை நடத்துகிறார்கள். அன்னியன் என்பதெல்லாம் தாலி கழுத்தில் ஏறுவதற்கு முன்னால்தான். ஏன், அதுகூட இல்லை. முதல் பார்வையிலேயே மனத்துக்குப் பிடித்துவிட்டால் போதும்—எந்தப் பெண்ணுக்கும் ஒரு வரனைப் பார்த்து மனத்துக்குப் பிடித்து விட்டால் போதும், அவனை யுகயுகாந்திரமாகத் தனக்குக் கணவனாக இருப்பவன்போல் மனத்தில் எண்ணம் ஏற்பட்டு விடுகிறது" என்றான். அவன் தன் உள் அந்தரங்கத்தில் பட்ட உண்மையைத்தான் சொன்னான். ஆனால் அந்த வார்த்தைகளில் ஒரு அர்த்தமற்ற வெறுப்பு இருந்தது. உள்ளபடி உண்மையை உணரும் சக்தி அவனுக்கு இருந்தாலும் சுயநலத்தில் எழுந்த ஆசையும் மோகமும் ஏதேனும் சூழ்ச்சி செய்து தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் முயற்சியில்தான் அவனை ஈடுபடச் செய்தன. (அடுத்த இதழில் முடியும்)

# மன்னிப்பு

ருக்மணி

சீசாவிலிருந்து தேங்காயெண்ணெயை எடுத்துத் தடவிக் கொண்டு தலையை நன்றாக வாரித் தளர்த்தி முடிந்து கொண்டேன். சீப்பை அலமாரியில் வைத்து விட்டுக் கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக்கொண்டேன். என் நினைவு எங்கேயோ அலையத் தொடங்கியது. இப்போது நான் இருப்பது எனக்கே ரொம்ப ஆச்சரியமாகத் தோன்றிற்று.

கணவர் ஆபீஸிலிருந்து இன்னும் வரவில்லை. அடேயப்பா, உலகத்துப் பெண்கள் எல்லோருக்கும் தான் கணவன்மார்கள் இருக்கின்றனர். ஆனால் என் கரம் பற்றிய கணவர்...! சாட்சாத் தெய்வம் தான் அவர். நான் அவர் கையைப் பற்றக் கொஞ்சமும் அருகதையற்றவள்.

மனம் எங்கேயோ ஓடிக் கொண்டிருந்தது. பந்தயக் குதிரை வேகத்தில்! அப்பப்பா! உலகத்திலே சிங்கம் புலியைக் கூட அடக்கி ஆண்டு விடலாம். இந்த மனக் குரங்கு இருக்கிறதே! இதைக் குரங்கு என்று சொன்னால் மட்டும் போதாது. பேய், பூதம், பூகம்பம் என்று கூடச் சொல்லலாம். கூட என்ன, சாட்சாத் பூகம்பமே தான் இந்த மனமும். யாருக்கும், எதற்கும் எப்பொழுதும் பயப்படாதது இந்தப் பாழும் மனம்.

இப்போது நினைத்தாலும் கூட நெஞ்சு நடுங்குகிறது. எத்தனை வருஷங்கள் இந்த மனத்தால் நான் சித்திரவதைப் பட்டிருக்கிறேன்! அடேயப்பா! உடலைக் கொடுத்த கடவுள் உள்ளத்தை எதற்குத் தான் கொடுத்திருக்கிறானோ தெரியவில்லை! உள்ளத்தில் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கெல்லாம் உடல் நெளிந்து கொடுத்து வரவேண்டியிருக்கிறது.

* * *

எனக்கு நினைவு தெரிவதற்கும், என் மூத்த சகோதரிகளின் கல்யாணங்கள் முடிந்து அப்பா ஆண்டியாவதற்கும் சரியாக இருந்தது. என் காலம் வரும்போது குடும்பம் நடத்தவே தாளம் போடும்படியான நிலைமை வந்துவிட்டது. சிவந்த மேனியும், நல்ல வனப்புடனும்—அம்மா சொல்லுவது போல்—தள, தளவென்று வளர்ந்து மரம் போல் நின்று கொண்டிருந்தேன். என்னை யார் தலையிலாவது கட்டும் வரையில் அப்பாவுக்குச் சிறிது கூட நிம்மதியில்லாமலிருந்தது. அப்பா அடிக்கடி சொல்வார்: "நம் சீதாவுக்குக் கல்யாணம் நடந்துவிட்டது என்று யாராவது சொன்னால் போதும். நான் கவலையில்லாமல் இருப்பேன்" என்று அடிக்கடி பொருமுவார். நான்கு வருஷ காலங்கள் அப்பா நின்ற இடத்தில் நிற்காமல் வரனுக்காக அலைந்தார்.

கடைசியாக அந்த நாள் வரத்தான் செய்தது. இரண்டாந் தாரக்காரர் ஒருவர் என்னைக் குறைந்த மதிப்பிலே மணம் செய்து கொள்ள முன் வந்தார். அப்பாவின் பொறுப்பும் கழிந்தது. நானும் உலகத்துப் பெண்களைப் போல் கணவன் வீட்டுக்குச் சென்றேன்.

என் கணவர் இளம் தொந்தி விழுந்திருந்தாலும் கூடச் சுபாவத்தில் நல்ல அடக்கமும், பெருந்தன்மையும் உள்ளவராக இருந்தார். என் விஷயத்தில் கடுமையாக எதுவும் சொல்வதில்லை. அன்பாக நடத்தினார் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் பாழும் மனம் என்னுடன் ஒத்துழைக்க அடியோடு மறுத்துவிட்டது. மனதில் நிம்மதியே இல்லாமல் போய் விட்டது. நான் எதை வேண்டினேன், எதை விரும்பினேன் என்பது எனக்கே தெரியாமல் போய்விட்டது. சதா வேதனையும் துயரமும் மனதைச் சுற்றிச் சுற்றி அல்லற் படுத்திக் கொண்டிருந்தன. ஏதோ ஒரு விடுதலையை மனம் வேண்டி நின்றது. தாம்பத்திய வாழ்க்கை கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. மனம் சதா கற்பனையில் ஆழ்ந்து இறக்கை கட்டி ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தது.

பெண் எதற்காகப் புருஷனிடம் வாழ்க்கை நடத்த வேண்டும், எதற்காகக் கணவனுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று உள்ளம் அடிக்கடி அலறிற்று. உள்ளத்தின் இந்தக் கொந்தளிப்புக்குக் காரணமென்னவென்று என்னால் இயன்ற வரை அலசிப் பார்த்தேன். மனத்தை அடக்கிப் பார்த்தேன். ஒன்றும் பயன்படாமல் உள்ளம் தன் போக்கிலேயே பறந்து கொண்டிருந்தது. ஒருகால் தாம்பத்திய அமைப்பு சரியில்லை என்ற காரணம் உள்ளத்தின் அடித்தட்டில் ஊன்றிப் படிந்து விட்டதுதானோ என்னவோ!

பகவானே! தனிமை வேண்டும். விடுதலை வேண்டும். தனிமையில் இயற்கையைக் கண்டு ரசிக்கவேண்டும். சிறந்த கலா ரசிகையாக இருக்கவேண்டும் என்று மனம் எண்ணற்ற கோட்டைகள் கட்ட ஆரம்பித்து விட்டது. பொங்கும் என்

உள்ளத்தை அடக்க முடியாமல் சிரமப் பட்டேன். உள்ளம் சதா துள்ளி வேதனைப் பட்டுத் துடித்துக் கொண்டிருந்தது. கணவரிடமும் வெறுப்பு நாளுக்கு நாள் மேல் ஓங்கி வளர ஆரம்பித்து விட்டது.

இந்துப் பெண்கள் தங்கள் கணவன்மார் மேல் வெறுப்புக்கொண்டு உயிர் வாழமுடியுமா? எதற்காக இந்தப் புத்தி எனக்குத் தோன்றியதோ, தெரியவில்லை! இப்படியெல்லாம் தோன்றுவதால் பலன் என்ன கிடைக்கப்போகிறது? இந்து சமூகத்தில் புரட்சிப் பெண்ணாக இருந்து நிம்மதியாக வாழ முடியுமா, பகவானே! எனக்கு ஏன் இந்தப் புத்தி தோன்றவேண்டும்?

மனம் அலைமேல் அலையாகப் பாய்ந்து கொந்தளித்துக் கொண்டிருந்தது. என் மன நிலை கட்டுக்கடங்காமல் இருக்கும் தருணத்திலேதான் என் பள்ளித்தோழி சீதாவின் படம் சினிமா விளம்பரங்களுடன் வெளி வந்து என்னைத் திடுக்கிட வைத்தது. சீதா பால்ய விதவை. கணவர் இறந்தவுடன் கைக்குழந்தையும் இறந்து விட்டது. பிறந்த வீட்டிலேயே வசித்து வந்தாள். எப்படித்தான் இந்த ஊரில் இருந்துகொண்டு நல்ல பெயர் எடுக்கப் போகிறாளோ என்று நான் சில சமயம் வியப் படைவேன்—திகில் அடைவேன். திடுதிப்பென்று சினிமா விளம்பரங்களில் அவள் படம் வரவே எனக்குக் கிலேசமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன.

அவ்வளவுதான்; அன்றைய தினத்திலிருந்து என் நிம்மதி அடியோடு பாழாகி விட்டது. அவளைப்போல் சுயேச்சையாக நானும் விடுதலை வேண்டுமென்று துடித்தேன். நிமிஷத்திற்கு நிமிஷம் அதே ஏக்கத்தில் மனம் துடிக்க ஆரம்பித்து விட்டது. உணவும் செல்லவில்லை. உறக்கமும் கொள்ளவில்லை. உலகம் முழுதும் இன்பத்தில் ஆழ்ந்து நிற்கும்போது நான் மட்டும் துன்பப்படும்படியாக என் தலையில் ஈசன் எழுதிவிட்டானே! ஏன்? இன்பத்தின் சாயைகூட என் அருகில் வர மறுக்கிறதே? உள்ளத்தின் சுமை தாங்காமல் மறுகி நின்றேன். நான் என்ன பாவம் செய்தேனோ இப்படி நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியாமல் பேய் போல் மனம் அல்லல் படுவதற்கு!


என் கசந்த மனத்தையும் நடை உடை பாவனைகளையும் கவனித்த என் கணவரும் என்னிடமிருந்து வெகு தூரம் ஒதுங்கியே இருக்க ஆரம்பித்தார். எந்த விதத்தில் என் மனம் அல்லல்படுகிறதென்று அவருக்குத் தெரியாது. ஆனால் தன்னை எனக்குப் பிடிக்கவில்லை என்று மட்டும் எண்ணிக் கொண்டு என்னிடமிருந்து விலகியே இருந்து வந்தார். தம் வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூட என்னை அவர் கேட்டதுமில்லை; சொல்லியதுமில்லை.

அப்போதாவது, அவர் மனம் தெரிந்தவுடனாவது அவர் காலைப் பிடித்துக் கொண்டு, "என்னை ரட்சியுங்கள்! என் உள்ளத்திற்கு நிம்மதியைக் கொடுங்கள்! என்னைக் கைதூக்கி விடுங்கள்!" என்று கதறினேனா? அப்படிக் கதறியிருந்தாலும் என் வாழ்க்கை பயனுடையதாகி இருக்குமோ, என்னவோ!

அம்மாவுக்கு உடம்பு ரொம்பவும் அதிகமென்று ஊரிலிருந்து வந்த தந்தியைப் பார்த்ததும் ஒரு விதத்தில் எனக்கு ரொம்ப உற்சாகமாக இருந்தது. எப்படியாவது இவரிடமிருந்து விடுதலை பெற்றுப் போய்விடலாமல்லவா? பின்னால் வரும் பலனை நான் நினைத்துப் பார்க்கவே இல்லை. இந்த மட்டில் விடுதலை கிடைத்ததே என்ற மகிழ்ச்சியுடன் நான் ஊர் வந்து விட்டேன். நான் கணவர் வீட்டிலிருந்து ரொம்பவும் மதிப்புடன் வந்திருப்பதாக நினைத்து அப்பாவும் அம்மாவும் ரொம்பவும் சந்தோஷப் பட்டார்கள். பாவம்! என் மன நிலை எனக்கல்லவா தெரியும்?

நாட்கள் மாதங்களாகப் பெருகின. அம்மாவுக்கு உடம்பு பூரண குணமான பிறகு கூட நான் வாய் திறந்து 'திரும்ப ஊருக்குப் போகிறேன்' என்று ஒரு பேச்சுக் கூடத் தவறிப் பேசவில்லை. அவர்களுக்கு இது பெரிய ஆச்சரியமாகவும் புதிராகவும் இருந்தது. 'ஆயிற்று, இதோ போய்விடு

## சென்ஸஸ் ஹாஸ்யம் - 5



வான், அதோ போய்விடுவான்' என்று நினைத்தே மாதக் கணக்கில் மௌனமாக இருந்தனர். வருஷம் கடந்த பிறகு கூட நான் ஊருக்குப் போகிறேன் என்று வாய் திறந்து சொல்லவில்லை. அவர்கள் தயங்கித் திகைத்தனர். ஒருவிதத்தில் நான் என்ன நினைத்து விடுவேனோ என்ற பயம் வேறு! என் தாம்பத்யத்தில் என்ன புயலோ என்ற கிலி வேறு! இப்படியே அவர்கள் திகைத்து மறுகினர்.

இந்த இடைக் காலத்திலே என் நடை, உடை, எல்லாமே சிறிது சிறிதாக மாறத் தொடங்கியது. இயற்கையிலே கலை உள்ளம் படைத்தவளாதலால் சிறு குழந்தைகளுக்கு நடனம், சங்கீதம் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தேன். பத்திரிகைக்கு எழுத ஆரம்பித்தேன். பத்திரிகை சம்பந்தமான எத்தனையோ ஆசிரியர்களும் எழுத்தாளர்களும், சங்கீதக் குயில்களும் எனக்கு அறிமுகமாயினர். இந்தப் பெயருக்காக-கலை உள்ளம் படைத்தவள் என்பதற்காக-பெரிய உத்தியோகஸ்தர்களின் அறிமுகம் அதிகரித்துக்கொண்டு போயிற்று. ஆடம்பரமாக நானும் நண்பர்களைக் காண்பதற்காக அடிக்கடி வெளியில் போய் வர ஆரம்பித்தேன். உற்சாகம் எல்லை மீறிப் போய்விட்டது எனக்கு.

அப்பாவும், அம்மாவும் என்னை அடக்க வகை தெரியாமல் திகைத்து நின்றனர். கணவனிடம் போகும்படி மெதுவாக எனக்குப் புத்திமதி சொல்லிப் பார்த்தனர். நான் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. அவர்களால் இயன்றவரை சொல்லிப் பார்த்து அலுத்துப் போய்ப் பேசாம லிருந்து விட்டனர்.

ஊரிலோ என்னைப் பற்றியே அசாத்திய வம்பாக இருந்தது. எங்கு திரும்பினாலும் என்னைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. காதில் கேட்கமுடியாதபடி, அது மோசமாயிருந்தது. உயர ஏறுகிறவன் கீழிருக்கிறவனின் உதவியை எதிர்பார்த்து முடியுமா என்று என்னை நான் சமாதானப் படுத்திக்கொண்டு அசட்டையாக இருந்தேன். அப்பாவும் அம்மாவும் மனம் துடித்தனர்.



# சென்ஸஸ் ஹாஸ்யம் - 6




"அதிக சுகம் அதிக கஷ்டத்திற்கு அறிகுறி; எதையும் மிதமாக அனுபவிப்பது தான் சரி" என்று பெரியவர்கள் சொல்வது பொய்யே இல்லை என்பது என் அபிப்பிராயம். நான் உலகத்தை அலட்சியம் செய்து இறுமாந்து பொங்கிப் பூரித்து நிற்கும் தருணத்தில் பொறாமையால் விண்டு வெடித்து என்னைப் படுபாதாளத்தில் தள்ளுவதற்குக் குறி வைத்துக் கொண்டிருந்திருக்கின்றனர் போலும் என் விரோதிகள். மறைமுகமாக எனக்கு அழிவு தேடிக்கொண்டிருந்திருக்கின்றனர்.

அந்தக் காலத்திலே சினிமா நடிகர்களின் ஊழல்களைப் பற்றி வெளியிடுவதாகச் சொல்லிக் கொண்டு ஒரு பத்திரிகை தமிழ் நாட்டில் வெளி வந்துகொண்டிருந்தது. நமது ஜனங்களுக்குத்தான் ஒருவிதப் பைத்தியக்கார வெறி வந்துவிடுமல்லவா? எந்தப் புதிய விஷயமாக இருந்தாலும் சரி—அது நல்லதோ பொல்லாததோ—அதில் வீழ்ந்து ஒரேயடியாகத் தங்கள் மன ஆர்வத்தைத் தெரிவித்துக் கொண்டு விடவேண்டும். ஆகவே புது விஷயங்கள் கொண்ட இந்தப் பத்திரிகையை ஜனங்கள் அமோகமான ஆதரவு கொடுத்து வாங்கி வந்தனர். அந்தப் பத்திரிகையில் என்னைப் பற்றி என்ன வெல்லாமோ தாறுமாறாக வெளிவந்திருந்தது. இதற்கு உள்ளூர் நபர்களே ஏஜன்ஸி எடுத்து வீட்டுக்கு வீடு பிரதிகளைக் கொண்டு கொடுத்து விட்டுச் சென்றனர். என் வாழ்க்கையில் நடக்காதவை, நான் மனத்தால்கூட நினைக்காதவை, நான் செய்ததாக அதில் பிரசுரமாகி இருந்தது.

என் வயிறு குமுறிற்று; மனம் பதைத்தது. கண்கள் அருவியாக வடிந்து நீர் வறண்டுவிட்டது. பதறிப் பதறி மறுகிக் கிடந்தேன். கொலைக் கைதிபோல் தவித்தேன். என் அறையை விட்டு வெளி வருவதே நின்றுவிட்டது. வீட்டிலேயே நடமாடுவதை நிறுத்திக் கொண்டேன்.

அப்பாவும் அம்மாவும் இவைகளைத் தெரிந்து மனம் உருகினர். அவமானத்தால் அவர்கள் உடல் குன்றியது. தள்ளாத வயதில் என்னுடைய பெற்றோர் படும் இந்த மனக் கஷ்டம் என் உள்ளத்தைப் பெரிதும் வாட்டியது.

தெய்வம் விட்ட வழி நடக்கட்டும் என்று மௌனமாக எல்லாவற்றையும் சகித்துக் கொண்டேன். எத்தனையோ கேலிப் பேச்சுக்கள் காதில் விழுந்தன. பத்திரிகைகளில் எழுதுவதையும் விட்டு விட்டேன். வெளி உலகிற்கும் எனக்குமிருந்த எல்லாத் தொடர்புகளையும் நிறுத்திக் கொண்டேன். காவல் கைதி போல் வீட்டுக்குள்ளேயே புழுங்கிக் கிடந்தேன்.

பசுப்போன்ற குணமுடைய என் கணவரைப் புண்படச் செய்ததற்காக இது சரியான தண்டனை போலும். அவர் வெள்ளை உள்ளத்தின் வருத்தந்தான் என்னை இவ்வாறு சந்தி சிரிக்கும்படி வைத்திருக்கிறது. அந்த மகானுபாவனின் வயிற்றெரிச்சல் தான் என்னை வாட்டுகிறது! இவ்வளவு கேவலமாக வாழ்க்கை மாறிய பிறகு மறுபடி கண்ணியமான வாழ்க்கை நடத்த முடியுமா? இனி வாழ்வதை விட மரணம் தான் என்னை அன்புடன் வரவேற்கப் போகிறது. துன்பத்தின் சுமையால் வாடுவோருக்கு மரணத்தை விட இனிது வேறு என்ன இருக்கப் போகிறது? மரண தேவதையின் வாசலில் தான் எனக்கு நிம்மதி கிடைக்கப் போகிறது.

கணவரின் படத்தை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டேன். தலை தரையில் படும்படி விழுந்து நமஸ்கரித்தேன். குற்றமற்ற அப்பா அம்மாவின் படத்தையும் நமஸ்கரித்தேன். "அப்பா! நான், இன்னமும் இருந்து உங்களைத் துன்பப்படுத்தமாட்டேன். அப்பா! அம்மா! என்னை மன்னித்து விடுங்கள்!" என்று கண்ணீர் விட்டுக் கதறினேன். கண்ணீர் வறண்டு போகும் வரை கதறினேன்.

பிறகு என் புடவையின் ஒரு பாகத்தைக் கிழித்து உத்தரத்தில் இறுகக் கட்டினேன்; ஜன்னல் மேல் ஏறி நின்று சுருக்கில் தலையை மாட்டிக் கொண்டேன். பிறகு காலை ஜன்னலை விட்டு நகர்த்தி அந்தரத்தில் தொங்கினேன். கயிறு இறு

சிற்று. மூச்சு முட்டிற்று. பிறகு நான் எங்கேயோ சென்று கொண்டிருந்தேன்.

கண்ணனின் இன்னிசைக் குழல் எங்கோ கேட்டுக் கொண்டிருந்தது. கைகளை ஆட்டி அழைத்தான் சின்னஞ் சிறு கண்ணன், குழலை ஊதியபடி. கண்ணனின் குரல் வந்த திசையில் நான் போய்க் கொண்டிருந்தேன். முடிவு வரை சென்றேன். மயக்கம் வந்து தலை சுற்றியது. கண்ணனின் சின்னஞ் சிறு கரங்கள் ஆதரவுடன் தடவின. என் மெய் சிலிர்த்தது.

இறந்து போன பிறகு கூடவா அன்பு இந்தப் பாவிக்கு? தூக்குப் போட்டுக் கொண்டவரின் ஆத்மா அந்தரத்தில் சுற்றி அலைந்து கொண்டிருக்கு மென்று அல்லவா எல்லாரும் சொல்வார்கள்? எனக்கு இறந்த பிறகு கூட அன்பான வரவேற்பா? என்ன விந்தை!

நான் கண்களைத் திறந்து ஒருமுறை பார்த்தேன். என்னால் நம்பவே முடியவில்லை. கண்களை மூடித் திறந்து, மறுபடியும் பார்த்தேன். என்ன இது! நான் எங்கே இருக்கிறேன்? தெய்வ லோகத்திலா? அப்படியானால் என் கணவர் இங்கு எப்படி வந்தார் எனக்கு முன்னால்? நான் அவரை அலட்சியம் செய்து அவமதித்து அவர் மனசுக்குப் பல விதத்திலும் கஷ்டத்தைக் கொடுத்தேன். அதையெல்லாம் மறந்து அவர் எப்படி என்னை ஏற்றுக் கொண்டார்? நான்தான் அவரை நினைப்பதுகூட இல்லையே!

மறுபடி கண்ணைத் திறந்து பார்த்தேன். நிச்சயமாக இது தெய்வலோகமில்லைதான். நான் உத்தரத்தில் கட்டிய என் புடவையில் ஒரு பாகத்தில் கொஞ்சம் அறுபட்டு அப்படியே இருந்தது. மேலும் என் கணவர், அப்பா அம்மாவின் புகைப் படங்கள் நான் வைத்தபடியே இருந்தன. சாவதற்குக் காரணத்தைப் போலீஸ் புலிகளுக்குத் தெரிவிப்பதற்காக எழுதிய கடிதம் மேஜை மேல் விலாச மெழுதி வைத்தது வைத்த படியே இருந்தது. இதெல்லாம் எப்படி தெய்வ உலகமாக முடியும்? இல்லை. எல்லாமே கனவு என்று சொல்ல முடியுமா?

போதாததற்கு என் கணவர் மடியில் என் தலை வைக்கப்பட்டிருந்தது. அப்பாவும் அம்மாவும் கவலையுடன் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

கணவரைப் பார்த்ததும் லஜ்ஜையுடன் நான் எழுந்திருக்க முயன்றேன். அவர் என்னை அழுத்தி மடியில் வைத்தபடி "எனக்கு எல்லாம் தெரியும், சீதா! நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். மனக் குழப்பத்தில் நீ ஏதாவது எக்கச்சக்கமாகச் செய்து விடுவாயோ என்றுதான் ஓடி வந்தேன்!" என்றார்.

நான் கைகளைக் குவித்தபடி, "இந்தப் பாவியை..." என்று ஆரம்பிப்பதற்குள், "சேச்சே! பைத்தியமே! அதெல்லாம் ஒன்றுமில்லை. அதைப் பற்றியே இனிப் பேசாதே! இனிமேல் நமக்கு நல்ல காலம் தான்!" என்றார் ஆதரவு கலந்த குரலில்.

நான் வாய் திறக்கவில்லை. திறப்பதற்கு என்ன இருக்கிறது? மனம்தான் புலம்புகிறது. கண்களிலிருந்து கண்ணீர் இடைவிடாமல் பெருகிக் கொண்டிருந்தது.


• • •

என்னவோ நடந்தது நடந்துவிட்டது. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்யாமல் இந்த மட்டில் நல்ல காலம் பிறந்ததே என்றுதான் நான் மகிழ்ந்தேன். பழைய நினைவுகள் எல்லாமே சலனப் படம்தான். இல்லாவிடில் நேரம் சென்றது கூடத் தெரியாமல் யோசனையில் ஆழ்ந்திருப்பேனா?

"என்ன சீதா! பலமான யோசனை! பிரமித்துப் போய் உட்கார்ந்துவிட்டாயே! குழந்தைகளின் கூக்குரல் தெரு முனை வரை கூடக் கேட்கிறதே!" என்று சொல்லியபடி குழந்தை முரளியைக் கையில் தூக்கிக்கொண்டு அடுத்தவனை கண்ணனை நடத்தி அழைத்துக்கொண்டு ஆபீஸ் உடையுடன் வந்தார் என் கணவர்.

நான் ஆவலோடு கணவரிடமிருந்து குழந்தை முரளியை வாங்கிக் கொண்டு சமையற் கட்டுக்குள் சென்று விட்டேன்.

## சென்ஸஸ் ஹாஸ்யம் - 7




## அதி அற்புத ரகங்கள்!

புகழ் பெற்ற ஸ்விஸ் பாக்டரிகளில் தயாரானது ஒவ்வொன்றும் 5 வருஷ உத்திரவாத முள்ளவை

NO-81

Size 7½"

| | | | |
|---|---|---|---|
| 6 ஜுவல் க்ரோம் | 30/- | ரோல்டுகோல்டு | 33/- |
| 7 ,, க்ரோம் | 35/- | உயர் ரகம் | 38/- |
| 15 ,, க்ரோம் | 44/- | ரோல்டுகோல்டு | 48/- |

NO-82

Size 7½"

| | | | |
|---|---|---|---|
| 6 ஜுவல் க்ரோம் | 28/- | ரோல்டுகோல்டு | 33/- |
| 7 ,, க்ரோம் | 33/- | உயர் ரகம் | 36/- |
| 15 ,, க்ரோம் | 42/- | ரோல்டுகோல்டு | 45/- |

NO-83

Size 12"

| | | | |
|---|---|---|---|
| முழுவதும் ஜுவல் | 19/- | உயர் ரகம் | 21/- |
| ரேடியத்துடன் | 21/- | சென். செகண்டு | 23/- |
| ஸ்பெஷல் உயர்ந்த ரக மெஷின் | | | 27/- |

NO-84

Size 8½"

| | | | |
|---|---|---|---|
| 5 ஜுவல் க்ரோம் | 26/- | ரோல்டு கோல்டு | 32/- |
| 7 ,, க்ரோம் | 32/- | ரோல்டு கோல்டு | 36/- |
| 15 ,, க்ரோம் | 48/- | ரோல்டு கோல்டு | 58/- |

NO-85

Size 6½"

| | | | |
|---|---|---|---|
| 6 ஜுவல் க்ரோம் | 22/- | உயர் ரகம் | 25/- |
| 5 ,, ரோல்டு கோல்டு | 30/- | உயர் ரகம் | 33/- |
| 15 ,, க்ரோம் | 45/- | ரோல்டு கோல்டு | 55/- |
| டைம் பீஸ் | 20/- | உயர் ரகம் | 25/- |
| பாக்கெட் வாட்ச் | 12/- | உயர் ரகம் | 15/- |

தபாற் செலவு பிரத்தியேகம். இரண்டு கடிகாரங்கள் ஆர்டருக்கு தபாற் செலவு இலவசம்

**PIONEER WATCH Co**
POST BOX NO 11428 CALCUTTA



"கல்கி" ஆசிரியர் எழுதிய

# பார்த்திபன் கனவு

தமிழ் நாட்டுச் சரித்திரத்தின் மகோன்னத காலத்தை அற்புத மாக விளக்குகின்றது

விலை ரூ. 6-8-0

•

கவியரசர் டாகூர் காந்தி மகாத்மாவின் பெருமையையும் அவர் இந்தியாவுக்கு ஆற்றி யிருக்கும் அருந் தொண்டையும்

# மகாத்மா காந்தி

என்ற நூலில் வெகு அழகாக விளக்கி யிருக்கிறார்.

•

(விலை அணா எட்டு.)
(தபால் செலவு தனி)

•

சசிதேவி
எழுதிய

# விஜயா

முதலிய கதைகள்


விலை ரூ. 2-8-0
(தபால் செலவு தனி)

•

கிடைக்குமிடம்

**கல்கி காரியாலயம்**
சேப்பாக்கம் :: சென்னை


கவலைப்படும்
தாய்
மார்களுக்கு
ஓர் நற்செய்தி
எப்பொழுதும்
தவறாமல் கிடைக்கின்றது
OSTERMILK
ஆஸ்டர்மில்க்
சிறுகுழந்தைகளின் பால் உணவு
கிளாக்ஸோ லெபரெட்டரீஸ் (இந்தியா) லிட். பம்பாய். கல்கத்தா. மதராஸ்.
Copyright




" எனது ஹாஸ்டலில் ஞாயிற்றுக்கிழமையானது பாலுட்ரின் கிழமை........

ஒரு நாளைக்கு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை வீதம் 8 நாட்கள் உட்கொண்டால் மலேரியா குணமாகிவிடும். வாரம் ஒரு மாத்திரை சாப்பிட்டால் மலேரியா புதியதாக தொற்றிக் கொள்ளாமல் தடுக்கலாம். இது உண்மை என்பது எங்களுக்கெல்லாம் தெரியும். ஆனால் தேககம் நன்றாயிருக்கும் போது வாராவாரம் மாத்திரை சாப்பிடுவதை மறந்துவிடுவதும் இயல்பே. ஆகவே என் ஹாஸ்டலில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலையில் எல்லோருமாகச் சேர்ந்து பாலுட்ரின் சாப்பிடுவோம்."

ஒரு நாளைக்கு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை வீதம் (ஆகாரத்திற்குப் பிறகு தண்ணீருடன்) 8 நாட்கள் உட்கொண்டால் சாதாரணமாக மலேரியா பாதிப்பு அகலும். வாரம் ஒரு மாத்திரை வீதம் உட்கொள்ளுவதனால் புதியதாக மலேரியா தொத்துவதினின்றும் தடுக்கச் செய்யும். பின்னிட்டு நேரிடும் விரும்பத்தகாத கோளாறுகள் ஏதும் இல்லாதது 'பாலுட்ரின்'. பெரியவர்கள், வயோதிகர்கள், கர்ப்பிணி ஸ்திரீகள் யாவரும் முழு நம்பிக்கையுடன் உட்கொள்ளலாம். ஒரு மாத்திரை விலை ஒரு அணா. 'பாலுட்ரின்' 8 அணாவுக்கு 8 மாத்திரைகள் அடங்கிய தாள்களில் கிடைக்கும்.

# 'பாலுட்ரின்'

மலேரியாவுக்கு அற்புதமான ஔஷதம்

குணத்தின் ICI சின்னம்

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ்
(இந்தியா) லிமிடெட்,
கல்கத்தா பம்பாய் சென்னை கொச்சி
புதுடில்லி கான்பூர்.






Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk Madras

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

**மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்**

**5,00,000 நூற்கும் கதிர்கள் நம்பர் 80 வரை நூல்கள்**

**எங்களுடைய விசேஷமான நூல்கள்:** ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல் முறுக்கேற்றிய நூல்.

**நாங்கள் சப்ளை செய்வது:** கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங். கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற முறுக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள். எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்: **ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.**

## ஆஸ்துமா சளி ஒரே நாளில் அகற்றப்படுகிறது

மெண்டாகோ கண்டு பிடிக்கப்பட்டது முதல் மூச்சுத் திணற, சுவாச இழுப்புடனும் ஆஸ்துமாவினால் யாரும் அவதியுறவேண்டாம். மெண்டாகோவை உபயோகித்தால் இன்ஜெக்ஷனும் கெடுதலான புகையும் வேண்டாம். ருசியற்ற இரு மெண்டாகோ மாத்திரைகளை ஆகாரத்துடன் சாப்பிட்ட 10 நிமிஷத்தில் உடலிலுள்ள சளி உடனேயே கரைகிறது. சுலபமாக மூச்சு விடலாம். நரம்புகளுக்கு விச்ராந்தி சுவாசப் பைக்கு நன்மை. விருவிருப்பு ஏற்படும்.

### சிசுவைப்போல் அயர்ந்த நித்திரை

ஆஸ்துமாவினால் அவதியுறும் ஆயிரக்கணக்கானவர்கள் முதன் முதலில் மெண்டாகோவை உட்கொண்டு சுகமடைந்தனர். இரவே ஆழ்ந்த நித்திரை செய்தனர் என்றும் கூறுகின்றனர். திட ஆரோக்யமாகவும் 5 முதல் 10 வருஷம் இளமை அடைந்ததாகவும் உணர்ந்தனர். காரணம் ஆஸ்துமாவினால் ஏற்படும் இடையூறுகளை மெண்டாகோ இயற்கையில் தவிர்க்கிறது. (1) சளியையும் கோழையையும் இளக்குகிறது. (2) சுவாச மார்க்கத்திலுள்ள சிறு தசைகளுக்குப் பலம் அளிக்கிறது. (3) தேகத்திற்கு விருவிருப்பையும் ரத்தபுஷ்டியையும் அளிக்கிறது.

### ஐந்து வருஷமாக ஆஸ்துமா இல்லை

சுலபமாக சுவாசிக்க சக்தி அளித்து சுகமான நித்திரையையும் உண்டாக்குகிறது. ஆஸ்துமா அண்டாமல் தேகத்தைப் பலப்படுத்துகிறது. ஜே. ஆர். என்பவர் எழுதுகிறார்: "ஆஸ்துமாவினால் என் உயிரே போய் எடையிலும் 40 பவுண்டு குறைந்து விட்டது. இழுப்பு, இருமல், மாரடைப்பு, தூக்கமே இல்லை. சாவைத்தான் எதிர்பார்த்தேன். மெண்டாகோ முதல் இரவிலேயே எனக்கிருந்த பிடிப்பை விடுவித்தது. கடந்த இரண்டு வருஷங்களாக ஆஸ்துமாவே இல்லை. மிஸஸ். ஏ. டபிள்யூ எழுதுகிறார்: "கடந்த 25 வருஷமாக எனக்கு ஆஸ்துமா உண்டு. மெண்டாகோவை உபயோகித்ததிலிருந்து இரவில் நல்ல தூக்கம். பிற்பாடு ஆஸ்துமா உண்டாகவே இல்லை." மிஸஸ். ஜி. எ. வி. எழுதுகிறார்: "மெண்டாகோவைப் பற்றிக் கேள்விப்பட்ட நன்னாளை வாழ்த்துகிறேன். கடந்த 35 வருஷங்களாக இராத் தூக்கத்தையே அறியாத என்போன்ற ஏழை ஸ்திரீக்கு ஆண்டவன் அளித்த அமிர்தம் மெண்டாகோவே. தூக்கமின்றி ஆஸ்துமாவினால் உருகிப் போனேன். இந்த கஷ்டங்களை யெல்லாம் இப்போது மறந்துவிட வேண்டும் என்று உணருகிறேன்."

### கைமேல் காணும் பலன்

மெண்டாகோ முதல் வேளை சாப்பிட்டதுமே ரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ அதிவிரைவில் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்திரவாதத்தின் கீழ் மெண்டாகோ உபயோகித்துப் பார்த்து தீர்ப்பளியுங்கள். மெண்டாகோ சாப்பிட்ட பின் பூரண குணம் பெற்று, திருப்தி யளிக்காவிடில் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறுநாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிற தென்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

**Mendaco**

**மெண்டாகோ**

● ஆஸ்துமா ● மார்ச்சளி நோய் ● ஹே ஜுரம் இவற்றை நிவர்த்திக்கிறது

REGD. No. M 4392




HBP. 3-172-55 TM